தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக
நிருபர்கள் தேவை (Freelancer)
நமது ஆனந்த பாஸ்கர், பேப்பர்பாய் மற்றும் தமிழ்நாடுஇபேப்பர் நாளிதழ்களுக்கு பணியாற்ற தொண்டுள்ளம் கொண்ட தன்னார்வளர்கள் (freelancer) அடிப்படையில் நிருபர்களாக பணியாற்ற, மக்கள் தொடர்பு அதிகம் உள்ள பத்திரிக்கை துறையில் ஆர்வம் உள்ளவர்கள், தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக நிருபர்கள் தேவை.
NEWS
www.vaniks.com
No Monthly Commitments
9337501889, 7789941009

தமிழ்நாடு இபேப்பர்.காம்
www. tamilnaduepaper.com

MLM SOFTWARE Company
- Binary MLM Plan
- Single Leg MLM Plan
- Autopool MLM Plan
- Unilevel MLM Plan
- Matrix MLM Plan
- Stairstep MLM Plan
- Party MLM Plan
- Board MLM Plan
- Generation MLM Plan
PRICE STARTING Rs.9999/-
+91 98537 19337

CHENNAI | Volume- 3 | Issue:125 | 20-11-2025 | வியாழக்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி

## இன்றைய பஞ்சாங்கம்

20.11.2025 கார்த்திகை 4
வியாழக்கிழமை

சூரிய உதயம் 6.15

திதி:
இன்று பிற்பகல் 12.31 வரை
அமாவாசை பின்பு பிரதமை.

நட்சத்திரம்:
இன்று காலை 11.53 வரை
விசாகம் பின்பு அனுஷம்

யோகம் :
இன்று காலை 10.29 வரை
சோபனம் பின்பு அதிகண்டம்.

கரணம் :
இன்று பிற்பகல் 12.31 வரை
நாகவம் பின்பு கிம்ஸ்துக்கினம்.

அமிர்தாதி யோகம் :
இன்று முழுவதும் சித்த யோகம்.

சந்திராஷ்டமம்
இன்று காலை 11.53 வரை
ரேவதி பின்பு அசுவினி.

நல்ல நேரம்
காலை 10.45 – 11.45.
இராகு காலம்
பிற்பகல் 1.30 – 3.00.

எமகண்டம்
காலை 6.00 – 7.30.

குளிகை
காலை 9.00 – 10.30.

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# இந்தியா வேளாண் துறையில் புதிய பாதையில் பயணம்

## வேளாண் மாநாட்டில் பிரதமர் மோடி பேச்சு

**கோவை, நவ.20:**

இந்தியா வேளாண் துறையில் புதிய பாதையில் பயணிக்கத் தொடங்கி இருப்பதாக பிரதமர் மோடி தெரிவித்தார்.

கோவை கொடிசியா வளாகத்தில் தமிழ்நாடு இயற்கை வேளாண்மை கூட்டமைப்பு சார்பில் நடைபெறும் தென்னிந்திய இயற்கை வேளாண் மாநாட்டை பிரதமர் மோடி தொடங்கி வைத்தார். அவருக்கு தென்னிந்திய இயற்கை விவசாயிகள் கூட்டமைப்பு சார்பில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.





இதையடுத்து பிரதமர் மோடி, இயற்கை வேளாண்மை மாநாட்டை தொடங்கி வைத்து, ஆண்டுக்கு ரூ.6 ஆயிரம் உதவித்தொகை வழங்கும் 'பி.எம். கிசான்' திட்டத்தில் 21-வது தவணையாக 9 கோடி விவசாயிகளுக்கு ரூ.18 ஆயிரம் கோடி உதவித்தொகையை வழங்கி பேசினார். இந்த திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டை சேர்ந்த 21லட்சத்து 80 ஆயிரத்து 204 விவசாயிகள் பயன் அடைகின்றனர். இதில் கோவை மாவட்டத்தை சேர்ந்த 44 ஆயிரத்து 837 பேர் பயன்பெறுகிறார்கள்.

மேலும் அவர், இயற்கை விவசாயத்தில் சாதனை படைத்த விவசாயிகளுக்கு விருது வழங்கி கவுரவித்தார். அதன்பிறகு இயற்கை விவசாயம் செய்து வரும் விவசாயிகள் மற்றும் விஞ்ஞானிகளுடன் பிரதமர் மோடி கலந்துரையாடினார். அதைத்தொடர்ந்து அவர், இயற்கை விவசாயிகள் சார்பில் அமைக்கப்படும் அரங்குகளில் விவசாய உற்பத்தி பொருட்களை பார்வையிட்டார். இந்த மாநாட்டில் தமிழகம், கேரளா, ஆந்திரா, கர்நாடகா உள்ளிட்ட மாநிலங்களை சேர்ந்த ஏராளமான இயற்கை விவசாயிகள் கலந்து கொண்டனர்.

இந்நிலையில் இயற்கை வேளாண் மாநாட்டில் பிரதமர் மோடி உரையாற்றியதாவது:-

தாமதமாக வேளாண் மாநாட்டில் கலந்து கொண்டதற்காக வருத்தம் தெரிவித்துக் கொள்கிறேன். புட்டபர்த்தி விழாவுக்குச் சென்றதால் ஒரு மணி நேரம் தாமதமாகிவிட்டது. நான் மேடை ஏறும் போது பல விவசாயிகள் தங்களது மேல்துண்டை சுழற்றிக் கொண்டு இருந்தனர். பீகாரின் காற்று இங்கேயும் வீசுகிறதோ? என்று என் மனம் அலாவியது.

எனக்கு சிறு வயதில் தமிழ் சொல்லித் தரப்பட்டிருந்தால் உங்களுடன் தமிழில் பேசி மகிழ்ந்திருப்பேன். தென்னிந்திய இயற்கை வேளாண்மை மாநாட்டில் விவசாயிகள் பேசியதை என்னால் உணர்ந்துகொள்ள முடிந்தது. பி.ஆர். பாண்டியன் பேச்சு அருமையாக இருந்தது. தமிழ் புரியாவிட்டாலும் அவரது உணர்வு புரிய வைத்தது. பி.ஆர்.பாண்டியன் உரையை இந்தியில் எனக்கு அனுப்புங்கள்.

இயற்கை விவசாயம் என் இதயத்திற்கு நெருக்கமானது. இயற்கை வேளாண்மை என்பது இந்த நூற்றாண்டின் தேவை. அதிநவீன ரசாயனம் நம் மண்ணின் வளத்திற்கு கேடு. இதனால் செலவீனமும் அதிகரித்து வருகிறது. இந்தியா வேளாண் துறையில் புதிய பாதையில் பயணிக்கத் தொடங்கி இருக்கிறது. 11 ஆண்டுகளில் வேளாண் தொழில்களில் மாற்றம் ஏற்பட்டு இருக்கிறது. வர இருக்கும் ஆண்டுகளில் வேளாண் துறையில் மாறுதல்கள் இருக்கும். நம்முடைய சூப்பர் உணவுகள் உலகம் முழுவதும் சென்று சேர வேண்டும்.




தமிழ்நாட்டில் முருகப்பெருமானுக்கு தேனும் திணையும் படைக்கிறோம். தமிழ்நாட்டில் கம்பு, சாமை காலங்காலமாக உள்ளது. நமது உணவு பட்டியலில் சிறுதானியங்கள் உள்ளன. ஒரு பயிர் வேளாண்மையிலிருந்து ஊடுபயிர் சாகுபடி முறைக்கு விவசாயிகள் மாற வேண்டும். இந்த மாதிரியை இந்தியா முழுவதும் கொண்டு செல்ல வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

### பதாகைகளுடன் நின்ற சிறுமிகளுக்கு பிரதமர் மோடி வாழ்த்து

தான் பட்டம் பெறும்போது இந்தியா 2வது பொருளாதார வல்லரசாக மாறியிருக்கும். நான் ஓய்வு பெறும் போது உலகின் நம்பர்.1 பொருளாதார நாடாக இந்தியா இருக்கும் என பதாகையை சிறுமிகள் வைத்திருந்தனர்.

இந்நிலையில் உங்களது தொலைநோக்குப் பார்வைக்கு நன்றி என பதாகைகளுடன் நின்ற சிறுமிகளுக்கு பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்தார்.

## கோவையில் பிரதமர் மோடிக்கு உற்சாக வரவேற்பு

தென்னிந்திய இயற்கை விவசாயிகள் மாநாட்டை தொடங்கி வைக்க கோவை வந்த பிரதமர் மோடிக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. சாலையின் இருபுறங்களிலும் தொண்டர்களும் பொதுமக்களும் பெருமளவில் திரண்டு வந்து வரவேற்பு அளித்தனர்.

கோவை அவிநாசி சாலையில் அமைந்துள்ள கொடிசியா அரங்கில் நடைபெறும் தென்னிந்திய இயற்கை விவசாயிகள் மாநாட்டில் பங்கேற்க இன்று மதியம் கோவை வந்த பிரதமர் நரேந்திர மோடி-க்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.




கோவை விமான நிலையத்தில் தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி, மத்திய இணையமைச்சர் எல். முருகன், தமிழக அமைச்சர் மு.பெ.சாமிநாதன், அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி, அதிமுக முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி, தமாகா தலைவர் ஜி.கே.வாசன், பாஜக தமிழக முன்னாள் தலைவர் அண்ணாமலை, பாஜக தேசிய மகளிர் அணி தலைவர் வானதி சீனிவாசன் உள்ளிட்டோர் வரவேற்றனர்.

தொடர்ந்து விமான நிலையம் முதல் கொடிசியா கண்காட்சி அரங்கம் வரை சாலையின் இருபுறங்களிலும் தொண்டர்கள், பொதுமக்கள் அளித்த வரவேற்பை ஏற்றுக்கொண்டு அவர்களை நோக்கி கையசைத்த படியே பிரதமர் காரில் சென்றார்.

பின்னர், கொடிசியா வளாகத்தில் இயற்கை விவசாயிகள் மாநாடு 2025-ஐ பிரதமர் மோடி தொடங்கிவைத்தார். இயற்கை விவசாயிகள் உற்பத்தி செய்த விளை பொருட்களை பார்வையிட்ட பிரதமர், விவசாயிகளுடன் கலந்துரையாடினார்.

## காதலிக்க மறுத்ததால் 12ம் வகுப்பு மாணவியை வெட்டிக் கொன்ற இளைஞர் கைது

**ராமநாதபுரம், நவ.20:**

ராமேஸ்வரம்,சேராங்கோட்டை பகுதியைச் சேர்ந்த மாரியப்பன், கவிதா தம்பதியின் மகள் ஷாலினி, அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 12ம் வகுப்பு படித்து வந்தார். அதே ஊரைச் சேர்ந்த குப்புசாமி, முத்துமாரி தம்பதியின் மகன் முனிராஜ் (20) என்பவர் அந்த பெண்ணை கடந்த ஒரு வருடமாக ஒருதலைபட்சமாக காதலித்ததாகவும், இதற்கு அந்த மாணவி மறுப்பு தெரிவித்து வந்ததாகவும் கூறப்படுகிறது.

நேற்று காலையில் மாணவி ஷாலினி வழக்கம்போல் பள்ளிக்கு புறப்பட்டு சென்றுள்ளார். சாலையில் நடந்து சென்று கொண்டிருந்தபோது அவரை பின் தொடர்ந்து வந்த முனிராஜ் மீண்டும் காதலிப்பதாக கூறியுள்ளார். அந்த மாணவி காதலை ஏற்க மறுத்துள்ளார். எனினும் முனிராஜ் பின்தொடர்ந்து சென்றுள்ளார். மாணவி ஷாலினி தப்பி செல்ல முயன்றுள்ளார். இதனால் ஆத்திரமடைந்த முனிராஜ் தான் மறைத்து வைத்திருந்த கத்தியால் மாணவியை சரமாரியாக வெட்டியுள்ளார். இதில் படுகாயம் அடைந்த மாணவி மயங்கி கீழே விழுந்துள்ளார்.

இதைத் தொடர்ந்துமுனிராஜ் அங்கிருந்து தப்பி ஓடினார். உடனடியாக அருகில் இருந்தவர்கள் அவரை மீட்டு அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளனர். அவரை பரிசோதனை செய்த மருத்துவர்கள், மாணவி ஷாலினி ஏற்கனவே இறந்துவிட்டதாக தெரிவித்துள்ளனர். இதற்கிடையே தப்பி ஓடிய முனிராஜ் அருகில் இருந்த ராமேஸ்வரம் நகர் காவல்நிலை யத்திற்கு நேரடியாக சென்று சரணடைந்துள்ளார். மேலும், தன்னை காதலிக்க மறுத்ததால் மாணவியை கொலை செய்துவிட்டதாக காவல்நிலையத்தில் வாக்குமூலம் அளித்துள்ளார். பின்னர், முனிராஜை ராமநாதபுரம் காவல் நிலையத்திற்கு விசாரணைக்காக அழைத்து சென்றுள்ளனர்.

# நிதிஷ்குமார் தலைமையில் இன்று புதிய அரசு பதவி ஏற்பு

**பாட்னா, நவ.20:**

இன்று நிதிஷ்குமார் 10-வது முறையாக முதல்வராக பதவி ஏற்க உள்ளார். அவருடன் அமைச்சர்களும் பதவி ஏற்க இருக்கிறார்கள்.

பீகார் மாநிலத்தில் நடைபெற்ற சட்டசபை தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி அமோக வெற்றி பெற்றது. 243 இடங்களில் 202 இடங்களை கைப்பற்றியது. பாஜக 89 இடங்களில் வெற்றி பெற்றது. ஐக்கிய ஜனதா தளம் 85 இடங்களில் வெற்றி பெற்றது.

இந்த நிலையில் நிதிஷ்குமார் தலைமையில் நேற்று முன் தினம் அமைச்சரவை கூட்டம் நடந்தது. அதில் 17-வது சட்டசபையை கலைப்பதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதனையடுத்து முதலமைச்சர் பதவியை நிதிஷ்குமார் ராஜினாமா செய்தார். அதன் பிறகு கவர்னர் ஆரிப் முகமது கானை நிதிஷ்குமார் சந்தித்து ராஜினாமா கடிதத்தை அளித்தார். அப்போது புதிய அரசு பதவி ஏற்கும் வரை முதல்வராக நீடிக்க வேண்டும் என்று கவர்னர் கேட்டக் கொண்டதற்கு நிதிஷ்குமார் இசைவு தெரிவித்தார்.

இந்த நிலையில், பாஜக மற்றும் ஐக்கிய ஜனதா தளத்தின் சட்டமன்ற உறுப்பினர்களின் கூட்டம் தனித்தனியாக இன்று காலை பாட்னாவில் நடைபெற்றது. அப்போது அமைச்சரவையில் இடம்பெறுபவர்களின் பெயர்களை அந்தந்தக் கட்சிக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

இதனிடையே ஐக்கிய ஜனதா தள சட்டமன்ற கட்சித் தலைவராக நிதிஷ் குமார் தேர்வு செய்யப்பட்டார். அதன்பின்னர் பிற்பகலில் தேசிய ஜனநாயக கூட்டணி எம்.எல்.ஏ.க்கள் கூட்டம் கூடுகிறது. இந்த கூட்டதிலும் நிதிஷ்குமார் தலைவராக தேர்வு செய்யப்படுவார்.

இதன் பின்னர் நேற்று மாலை நிதிஷ்குமார் கவர்னரை நேரில் சந்தித்து தனக்கு ஆதரவு அளித்த எம்.எல்.ஏ.-க்களின் கடிதத்தை வழங்கி, ஆட்சி அமைக்க உரிமை கோரவுள்ளார். இதனையடுத்து புதிய அரசு அமைக்க நிதிஷ்குமாருக்கு கவர்னர் அழைப்பு விடுப்பார்.

பாட்னாவில் உள்ள காந்தி மைதானத்தில் இன்று காலை நடைபெறும் பதவியேற்பு விழாவில் நிதீஷ் குமார் 10-வது முறையாக முதல்வராகப் பதவியேற்கவுள்ளார். அப்போது சில அமைச்சர்களும் பதவி ஏற்கிறார்கள்.

இந்த நிகழ்வில் பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித்ஷா, பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், சிராக் பாஸ்வான், உ.பி. முதல்வர் யோகி ஆதித்யநாத் மற்றும் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் ஆட்சி செய்யும் மாநிலங்களின் முதல்வர்கள் பங்கேற்கிறார்கள்.

இந்த முறை துணை முதல்வராக பா.ஜ.க.வைச் சேர்ந்த இருவர் பதவியேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பதவி ஏற்பு விழா நடைபெறும் காந்தி மைதானத்தில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

### யாருக்கு எந்தெந்த துறைகள்? தீவிர ஆலோசனை

முதல்வராக நிதீஷ் குமார் நாளை காலை பதவியேற்கவுள்ள நிலையில், அமைச்சரவையில் துறைகள் ஒதுக்கீடு குறித்து பாஜக மற்றும் ஐக்கிய ஜனதா தளக் கட்சிகளின் தலைவர்கள் முக்கிய ஆலோசனையில் ஈடுபட்டுள்ளனர்

அமைச்சரவையில் பாஜகவுக்கு 16 இடங்கள், ஐக்கிய ஜனதா தளத்துக்கு முதல்வர் பதவி உள்பட 15 இடங்கள், சிராக் பாஸ்வான் கட்சிக்கு 3 இடங்கள், மற்ற இரு கட்சிகளுக்கு தலா ஒரு இடங்கள் ஒதுக்க முடிவெடுக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனிடையே, உள்துறை மற்றும் கல்வித்துறையைக் கைப்பற்ற பாஜக மற்றும் ஐக்கிய ஜனதா தளத்துக்கு இடையே போட்டி நிலவுவதாகவும், இரு கட்சிகளின் தலைவர்களும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. மேலும், சிராக் பாஸ்வான் கட்சியும் சில முக்கிய துறைகளைக் கோரி வருகின்றது.

சட்டசபை தலைவருக்கான போட்டியில் பாஜகவின் பிரேம் குமார் மற்றும் ஐக்கிய ஜனதா தளத்தின் விஜய் சௌத்ரி ஆகியோர் உள்ளனர்.

ADVERTISING
FOR ALL TYPES OF NOTICE ADS
- Public Notice
- Legal Notice
- Tender Notice
- Society Notice
- Loss of Share
- Merger
- Acquisition
- AFR, UFR, etc.
for just Rs. 249/- only in Daily Print Paper
ஆனந்த பாஸ்கர்
9337501889, 7789941009
Email: anandabhaskarnews@gmail.com

SEND AN EMAIL WITH Hi TO tamilnaduepaper@gmail.com
RECEIVE OUR DAILY NEWSPAPERS & MAGAZINES

## திருக்குறள் குறள்-445

சூழ்வார்கண் ணாக ஒழுகலான் மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்



தக்க வழிகளை ஆராய்ந்து கூறும் அறிஞரையே உலகம் கண்ணாகக் கொண்டு நடத்தலால், மன்னவனும் அத்தகையாரைக் ஆராய்ந்து நட்புக்கொள்ள வேண்டும்.

## சிந்திக்க ஒரு நொடி



காஃபி டீ குடிப்பதில் இருக்கும் நிதானத்தை பிரச்சினை வரும் சமயத்தில் காட்டினால் பிரச்சினைகள் தானாகவே சரியாகி விடும்

**ராஜகோபாலன்.J**
சென்னை 18

## கார்த்திகை மாதம் அமாவாசையை முன்னிட்டு அன்னதானம் வழங்குதல்



கடலூர் மாவட்டம் புவனகிரி ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் கார்த்திகை மாத அமாவாசையை முன்னிட்டு 200 நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. உபயதாரர் ஆர்ய வைஸ்ய சமாஜம் புவனகிரி. **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## ஸ்ரீமாரியம்மனுக்கு ஊஞ்சல் உற்சவ நிகழ்வு



போச்சம்பள்ளி, வடமலம்பட்டி சர்வலிங்கேஸ்வரர் ஆலயத்தில் அமாவாசையை முன்னிட்டு ஸ்ரீமாரியம்மனுக்கு ஊஞ்சல் உற்சவ நிகழ்வு நடைபெற்றது.

## போராட்டம் நடத்தியவர்களுக்கு அதிமுக ஆதரவு



கரூர் மாவட்டம், வெண்ணைமலை மற்றும் இதர பகுதிகளில் உள்ள இனாம் வகைப்பாட்டு நிலங்கள் தொடர்பான பிரச்சனையில் போராட்டம் நடத்தியவர்களுக்கு அதிமுக மாவட்ட செயலாளர் எம்ஆர் விஜயபாஸ்கர் ஆதரவு தெரிவித்தார்.

## கூட்டுறவு சங்கங்களுக்கு சான்றிதழ்



விழுப்புரம் கரும்பு விவசாயிகள் திருமண மண்டபத்தில் நேற்று நவம்பர் 19 நடைபெற்ற கூட்டுறவு வார விழாவில் சிறப்பாக சேவை புரிந்த பல்வேறு கூட்டுறவு சங்கங்களுக்கு சான்றிதழ்களும் மற்றும் சுய உதவி குழுக்களுக்கு நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டது இந்நிகழ்வில் பொன்முடி எம்எல்ஏ மஸ்தான் எம்எல்ஏ கலந்துகொண்டு விழாவை சிறப்பித்தனர்

# திருக்கடையூர் ஸ்ரீ அமிர்தகடேஸ்வரர் திருக்கோயிலில் கார்த்திகை முதற் சோமவாரம் 1,008 சங்காபிஷேகம்

### தருமபுரம் ஆதீனம் கலந்து கொண்டு வழிபட்டார்



**மயிலாடுதுறை நவ,20:** மயிலாடுதுறை மாவட்டம் திருக்கடையூர் அமிர்தகடேஸ்வரர் கோயிலில் கார்த்திகை மாத முதல் சோம வாரத்தையொட்டி 1,008 சங்காபிஷேகம் திங்கள்கிழமை நடைபெற்றது.

திருக்கடையூரில் தருமபுரம் ஆதீனத்துக்கு சொந்தமான அமிர்தகடேஸ்வரர் கோயில் உள்ளது. ஆயுள் விருத்திக்காக உக்ரத சாந்தி, சஷ்டியப்த பூர்த்தி, பீமரதசாந்தி, சதாபிஷேகம் மற்றும் சிறப்பு யாக பூஜைகள் நடைபெற்று வருகின்றன

இக்கோயிலில் கார்த்திகை மாதம் முதல் சோமவாரத்தையொட்டி யாக சாலையில் 1,008 சங்குகளில் புனித நீர் ஊற்றி சிவாச்சாரியர்கள் வேத மந்திரங்கள் முழங்க மேள தாளத்துடன் கோயில் உட்பிரகாரத்தில் வலம் வந்து அபிராமி அம்மன், அமிர்தகடேஸ்வரர் சுவாமிக்கு தீபாராதனை நடைபெற்றது.

தொடர்ந்து விநாயகர், சோமாஸ்கந்தர், சுப்பிரமணியர், அம்பாள், சண்டிகேஸ்வரர் ஆகிய பஞ்ச மூர்த்திகள் பல்வேறு வண்ண மலர்களால் அலங்காரம் செய்யப்பட்டு வீதியுலா நடைபெற்றது.

இதில் தருமபுரம் ஆதீனம் 27-ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் கலந்து கொண்டு சுவாமிகளை வழிபட்டு, கோ பூஜை, கஜ பூஜை மற்றும் அசுவ பூஜை செய்து வழிபட்டார்.

தம்பிரான் கட்டளை சுவாமிகள், கோயில் கண்காணிப்பாளர் மணி, உள்துறை செயலாளர் விருதகிரி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## உலகத் தரத்திலான நீச்சல் குளம் திறப்பு



சென்னை வண்டலூரை அடுத்துள்ள மேலக்கோட்டையூரில் தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழக வளாகத்தில் ரூ.5 கோடி மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள உலகத் தரத்திலான நீச்சல் குளம் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

## புத்தக திருவிழாவில் கலைநிகழ்ச்சிகள்




விருதுநகர் 4வது புத்தக திருவிழாவில் கலைநிகழ்ச்சிகள் நடந்தன.

## புத்தகத்திருவிழாவில் போட்டிகளில் வென்றவர்களுக்கு பரிசுகள்



விருதுநகர் புத்தகத்திருவிழாவில் ஐந்தாம் நாள் போட்டிகளில் வென்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன

## உக்கல் அருள்மிகு மடாவளம் ஸ்ரீகாமாட்சி அம்பாள் கோயிலில் மகா ஆரத்தி தரிசனம்



**செய்யாறு, நவ.20:** செய்யாறு அடுத்த உக்கல் அருள்மிகு மடாவளம் ஸ்ரீகாமாட்சி அம்பாள் கோயிலில் நேற்று மகா ஆரத்தி பூஜை நடைபெற்றது.

நேற்று யாக வேள்வி பூஜையினை ஆலய குரு சங்கர் குருஜி நடத்தினார். அதனைத் தொடர்ந்து கலச புறப்பாடு நிகழ்வும், மூலவரான அம்பாளுக்கு சிறப்பு அபிஷேகம் நடைபெற்றது.

பின்னர் சிறப்பு அலங்காரத்தில் அம்பாள் அருள்பாலித்தார். அதனைத் தொடர்ந்து நடைபெற்ற மகா ஆரத்தி தரிசன நிகழ்வில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

## டிச. 6ல் நடக்கும் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் குறித்து கலெக்டர் தலைமையில் ஆய்வுக் கூட்டம்



ஈரோடு வேளாளர் பொறியியல் மற்றும் தொழில் நுட்பக்கல்லூரியில் டிச. 6ல் நடக்கும் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் குறித்து கலெக்டர் கந்தசாமிதலைமையில் ஆய்வுக் கூட்டம் நடந்தது.

## மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான தங்கும் இல்லம்



நீலகிரி மாவட்டத்தில் முதல் முறையாக திறக்கப்பட்ட மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான தங்கும் இல்லத்தினை, ஆ.ராசா எம்.பி., அரசு தலைமைக்கொறடா ராமச்சந்திரன், கலெக்டர் லட்சுமி பவ்யா பார்வையிட்டனர்.

## மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்பு சக்கரம் பொருத்திய ஸ்கூட்டம்



**விழுப்புரம், நவ.20:** விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் விழுப்புரம் ஆட்சியர் ஷேக் அப்துல் ரகுமான் தலைமையில் நேற்று நவம்பர் 19 மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்பு சக்கரம் பொருத்திய ஸ்கூட்டரை லட்சுமணன் எம் எல் ஏ வழங்கினார். உடன் மாநில ஆதிதிராவிடர் நலத்துறை இணை செயலாளர் புஷ்பராஜ் மற்றும் திமுக கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்,

## வீடூர் அணை நிரம்பியதால் பாசனத்திற்கு தண்ணீர் திறப்பு



**விழுப்புரம், நவ.20:** விழுப்புரம் மாவட்டம் மயிலம் சட்டமன்றத் தொகுதி மயிலம் ஒன்றியத்தில் உள்ள வீடூர் அணை நிரம்பியதால் நேற்று நவம்பர் 19 விழுப்புரம் ஆட்சித் தலைவர் ஷேக் அப்துல் ரகுமான் அணையில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறந்து வைத்தார் இந்நிகழ்வில் மஸ்தான் எம்எல்ஏ மயிலம் ஒன்றிய பெருந்தலைவர் யோகேஸ்வரி மணிமாறன் மயிலம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மாசிலாமணி மற்றும் திமுக கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

## எஸ்ஐஆர் படிவங்கள் பதிவேற்றம் செய்யும் பணி



உதகை நகராட்சி கார்டன் மந்துபகுதியில் எஸ்ஐஆர் பணிகள் குறித்து தோடர் கலாச்சார நடனம் ஆடி வாக்காளர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

## தீரன் சின்னமலை மணிமண்டபத்தில் அமைச்சர்கள்



மொடக்குறிச்சி வட்டம், அரச்சலூர் ஓடாநிலையில் உள்ள தீரன் சின்னமலை மணிமண்டபத்தில் அமைந்துள்ள அவரது திருவுருவச்சிலையினை அமைச்சர்கள் முத்துசாமி, சுவாமிநாதன் பார்வையிட்டனர்.

## உளுந்தூர்பேட்டையில் ஜப்பான் ஷிட்டோரியூ கராத்தே டோ இந்தியா அமைப்பு சார்பில் மாநில அளவிலான கராத்தே போட்டி



கராத்தே போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு கேடயம் வழங்கும் நடிகர் ரியாஸ் கான்; அருகில் அகில இந்திய தலைவர் ரமேஷ்.

**கள்ளக்குறிச்சி, நவ.20:** கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டையில் ஜப்பான் ஷிட்டோரியூ கராத்தே டோ இந்தியா அமைப்பு சார்பில் மாநில அளவிலான கராத்தே போட்டிகள் நேற்று சிறப்பாக நடைபெற்றன. அகில இந்திய தலைவர் ரமேஷ் தலைமையில் போட்டிகள் துவக்கப்பட்டன. மாவட்ட தலைவர் கராத்தே செங்குட்டுவன் வரவேற்றார். முன்னாள் பேரூராட்சி தலைவர் ஜெயசங்கர், மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் டேனியல்ராஜ், இன்ஸ்பெக்டர் ஷாகுல் அமீது, ஸ்ரீ சாரதா ஆசிரமம் யத்திஸ்வரி ஆத்ம விகாசப்ரியா அம்பா உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் இருந்து நூற்றுக்கணக்கான சிறுவர்கள் மற்றும் மாணவர்கள் பங்கேற்று திறமைகளை வெளிப்படுத்தினர்.

வெற்றி பெற்ற போட்டியாளர்களுக்கு திரைப்பட நடிகர் ரியாஸ் கான் மற்றும் உளுந்தூர்பேட்டை எம்எல்ஏ மணிக்கண்ணன் கோப்பைகள் மற்றும் சான்றிதழ்களை வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் அறங்காவல் குழு தலைவர் செல்லையா, மூத்த வழக்கறிஞர் ராவணன், நகர மன்ற உறுப்பினர்கள் மாலதி இராமலிங்கம், கனகவள்ளி தேசிங்கு, செல்வகுமாரி ரமேஷ்பாபு, மனோபாலன், சிவசங்கரி சந்திரகுமார், மருத்துவர் ரிஸ்வான் மற்றும் மாநில அளவிலான கராத்தே பிளாக் பெல்ட் வீரர்கள் பலர் கலந்து கொண்டனர்.

காலை முதல் மாலை வரை நீடித்த இந்த போட்டியை ஏராளமான பொதுமக்கள் மற்றும் பெற்றோர் பார்வையிட்டு சிறப்பித்தனர்.

## அரிய பக்கவாத பாதிப்பிலிருந்து இளைஞர் மீட்பு

**சென்னை, நவ.20:**

மூளை, இதயம், கால் ஆகிய மூன்று உறுப்புகளில் ஒரே நேரத்தில் ஏற்பட்ட இரத்த உறைவுக் கட்டிகளால் பாதிக்கப்பட்ட 29 வயது இளைஞர் ஒருவர், சென்னை வடபழனி சிம்ஸ் மருத்துவமனையில் வெற்றிகரமாக சிகிச்சையளிக்கப்பட்டு காப்பாற்றப்பட்டுள்ளார். ஏபிஎல்ஏ என்ற தன்னுடல் எதிர்ப்பு பாதிப்பு உள்ள இந்த இளைஞருக்கு 2022-ல் முதல் முறையாக பக்கவாதம் ஏற்பட்டது.

மருந்துகளை குறுகிய காலம் நிறுத்தியதால் இரண்டாவது முறையாக மேலும் தீவிரமான பக்கவாதம் ஏற்பட்டது. பேச்சுக் குளறுதல் போன்ற அறிகுறிகளை கவனித்த அவர் உடனடியாக மருத்துவமனைக்கு விரைந்து வந்தார். டாக்டர் பிரபாஷ் பிரபாகரன், டாக்டர் விவேக் ஐயர், டாக்டர் ரிதேஷ் ஆர். நாயர், டாக்டர் எஸ். செல்வின் ஆகியோர் அடங்கிய மருத்துவக் குழு, காலில் அறுவை சிகிச்சை செய்தது. அதே நேரத்தில் மூளை மற்றும் இதயத்தில் உள்ள கட்டிகளைக் கரைக்க மருந்துகள் வழங்கப் பட்டன. இந்தியாவில் ஆண்டுதோறும் 16 லட்சம் பேருக்கு பக்கவாதம் ஏற்படுவதாக மருத்துவர்கள் தெரிவித்தனர். குறிப்பாக 40 வயதிற்குக் குறைவானவர்களிடையே பக்கவாதம் அதிகரித்து வருவது கவலையளிக்கிறது

## நவ. 23-ல் பராமரிப்புப் பணிக்காக 49 மின்சார ரயில்கள் ரத்து!

**சென்னை, நவ.20:**

சென்னை - அரக்கோணம் இடையே உள்ள திருநின்றவூர் ரயில் நிலையப் பணிமனையில் பராமரிப்புப் பணிகள் நடைபெறவுள்ளதால், வரும் நவம்பர் 23 அன்று(சனிக்கிழமை) 49 புறநகர் ரயில்கள் முழுமையாக ரத்து செய்யப்படவுள்ளன.

இதுகுறித்துச் சென்னை ரயில்வே கோட்டம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், நவ.23 காலை 7 மணி முதல்பிற்பகல்3.40மணிவரை திருநின்றவூர் பணிமனையில் பராமரிப்புப் பணிகள் நடைபெறவுள்ளதால், அந்த நேரத்தில் அந்த வழித்தடத்தில் இயக்கப்படும் 49 மின்சார ரயில்கள் ரத்து செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சிறப்பு ரயில்கள் இயக்கம் எனினும், பயணிகளின் வசதிக்காக அதே நாளில் (நவ.23) காலை 6.30 மணி முதல் 11 மணி வரை சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்திலிருந்து அரக்கோணம், திருத்தணி, ஆவடி ஆகிய பகுதிகளுக்கு இடையே 17 பயணிகள் சிறப்பு ரயில்கள் குறிப்பிட்ட நேரங்களில் இயக்கப்படவுள்ளன என்றும் ரயில்வே நிர்வாகம் தெரிவித்துள்ளது.

## எஸ்ஐஆர்: சென்னையில் நவ. 25 வரை வாக்காளர் உதவி மையங்கள் செயல்படும்

**சென்னை, நவ.20:**

2026 பொதுத்தேர்தலுக்கான வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் நடைபெற்று வருவதையொட்டி, வாக்காளர்களின் சந்தேகங்களைத் தீர்க்கச் சென்னையில் செவ்வாயன்று (நவ.18) முதல் நவம்பர் 25-ஆம் தேதி வரை வாக்காளர் உதவி மையங்கள் செயல்படும் என சென்னை மாநகராட்சி ஆணையர் குமரகுருபரன் அறிவித்துள்ளார்.

மாநகராட்சிக்கு உட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளிலும் உள்ள 947 வாக்குச்சாவடி மையங்களில் இந்த உதவி மையங்கள் காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை செயல்படும். இந்த மையங்களில் வாக்காளர்க ளுக்குக் கணக்கீட்டுப் படிவங்களைப் பூர்த்தி செய்வதற்கான வழிகாட்டுதல்கள் வழங்கப்படும். மேலும், வாக்காளர்கள் தங்களது பெயர் 2005-ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலில் இடம் பெற்ற விவரங்களையும் சரிபார்க்கலாம். மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளி களுக்குத் துணையாக ஒருவர் வரலாம். இந்தப் பணிகள் வெற்றிபெற, அங்கீ கரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் வாக்குச்சாவடி நிலை முகவர்கள் முக்கியப் பங்காற்ற வேண்டும் என்றும், அவர்கள் தினந்தோறும் அதிகபட்சம் 50 நிரப்பப்பட்ட படிவங்களைச் சமர்ப்பிக்க அனுமதிக்கப்படுவர் என்றும் மாநகராட்சித் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையே, சேப்பாக்கம் சட்ட மன்றத் தொகுதியில் பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களைச் சரிபார்த்து, வாக்குச்சாவடி அலுவலர் செயலியில் பதிவேற்றம் செய்வது குறித்த பயிற்சியை கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர் கௌசிக் ஆய்வு செய்தார்.

# ராமேசுவரம்–சென்னை வந்தே பாரத் ரயில் கால அட்டவணை வெளியீடு

**மதுரை, நவ.20:**



ராமேசுவரத்தில் இருந்து மதுரை வழியாக விரைவில் வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் ரெயில் இயக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு இருந்தது. இந்த நிலையில், ராமேசுவரம்-சென்னை வந்தே பாரத் ரெயில் காரைக்குடி வழியாக இயக்கப்படுவதாக தற்காலிக நேர அட்டவணை வெளியாகி உள்ளது.

இந்தகால அட்டவணைப்படி, இந்த ரெயில், ராமேசுவரத்தில் இருந்து மதியம் 2.30 மணிக்கு புறப்படுகிறது. ராமநாதபுரத்தில் இருந்து மாலை 3.15 மணிக்கும், சிவகங்கையில் இருந்து மாலை 4.10 மணிக்கும், காரைக்குடியில் இருந்து மாலை 4.40 மணிக்கும், புதுக்கோட்டையில் இருந்து மாலை 5.10 மணிக்கும், திருச்சியில் இருந்து மாலை 6.10 மணிக்கும், விழுப்புரத்தில் இருந்து இரவு 8.15 மணிக்கும், தாம்பரத்தில் இருந்து இரவு 9.40 மணிக்கும் புறப்பட்டு இரவு 10.20 மணிக்கு சென்னை சென்றடைகிறது.

இதேபோன்று மறுமார்க்கத்தில் இந்த ரெயில் சென்னையில் இருந்து அதிகாலை 5.30 மணிக்கு புறப்படுகிறது. தாம்பரத்தில் இருந்து அதிகாலை 5.52 மணிக்கும், விழுப்புரத்தில் இருந்து காலை 7.20 மணிக்கும், திருச்சியில் இருந்து காலை 9.20 மணிக்கும், புதுக்கோட்டையில் இருந்து காலை 10 மணிக்கும், காரைக்குடியில் இருந்து காலை 10.40 மணிக்கும், சிவகங்கையில் இருந்து நண்பகல் 11.15 மணிக்கும், ராமநாதபுரத்தில் இருந்து மதியம் 12.15 மணிக்கும் புறப்பட்டு மதியம் 1.15 மணிக்கு ராமேசுவரம் சென்றடைகிறது. இந்த ரெயில் புதன்கிழமை தவிர வாரத்தின் பிற நாட்களில் இயக்கப்பட உள்ளது. ரெயில் இயக்கப்பட்ட பின்னர், நிறுத்தப்படும் இடங்கள் மற்றும் நேரங்களில் மாற்றம் செய்யப்படலாம் என்று கூறப்படுகிறது.

# எஸ்.ஐ.ஆர். படிவங்கள் குறித்த சந்தேகங்களுக்கு உதவி எண்கள் அறிவிப்பு

**சென்னை, நவ.20:**

எஸ்.ஐ.ஆர். படிவங்கள் குறித்த சந்தேகங்களுக்கு உதவி எண்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

தமிழகம் முழுவதும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் (எஸ்.ஐ.ஆர்.) நடைபெற்று வருகிறது. இந்த பணிக்காக தமிழக தேர்தல் ஆணையம் தமிழகம் முழுவதும் சுமார் 77 ஆயிரம் அரசுப் பணியாளர்களை பி.எல்.ஓ.க்களாக (வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள்) நியமித்துள்ளது. வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் கணக்கெடுப்பு படிவத்தை வீடு, வீடாக சென்று வாக்காளர்களுக்கு வழங்கி வருகின்றனர்.

வாக்காளர்களுக்கு வழங்கப்படும் கணக்கீட்டுப் படிவத்தை பூர்த்தி செய்வதில் பல்வேறு சிரமங்கள் உள்ளதாக வாக்காளர்கள் குற்றம்சாட்டினார்கள். எனவே, கணக்கீட்டுப் படிவங்களில் வாக்காளர்களுக்கு ஏற்படும் சந்தேகங்களுக்கு தீர்வு காணவும், வாக்காளர்கள் மற்றும் அவர்களது உறவினர்களின் பெயர்கள் 2005-ம் ஆண்டு வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றுள்ளதா? என்ற விவரத்தை கண்டறியவும் வாக்காளர் உதவி மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த படிவங்கள் குறித்த சந்தேகங்களுக்கு 1950 என்ற உதவி எண்ணை தொடர்பு கொள்ள மாநில தேர்தல் ஆணையம் அறிவுறுத்தி உள்ளது.

மேலும் 9444123456 என்ற எண்ணில் வாட்ஸ் ஆப் மூலம் தொடர்பு கொண்டு சந்தேகங்களை கேட்டறிந்து கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கனமழை எதிரொலி; குற்றாலம் மெயின் அருவியில் 2-வது நாளாக குளிக்க தடை

**தென்காசி, நவ.20:**

கனமழை பெய்து வரும் நிலையில் குற்றாலம் அருவிகளுக்கு வரும் நீர்வரத்து அதிகரித்துள்ளது.

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை பெய்து வரும் நிலையில் மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளிலும் மழை பெய்து வருகிறது. தென்காசி மாவட்டத்தில் மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டி அமைந்துள்ள குற்றால அருவிகளான மெயின் அருவி, ஐந்தருவி, பழைய குற்றாலம், சிற்றருவி, புலி அருவி உள்ளிட்ட அனைத்து அருவிகளிலும் குளிப்பதற்காக சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரித்து காணப்படுகிறது. கார்த்திகை மாதம் பிறந்துள்ள நிலையில் சபரிமலை கோவிலுக்கு மாலை அணிந்து செல்லும் பக்தர்கள், குற்றாலம் வந்து அருவிகளில் நீராடி விட்டு செல்கின்றனர்.

இதனால் குற்றாலம் அருவிகளில் கூட்டம் நிரம்பி காணப்பட்டு வருகிறது. இந்நிலையில் தற்போது நெல்லை மற்றும் தென்காசி மாவட்டங்களில் பல்வேறு இடங்களில் கனமழை பெய்து வரும் நிலையில் குற்றாலம் அருவிகளுக்கு வரும் நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதனால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக குற்றாலம் மெயின் அருவியில் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து மழை பெய்து வரும் நிலையில் அருவிக்கு வரும் நீரின் அளவை அதிகாரிகள் கண்காணித்து வருகின்றனர். இந்நிலையில், கனமழையை முன்னிட்டு, குற்றாலம் மெயின் அருவியில் 2-வது நாளாக குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால், சபரிமலை செல்லும் அய்யப்ப பக்தர்கள் வேதனை அடைந்துள்ளனர்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389



## நலம் தரும் மருத்துவம்

## குளிர்காலத்தில் காது வலி வராமல் தடுக்கும் வழிமுறைகள்

குளிர்காலத்தின்போது மற்ற நபர்களை விட சைனஸ் பாதிப்பு இருக்கும் நபர்களுக்கு காது வலி ஏற்படும் வாய்ப்பு அதிகம்.

டிசம்பர் மாதத்தில்தான் பொதுவாக குளிர்காலம் தொடங்கும் என்றாலும், பருவமழைக்காலமான அக்டோபர் மாதம் முதல் பிப்ரவரி மாதம் வரை குளிர்ந்த காற்று வீசக்கூடும். அதனால் இந்த காலகட்டங்களில் பாதுகாப்பாக இருப்பது நல்லது. குறிப்பாக முதியவர்களுக்கும், குழந்தைகளுக்கும் காது வலி அடிக்கடி ஏற்படும். குளிர்காலத்தின் போது ஏற்படும் காது வலி இயல்பானது என பலர் நினைக்கின்றனர். ஆனால் உரிய நேரத்தில் கவனிக்கத் தவறினால், காதில் ஏற்படும் வலி அதிகரித்து பெரிய பிரச்சினைகளை ஏற்படுத்தக்கூடும். குளிர்காலத்தில் ஏன் காது வலி ஏற்படுகிறது? இதை சமாளிப்பது எப்படி? என்பதை பற்றி பார்ப்போம்.

குளிர்காலத்தின் போது காற்றில் வழக்கத்தை விட அதிகமாக தூசு நிறைந்து இருக்கும். இதன் காரணமாக சுவாசிக்கும் காற்று மூக்கு வழியாக நுழையும் போது அலர்ஜி ஏற்படுகிறது. குறிப்பாக சளி தொந்தரவு இருக்கும் நபர்களுக்கு யூஸ்டேஷியன் குழாயினுள் தூசு நுழைவதன் காரணமாக காது வலி இயல்பாகவே ஏற்படுகிறது. காதில் ஏற்படும் இந்த வலியின் காரணமாக முகத்துடன் இணைந்துள்ள நரம்பில் அழுத்தம் ஏற்பட்டு, அந்த நரம்பின் செயல்பாடு பாதிப்புக்குள்ளாகிறது. இதன் விளைவாக முகத்தில் உள்ள தசைகளின் செயல்பாடும் முடங்கிப்போய்விடுகிறது. இது 'பெல்ஸ் பாலஸி' என்று அழைக்கப்படுகிறது.

குளிர்காலத்தின்போது மற்ற நபர்களை விட சைனஸ் பாதிப்பு இருக்கும் நபர்களுக்கு காது வலி ஏற்படும் வாய்ப்பு அதிகம். குறைந்த ஈரப்பதம் கொண்ட வறண்ட குளிர் காற்று உள் நுழையும்போது மூக்குக்கு உள்ளே இருக்கும் சதைகள் வீங்கும். இதனால் அவர்களுக்கு காது வலி, தலை வலி போன்ற பாதிப்புகள் ஏற்படும்.

வீட்டில் இருக்கும் போது காதுகளை முழுவதுமாக மூடும் வகையில் குல்லா அணிந்து கொள்ளலாம். அது குளிர் காற்று காதுக்குள் செல்வதைத் தடுக்க உதவும். வீட்டை விட்டு வெளியே செல்லும்போது காதையும், மூக்கையும் சேர்த்து மூடும் வகையில் 'ஸ்கார்ப்' அணிந்து கொள்ளலாம். குளிர் காற்று காரணமாக ஏற்படும் காது வலிக்கு நீராவி பிடிப்பது நல்லது. அப்போது மூக்கினுள் ஈரப்பதம் நிறைந்த சூடான காற்று சென்று நிவாரணம் தேடித்தரும். அதன் பிறகும் காது வலி இருந்தால், மருத்துவரை அணுகி சிகிச்சை பெறுவது அவசியம்.

மூக்கையும், காதையும் இணைக்கும் ஒரு குழாய்தான் குளிர்காலத்தில் ஏற்படும் காது வலிக்கு முக்கிய காரணம். யூஸ்டேஷியன் குழாய் என்று அழைக்கப்படும் இந்தக் குழாய், குளிர்காலத்தின் போது மூக்கின் வழியாக உடலுக்குள் நுழையும் குறைந்த ஈரப்பதம் கொண்ட வறண்ட குளிர் காற்றின் காரணமாக மூடிக்கொள்கிறது. இந்தக்குழாய் மூடுவதன் விளைவாக, காது சவ்வுகள் இறுக்கமாகி காது வலி உண்டாகிறது.

## செரிமானத்தை மேம்படுத்தும் வெந்தயம்



வெந்தயத்தை இரவு முழுவதும் ஊறவைக்கும்போது அவை நீரில் கரையக்கூடிய ஊட்டச்சத்துக்களை வெளியிடும். காலையில் வெறும் வயிற்றில் அந்த நீரை குடித்தால் செரிமானத்தை மேம்படுத்தும். அசிடிட்டி பிரச்சினைக்கு நிவாரணம் அளிக்கும். வளர்சிதை மாற்றத்தை அதிகரிப்பதன் மூலம் உடல் எடையை சீராக நிர்வகிக்க உதவிடும். ரத்த சர்க்கரை அளவை நிலையாக பராமரிக்க வழிவகுக்கும் என்பதால் நீரிழிவு நோயாளிகள் உள்பட அனைவருக்கும் நன்மை பயக்கும். எனினும் மருத்துவரிடம் ஆலோசனை பெற்றே நீரிழிவு நோயாளிகள் இதனை பருக வேண்டும். வெந்தயத்தை நீரில் ஊறவைத்து தயாரிப்பது எளிதானது, தினசரி பருகுவதற்கு ஏற்றது.

# வங்கக்கடலில் 24ம் தேதி காற்றழுத்த தாழ்வு மண்டலம் உருவாக வாய்ப்பு

**சென்னை, நவ.20:**



வங்கக்கடலில் வரும் 24ம் தேதி காற்றழுத்த தாழ்வு மண்டலம் உருவாக வாய்ப்புள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தகவல் தெரிவித்துள்ளது. மேலும் இந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், அடுத்த 48 மணி நேரத்தில் தென்மேற்கு திசையில் நகர்ந்து மேலும் வலுவடையக் கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட அறிவிப்பில், "குமரிக்கடல் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளில் நிலவிய காற்றழுத்த தாழ்வு பகுதி, இன்று காலை 8.30 மணி அளவில் லட்சத்தீவு மற்றும் அதனை ஒட்டிய மாலத்தீவு பகுதிகளில் நிலவுகிறது. இது அடுத்த 24 மணி நேரத்தில், மேற்கு- வட மேற்கு திசையில் மெதுவாக நகரக்கூடும்.

தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. வருகின்ற 22-ஆம் தேதி வாக்கில், தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் ஒரு காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகக்கூடும். இது, அதற்கடுத்த 48 மணி நேரத்தில் மேற்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து மேலும் வலுப்பெறக்கூடும்.

இதன் காரணமாக தமிழகத்தில் இன்று ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். கன்னியாகுமரி, திருநெல்வேலி, தென்காசி, நாகப்பட்டினம், மயிலாடுதுறை மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் கனமழை பெய்யவாய்ப்புள்ளது. சென்னையை பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய கூடிய லேசான மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது" என்று அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

# நெல்லையப்பர் கோவிலில் ஐப்பசி திருக்கல்யாண திருவிழா: சுவாமி-அம்மன் மறுவீடு பட்டின பிரவேச வீதி உலா



திருநெல்வேலி, நவ.20:

நெல்லை டவுன் நெல்லையப்பர் கோவிலில் நடைபெறும்பல்வேறு விழாக்களில் ஐப்பசி மாதம் நடைபெறும் திருக்கல்யாண திருவிழா மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும். கோவிலில் இந்த ஆண்டு ஐப்பசி திருக்கல்யாண விழா கடந்த 4-ந்தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. விழா நாட்களில் தினமும் சுவாமி, அம்மனுக்கு காலையிலும், இரவிலும் சிறப்பு அபிஷேகம், அலங்கார தீபாராதனை நடந்தது. ஒவ்வொரு நாளும் அம்மன் ஒவ்வொரு வாகனத்தில் வீதி உலா சென்று பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

கடந்த 14-ந் தேதி நெல்லை டவுன் காட்சி மண்டபம் அருகே உள்ள கம்பாநதியில் தவம் இருந்த காந்திமதி அம்மனுக்கு சுவாமி நெல்லையப்பர் காட்சி மண்டபத்தில் ரிஷப வாகனத்தில் காட்சி கொடுத்தார்.

15-ந்தேதி அதிகாலையில் அம்மன் சன்னதியில் உள்ள ஆயிரங்கால் மண்டபத்தில் வைத்து சுவாமிக்கும்-அம்மனுக்கும் திருக்கல்யாண வைபவம் நடந்தது. தொடர்ந்து சுவாமி-அம்மன் பூம்பல்லக்கில் பட்டினப்பிரவேசம் வீதி உலா நடந்தது. அதன் பிறகு நேற்று முன்தினம் வரை அம்மன் ஊஞ்சல் திருவிழா நடந்தது.

இந்த நிலையில் திருக்கல்யாணம் வைபவம் நடந்து 5 நாட்களானதால் நேற்று சுவாமி, அம்மன் மறுவீடு பட்டின பிரவேசம் வீதி உலா நடந்தது. இதையொட்டி காலை 9 மணிக்கு சுவாமி, அம்மன் சிறப்பு அலங்காரத்தில் காட்சி அளித்தனர். இதைத் தொடர்ந்து பல்வேறு வகையான பலகாரங்கள் படைத்து சிறப்பு தீபாராதனை நடந்தது. காலை 10-30 மணிக்கு சுவாமியும், அம்மனும் அலங்கரிக்கப்பட்ட ரிஷப வாகனத்தில் எழுந்தருளி, மேளதாளம் முழங்க மறுவீடு பட்டின பிரவேசம் வீதி உலா நடந்தது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். வீதி உலா முடிந்து சுவாமியும் அம்மனும் கோவிலுக்கு வந்தவுடன் சிறப்பு தீபாராதனையுடன் ஐப்பசி திருக்கல்யாண திருவிழா நிறைவு பெற்றது.




## த.வெ.க. நிர்வாகிகள் மீது வழக்கு

சென்னை, நவ.20:

சென்னை திருவல்லிக்கேணி சுவாமி சிவானந்தா சாலையில் த.வெ.க.வினர் போராட்டம் நடத்தினர். இதில் பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த், தேர்தல் மேலாண்மை பிரிவு பொதுச் செயலாளர் ஆதவ் அர்ஜுனா உள்ளிட்ட நிர்வாகி கள் கலந்து கொண்டனர். போராட்டத்தின் போது சாலையின் நடுவே உள்ள இரும்பு தடுப்புகளும், செடிகளும் சேதப்படுத்தப்பட்டதாக குற்றம் சாட்டி திருவல்லிக்கேணி போலீசார் இரண்டு சட்டப்பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்துள்ளனர். இந்த வழக்கில் புஸ்ஸி ஆனந்த், ஆதவ் அர்ஜுனா உள்ளிட்ட நிர்வாகிகள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

## பள்ளிகளில் தண்ணீர் தேங்கக் கூடாது! அமைச்சர்

சென்னை, நவ.20:

பள்ளிகளில் தண்ணீர் தேங்கக் கூடாது என்றும், அப்படி தேங்கினால் உடனடியாக அகற்ற வேண்டும் என்றும் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் தெரிவித்து உள்ளார். மழை காலம் என்பதால் பள்ளிகளில் முன்னெச்சரிக்கை நட வடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளதாக அமைச் சர் கூறினார். பள்ளி வளா கத்தில் உள்ள கிணறு களை மூட வேண்டும் என்றும், மின்கசிவு இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என் றும் அவர் அறிவுறுத்தி யுள்ளார்.

## களப்பணிகளை முறைப்படுத்த நில அளவை அலுவலர்கள் கோரிக்கை

சென்னை, நவ.20:

களப் பணியாளர்களின் பணிச் சுமையைக் குறைத்து, நில அள வைத் துறையின் பணிகளை முறைப் படுத்த வலியுறுத்தி, தமிழ்நாடு நில அளவை அலுவலர்கள் ஒன்றிப்பு நவம்பர் 18 முதல் காலவரையற்ற வேலைநிறுத்தத்தைத் தொடங்கி யுள்ளது. இந்தப் போராட்டத்தில் 90 விழுக்காடு ஊழியர்கள் பங்கேற்று உள்ளதால், நில அளவைத் துறை யின் பணிகள் பெருமளவில் முடங்கி யுள்ளன. தரம் இறக்கப்பட்ட குறுவட்ட அளவர் பணியிடங்களை மீண்டும் உயர்த்தி வழங்குதல், ஒப்பந்த அடிப் படையில் லைசென்ஸ் சர்வே யர்களை நியமிக்கும் முறையைக் கைவிடுதல், வெளிமுகமை புல உதவியாளர் முறையைக் கைவிடு தல் உள்ளிட்ட 18 கோரிக்கைகளை வலியுறுத்தி இப்போராட்டம் நடை பெறுகிறது. இதுகுறித்து அமைப்பின் பொதுச் செயலாளர் அண்ணா. குபே ரன் பேசுகையில், இணையவழி உட்பிரிவு பட்டா மாறுதலில் களப் பணியாளர்களுக்கு மனித சக்திக்கு மீறிய பணிச்சுமை குறியீடு இருப்ப தால் அதனைக் குறைக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். மேலும், பதவி உயர்வு பெறத் தகுதியுள்ளவர்களுக்கு உடனடி யாகப் பதவி உயர்வு வழங்க வேண்டும் என்றும், அரசுப் பணியா ளர் தேர்வாணையம் நில அளவர் தேர்வு முடிவுகளை உடனடியாக வெளியிட்டு காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

## புதிய காட்சி அனுபவம்! மோட்டோரோலாவில் மினி எல்.இ.டி., டிவி!



புதுடெல்லி, நவ.20:

மேம்பட்ட ஒளிக்கலவை திறனைக் கொடுக்கும் வகையில் மினி எல்.இ.டி., என்ற புதிய ஸ்மார்ட் டிவியை மோட்டோரோலா நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது.

தற்போது நடைமுறையில் உள்ள எச்.டி., அல்ட்ரா எச்.டி., கியூ எல்.இ.டி., வரிசையில் இவற்றை விட மேம்படுத்தப்பட்ட பட அனுபவத்தைக் கொடுக்கும் வகையில் மினி எல்.இ.டி., வடிவமைக்கப்பட்டுள்ளது.

அதிகபட்ச துல்லியம் கொண்டதாகக் கருதப்படும் கியூ எல்.இ.டியை விட 30 மடங்கு துல்லியமான காட்சிகளை வழங்கக்கூடியது மினி எல்.இ.டி., இதனால், நேரலை விளையாட்டுகள், ரியாலிட்டி நிகழ்ச்சிகளை துல்லியமாகப் பார்க்க இயலும்.

திரை பிரகாசமாக இருக்கும் வகையில் 500-NITS திறன் கொடுக்கப்பட்டுள்ளது.

கேம் பிரியர்கள் விரும்பும் வகையிலான ஒளிக்கலவை உடையது. 20W ஒலி திறனைக் கொண்டது.

பிரைம், நெட்பிளிக்ஸ், ஹாட்ஸ்டார் போன்றவை உள்செயலிகளாகவே உள்ளன. 50 அங்குலம், 55 அங்குலம், 65 அங்குலம் என மூன்று அளவுகளில் தயாரிக்கப்பட்டுள்ளது.

50 அங்குலம் உடைய டிவியின் விலை ரூ. 36,999. மோட்டோரோலா கிளைகளில் மட்டுமின்றி, ஃபிளிப்கார்ட் இணைய விற்பனை தளத்திலும் கிடைக்கிறது.

## டிஜிட்டல் கைது; சென்னையை சேர்ந்த மூதாட்டியிடம் ரூ.24 லட்சம் மோசடி



சென்னை, நவ.20:

தொழில்நுட்ப வளர்ச்சியால் நமது வாழ்வை எளிமையாக்கும் வகையில் பல்வேறு நவீன கண்டுபிடிப்புகள் நாள்தோறும் பயன்பாட்டிற்கு வந்து கொண்டிருக்கின்றன.

அதே சமயம், தொழில்நுட்ப வளர்ச்சியை தவறான நோக்கத்துடன் பயன்படுத்தி, அப்பாவி மக்களிடம் இருந்து பணம் பறிக்கும் கும்பலும் மற்றொரு புறத்தில் செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது.

அந்த வகையில் மோசடிக்காரர்கள் பயன்படுத்தும் 'டிஜிட்டல் கைது' என்ற மோசடி வலையில் சிக்கி பலர் தங்கள் பணத்தையும், நிம்மதியையும் இழந்துள்ளனர். 'டிஜிட்டல் கைது' என்பது, மோசடி கும்பல் சி.பி.ஐ., அமலாக்கத்துறை, வருமான வரித்துறை அதிகாரிகளை போல பேசி பொதுமக்களை வீட்டில் சிறை பிடித்து பணம் பறிப்பதாகும். இதுபோன்ற டிஜிட்டல் கைது மோசடிகள் நாடு முழுவதும் நடந்து வருகின்றன. இந்த நிலையில், சென்னையை சேர்ந்த மூதாட்டியிடம், டிஜிட்டல் கைது என்ற பெயரில் ரூ.24 லட்சம் மோசடி செய்யப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தண்டையார்பேட்டையை சேர்ந்த 70 வயது மூதாட்டி சித்ரலேகா என்பவர் அளித்த புகாரின்பேரில், போலீசார் தீவிர விசாரணை நடத்தி கர்நாடகாவை சேர்ந்த தேஜாஸ், பிரணவ், முகமது சமீர் ஆகியோரை மைசூரில் கைது செய்து, சென்னைக்கு அழைத்து வந்தனர்.

அவர்களிடம் இருந்து 3 செல்போன்கள் மற்றும் வங்கி ஆவணங்கள் பறிமுதல் செய்யப்பட்ட நிலையில், மூவரும் சிறையில் அடைக்கப்பட்டனர்.

## ஐகோர்ட்டில் குற்றவாளி கூண்டில் நின்றதை வீடியோவாக எடுத்து ரீல்ஸ் வெளியிட்ட இளைஞர் கைது



விருதுநகர், நவ.20:

வீடியோ காட்சிகளை அடிப்படையாக வைத்து சென்னை பிராட்வே பகுதியை சேர்ந்த பரத்தை போலீசார் கைது செய்தனர்.

சென்னை ஐகோர்ட்டில் வழக்கு விசாரணையின்போது குற்றவாளி கூண்டில் நிற்பதையும், பின்னர் கோர்ட்டில் இருந்து வெளியே வருவதையும் வீடியோவாக எடுத்து, அதனை பரத் என்ற இளைஞர் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் ரீல்ஸ் வீடியோவாக வெளியிட்டு இருந்தார். அந்த வீடியோவை ஏராளமானோர் லைக் செய்த நிலையில், சமூக வலைதளங்களில் பரத்தின் வீடியோ வைரலாக பரவியது. இந்த வீடியோ விவகாரம் காவல்துறையின் கவனத்திற்கு சென்ற நிலையில், போலீசார் இது குறித்து விசாரணை நடத்தினர். இந்த விசாரணையில், வீடியோவில் இருக்கும் பரத் மீது சென்னை வடக்கு கடற்கரை காவல்நிலையத்தில் வழிப்பறி தொடர்பான வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், அந்த வழக்கின் விசாரணைக்காக கடந்த 16-ந்தேதி சென்னை ஐகோர்ட்டில் ஆஜரானபோது, அதனை வீடியோவாக எடுத்து இன்ஸ்டாகிராமில் பதிவிட்டுள்ளார் என்பதும் தெரியவந்தது.

இதனை தொடர்ந்து, அந்த வீடியோ காட்சிகளை அடிப்படையாக வைத்தும் சென்னை பிராட்வே பகுதியை சேர்ந்த பரத்தை போலீசார் கைது செய்தனர். மேலும், அந்த வீடியோவை எடுத்த உதவிய 17 வயது சிறுவனையும் போலீசார் கைது செய்துள்ளனர். இருவர் மீதும் வழக்குப்பதிவு செய்த போலீசார், இளைஞர் பரத்தை சிறையில் அடைத்ததோடு, 17 வயது சிறுவனை கூர்நோக்கு இல்லத்திற்கு அனுப்பி வைத்துள்ளனர்.

# இந்தியாவின் புதிய இ-பாஸ்போர்ட்: பாதுகாப்பு 'சிறப்பு' அம்சங்கள் இருக்கு!

நம்முடைய இந்தியன் பாஸ்போர்ட் இப்போ ஒரு பெரிய அப்டேட் ஆகி, அடுத்ததலைமுறை இ-பாஸ்போர்ட்டா வரப்போகுது! இதுல நிறைய பாதுகாப்பு விஷயங்கள் இதில் இருக்கு. நமது இமிகிரேஷன் வேலையை வேகமா முடிக்கிறதுக்காகவும், யாரும் ஈஸியா ஏமாத்த முடியாத அளவுக்கும் இதை ரெடி பண்ணியிருக்காங்க.

சிப் இருக்கு, சிம் கார்டு இல்ல! (முக்கிய பாதுகாப்பு அப்டேட்)


இந்த இ-பாஸ்போர்ட்ல ரொம்ப முக்கியமான விஷயம் என்னன்னா, இதுக்குள்ள ஒரு RFID சிப் (ரேடியோ சிப்) ஒட்டியிருப்பாங்க. கூடவே ஒரு சின்ன ஆண்டெனாவும் இருக்கும்.

டேட்டா பாதுகாப்பு: இந்தச் சிப்புக்குள்ள நம்ம போட்டோ, கைரேகைன்னு எல்லா பர்சனல் டீடெய்ல்ஸும் என்க்ரிப்ட் (மறைக்குறியீடு) பண்ணி, அதாவது, பூட்டி ரொம்ப சேஃபா இருக்கும். இதைத் திருத்தவோ, நகல் எடுக்கவோ முடியாது.

வேகமான செக்கிங்: ஏர்போர்ட் இமிகிரேஷன் கவுண்டர்ல நின்னு அதிக நேரம் வெயிட் பண்ண வேண்டாம். இந்தச் சிப்பை ஜஸ்ட் ஸ்கேன் பண்ணினாலே போதும், நம்ம டீடெய்ல்ஸ் உடனே தெரிஞ்சிடும். வேலை ரொம்ப ஃபாஸ்ட்டா முடிஞ்சிடும்.

மோசடிக்கு பூட்டு: ஒருத்தர் ரெண்டு பாஸ்போர்ட் வச்சிருக்காரான்னு மத்திய சர்வர்ல உடனே செக் பண்ணி கண்டுபிடிச்சிடுவாங்க. இதனால் பாஸ்போர்ட் மோசடிகள் ரொம்பவே குறையும்.

புதிய டிசைன்: பாஸ்போர்ட்டின் அட்டை மற்றும் பக்கங்கள்ல, சின்னச் சின்ன எழுத்துக்கள் (மைக்ரோலெட்டர்ஸ்) மற்றும் கலர் ஷேடிங்ஸ்னு கண்ணுக்குத் தெரியாத பல ஹைடெக் பாதுகாப்பு டிசைன்ஸ் சேர்த்திருக்காங்களாம்.




எப்போ இருந்து அமல்?

இனிமே புதுசா அப்ளை பண்ற எல்லாருக்கும் இந்தச் சிப் வச்ச இ-பாஸ்போர்ட் தான் கிடைக்கும்.

உங்ககிட்ட இருக்கிற பழைய பாஸ்போர்ட் காலாவதி (Expiry Date) ஆகுற வரைக்கும் தாராளமா யூஸ் பண்ணலாம். பயப்படத் தேவையில்லை.

தற்போது வரை, உள்நாட்டுலேயே 80 லட்சத்துக்கும் அதிகமான இ-பாஸ்போர்ட்டுகளும், வெளிநாட்டுத் தூதரகங்கள் வழியா 60,000-க்கும் மேலயும் வழங்கப்பட்டிருக்கு. (இதுதான் லேட்டஸ்ட் நிலவரம்!)

ஆனா, இந்திய அரசு ஒரு டார்கெட் வச்சிருக்கு ஜூன் 2035-க்குள்ள எல்லாமே இ-பாஸ்போர்ட்டா மாறிடணும்னு.

பாஸ்போர்ட் சேவா 2.0 (இப்போ எல்லாமே AI தான்!)

பாஸ்போர்ட் அப்ளை பண்ற நம்மளோட வேலையை சுலபமாக்க, பாஸ்போர்ட் சேவா திட்டம் 2.0-ஐ (PSP V2.0) ரொம்பவே அப்டேட் பண்ணியிருக்காங்க:

எளிதான வெரிஃபிகேஷன்: ஆதார், PAN, டிஜிலாக்கர்னு எல்லாத்தையும் இந்த சிஸ்டம் கூட லிங்க் பண்ணிக்கலாம். டாக்குமென்ட் வெரிஃபிகேஷன் ரொம்ப ஈஸியா முடிஞ்சிடும். பாதுகாப்பான ஸ்கேனிங்: பயோமெட்ரிக் மற்றும் ஃபேஷியல் ரெகக்னிஷன் சிஸ்டம்னு பாதுகாப்பு வசதிகள் வேற லெவல்ல இருக்கு.

ஊர் ஊரா சேவை: பாஸ்போர்ட் ஆபீஸ் போக முடியாத remote பகுதிகளுக்குச் சேவை செய்ய மொபைல் பாஸ்போர்ட் சேவா வேன்கள்கூட கிளம்பிடுச்சாம்!

தானியங்கி வேலைகள்: டாக்குமெண்ட்ஸ் வெரிஃபிகேஷனை (சரிபார்ப்பு) கம்ப்யூட்டரே தானா பார்த்துக்க **RPA (Robotic Process Automation)**னு ஒரு டெக்னாலஜி யூஸ் பண்றாங்க.

அதிகாரிகளுக்குக் கையெழுத்து போடுறதுக்குன்னு தனி மின்னணு பேட் (Electronic Pad) இருக்கு. அப்புறம், எல்லா பாஸ்போர்ட் வேலையும் எந்த ஸ்டேட்டஸ்ல இருக்குன்னு உடனுக்குடன் தெரிஞ்சுக்க ஒரு லைவ் டேஷ்போர்டும் இருக்கு.

எல்லா மொழியிலும் உதவி: உங்களுக்கு ஏதாவது சந்தேகம்னா கூப்பிட்டுப் பேச, 17 மொழிகளில் இயங்கும் தேசிய அழைப்பு மையம் (National Call Centre) ஒண்ணு இருக்கு. நம்ம மொழியில உதவி கேட்கலாம்!

மொத்தத்துல, பாஸ்போர்ட் வாங்குறதுல இருந்து, அதை வெச்சு வெளிநாட்டுக்குப் போறது வரைக்கும் எல்லாமே ரொம்ப ஃபாஸ்ட்டா, பாதுகாப்பா மாத்தப் போறாங்க!

## கமலா



கமலா கால் போன போக்கில் நடந்து கொண்டு இருந்தாள். மனம் ஒரு நிலையில் இல்லை. நடந்து நடந்து அவள் வந்து சேர்ந்தது பேருந்து நிலையம். ஒரு பேருந்து புறப்பட தயாராக இருந்தது. எந்த லட்சியமும் இல்லாமல் ஏறி உட்கார்ந்தாள். நடத்துனரிடம் அந்த பேருந்து செல்லும் இடத்திற்கு டிக்கெட் வாங்கி, ஜன்னலோர சீட்டில் உட்கார்ந்தாள். கண் மூடியதும் கடந்த கால நிகழ்வுகள் ஒன்றன்பின் ஒன்றாக நினைவாலையில் ஓடியது. கமலாவிற்கும் கணேசனுக்கும் ஒரே ஒரு மகள் கவிதா . சீராட்டி, பாராட்டி வளர்த்த அவள், கல்லூரி படிப்பை முடித்து, வேலை கிடைத்ததும், ஒரு பையனை அழைத்து வந்து அவனைத் தான் திருமணம் செய்வேன் என்று ஒற்றைக்காலில் நிற்க, இவர்களும் அவள் மனம் நோகக்கூடாது என்று திருமணம் செய்து வைத்தனர். ஒரு வருடத்திற்குள் குழந்தையும் பிறந்து விட்டது. ஆனால் அசோகனின் குணம் அதற்குள் அவர்களுக்குத் தெரிய ஆரம்பித்துவிட்டது. அவனுக்கு உருப்படியான வேலை ஒன்றும் கிடையாது. இவர்களுடைய சொத்துக்காகத் தான் மகளை ஆசை வார்த்தை கூறி மயக்கி இருக்கிறான் என்று பிறகு தான் தெரிந்தது. ஆனால் என்ன செய்வது? விதியை நொந்து வாழ்க்கையை ஓட்டினர். இந்த கவலையிலேயே கணேசனுக்கு நெஞ்சுவலி ஏற்பட்டு, சிறிது காலத்திற்குப் பின் இறந்தும் விட்டார். அதன் பிறகு அசோகனின் அட்டகாசம் ஆரம்பித்துவிட்டது. கேட்பார் யாரும் இல்லை. இருவரும் பெண்கள் என்பதால் வீட்டில் அவன் வைத்தது தான் சட்டம். சிறிது சிறிதாக குடிக்கும் அடிமையானான். மகள் தனியே கஷ்டப்படுவதைப் பார்த்து கமலா அவர்களை தன்னுடனே வந்து

தங்கும்படி கேட்டுக் கொண்டாள். கணேசனின் பென்சனும், கவிதாவின் சம்பளமும் கை கொடுத்தது.

இதற்கிடையில் மகளை துன்பப்படுத்தவும் ஆரம்பித்துவிட்டான். கமலா ஏதாவது தட்டி கேட்டால், அவளையும் துன்புறுத்த முற்பட்டான். ஆத்திரத்தை மகளிடமும் காட்டினான்.

நேற்று நடைபெற்ற ஒரு சம்பவம்தான் கமலாவை வீட்டை விட்டு வெளியேற வைத்தது. அன்றும் வழக்கம்போல் கமலா சமையலறையில் வேலையாக இருந்தாள். கவிதா கடைக்கு போயிருந்தாள். அசோகன் குளித்துக் கொண்டிருந்தான். திடீரென்று கவிதா துண்டு மறந்துவிட்டேன்! எடுத்துத்தா என்று குரல் வந்தது. கவிதா வெளியில் போயிருந்ததால், இரண்டு மூன்று முறை அவன் அழைத்த பிறகு, கமலா துண்டு எடுத்துக்கொண்டு போனாள்.

அசோகன் கதவைத் திறந்து கவிதா என்று நினைத்து கையைப் பிடித்து உள்ளே இழுத்து விட்டான். ஆனால் கமலா குரல் கொடுத்ததும் கையை விடுவித்து விட்டான். அதற்குள் கவிதா திரும்பி வந்து இதைப் பார்த்து விட்டாள். அவன் அப்படியே நடந்த விஷயத்தை திரித்து விட்டான். மகளும் அவள் நிலைப்பாட்டிற்காக, அம்மாவை கண்டபடி திட்டி விட்டாள். மனம் வருந்திய கமலா, அவர்கள் இருவரும் வெளியே சென்றவுடன் கட்டின சேலையும், சிறிது பணமும் ஆக கிளம்பி விட்டாள்.

பஸ் கடைசி நிறுத்தம் வந்தும் அவள் இறங்காததால், நடத்துனர் அவளிடம் வந்து இறங்குமாறு சொல்ல, என்ன செய்வது என்று தெரியாமலேயே பஸ்ஸை விட்டு இறங்கினாள். எதிரே குழந்தைகளுக்கான அனாதை ஆசிரம் தென்பட்டது. அங்கு சென்று அபயம்


கேட்டாள். அவர்களும் ஆதரவு அளித்தனர். இனி வாழ்க்கையில் எல்லாம் நலமே என்று எண்ணி விடியலை எதிர்பார்த்து காத்திருந்தாள். கூடிய விரைவில் அங்குள்ள குழந்தைகளுக்கு அன்பான தாதியாக மாறிவிட்டாள்.

சிறிது காலத்திற்கு பிறகு யார் மூலமோ மகளின் கணவன் இறந்த விபரமும், அவள் குழந்தையை வைத்து மிகவும் கஷ்டப்படுவதையும் அறிந்தாள். எதுவும் அவளுடைய மன உறுதியை கலைக்கவில்லை. அவள் உலகம் இனி இந்த குழந்தைகளுக்கானது. வாழ்க்கை இனி அவள் வழியில்.



-கோமளவல்லி
மும்பை

## "இரவு 11:30"



மொபைலில் தனக்கு பிடித்த பழைய பாடல்களை கேட்டு ரசித்துக் கொண்டிருந்தாள் மோகனா.

"ஆகாயத்தில்... தொட்டில்... கட்டும்... மங்கை.... உன்னைக்... கண்டால்" பாடல் திடீரென்று நின்று விட, ஒரு இன்கமிங் கால். எடுத்துப் பார்த்தாள்.

திவாகர். அவள் கணவன்.

"ம்...சொல்லுங்க" என்றாள்.

"மோகி... இன்னிக்கு ஃபேக்டரில கொஞ்சம் வேலை அதிகம்... அதான் லேட்.... இன்னும் பத்து நிமிஷத்தில் வந்திடுவேன்"

"ஹூம்...ஹூம்..." என்று செல்லமாய்ச் சிணுங்கியபடி, "ஓ.கே..ஐ யாம் வெய்ட்டிங்' என்றவாறே இணைப்பிலிருந்து வெளியேறினாள் மோகனா சரியாக 15 நிமிடங்களுக்குப் பிறகு, காலிங் பெல் ஒலிக்க, ஓடிப் போய் திறந்தாள். திவாகர்.

"போடா... ரொம்ப வெறுப்பேத்தறே" என்றபடி அவன் தோளைப் பற்றிக் கொண்டே உள்ளே வந்தவள், அவன் கையிலிருந்த லேப்டாப் பேக்கை வாங்கி டீபாயின் மீது வைத்தாள்.

அவனை காந்தப் பார்வை பார்த்தவாறே நிதானமாய் அவன் சட்டையை கழற்றி பக்கத்திலிருந்த ஷோபா மீது எறிந்தாள்.

"மோகி... ரொம்ப டயர்டா இருக்கு... நான் போய் ஒரு சின்னக் குளியல் போட்டுட்டு வந்துடறேன்... நீ டிபன் எடுத்து டைனிங் டேபிள் மேல வை!" சொல்லி விட்டு பாத்ரூம் நோக்கி நடந்தான் திவாகர்.

பாத்ரூமினுள் தண்ணீர் விழும் ஓசை பெரியதாக கேட்க, சமையலறையை நோக்கி நடந்தாள் மோகனா.

இப்போது அவள் மொபைல் "நானே வருவேன்... இங்கும்... அங்கும்" பாடியது.

டிபன் ஐட்டங்களை எடுத்து வந்து டைனிங் டேபிள் மீது அவள் வைத்த வினாடியில் மீண்டும் காலிங் பெல் ஒலித்தது.

நெற்றியைச் சுருக்கிக் கொண்டே போய் திறந்தாள்.

ஒரு இன்ஸ்பெக்டர். ஒரு கான்ஸ்டபிள்.

இன்ஸ்பெக்டர் தன் கையிலிருந்த மொபைலில் ஒரு போட்டோவைக் காட்டி, 'இவர் உங்கள் கணவரா மேடம்?" கேட்டார்.

"ஆமாம்... பாத்ரூம்ல குளிச்சிட்டிருக்கார்... என்ன வேணும் உங்களுக்கு?" கேட்டாள்.

இன்ஸ்பெக்டர் முகம் பேய் அறைந்தது போல் மாற, சட்டென்று திரும்பி கான்ஸ்டபிளைப் பார்த்தார்.

அந்த கான்ஸ்டபிள் தன் கையிலிருந்த மொபைலை மோகனாவிடம் நீட்டி, "இது உங்க கணவரோட மொபைலான்னு பாருங்க !"கேட்டார்.

"ஆமாம்... இது எப்படி உங்ககிட்ட வந்திச்சு?" குழப்பமானாள் மோகனா.

"மேடம்... கொஞ்சம் மனசைத் திடல் பண்ணிக்கங்க.. இப்ப ஒரு பதினஞ்சு நிமிஷம் முன்னாடி மெயின் ரோட்டுல உங்க கணவரோட காரும், ஒரு லாரியும் நேருக்கு நேர் மோதியதில் கார்.... அப்பளம் போல் நெறுங்கிடுச்சு !... அவர் ஸ்பாட்லியே இறந்துட்டார்" இன்ஸ்பெக்டர் தயங்கித் தயங்கிச் சொல்ல,

"நோ......" என்று அலறிய மோகனா, "பொய் சொல்லாதீங்க சார்... அவர் அப்பவே வந்துட்டாரு... பாத்ரூம்ல குளிச்சிட்டிருக்கார் !... பாருங்க அவரோட லேப்டாப்... அவரோட சட்டை கூட இங்கேதான் கிடக்குது" என்றபடி திரும்பி டீபாயையும், ஷோபாவையும் பார்த்து உறைந்து போனாள்.

இரண்டுமே அங்கே இல்லை.

உடனே வேக வேகமாய்ப் பாத்ரூம் கதவருகே சென்று, "என்னங்க... என்னங்க" அழைத்தாள்.

பதிலில்லை.

மெல்ல பாத்ரூம் கதவை, நிதானமாய்த் தள்ளினாள். அது திறந்து கொண்டது. உள்ளே.

அவரும் இல்லை.

தண்ணீர் கொட்டியதற்கான அடையாளமும் இல்லை.

தலை "கிறு... கிறு"வென்று சுற்ற, "தொப்"ன்று மயங்கி விழுந்தாள்.



-முகில் தினகரன்
கோயம்புத்தூர்.

# Boomer to Gen Z

பாகம் 6



வி.பிரபாவதி
மடிப்பாக்கம்.



"ஏம்மா கோமளா, நீ வேணா போய் குடித்தனம் போடறியா? பர்வதம் கேட்டாள்.

"நா எப்படிம்மா? இங்கயே நேக்கு பத்து கை வேணுமாயிருக்கு" என்றாள்.

ஸ்ரீஹரி சட்டம் படிக்க ஆசைப்பட்டான். வாசு எதானும் வேலைப் பார்த்துக் கொண்டு எம். காம். போஸ்டலில் படிப்பதாகச் சொன்னான்.

இந்தப் பேச்சு வார்த்தைகள் ஒரு பக்கம் நடந்து கொண்டிருந்தாலும் கோமதியின் மனதின் நெருடல் முள்ளாக குத்த ஆரம்பித்தது.

வரதனும் மாமனாரும் ஏதேனும் முடிவெடுக்கட்டும் என்று கோமளம் வேலைகளை கவனித்தாள்.

"ஹரி, இன்னிக்கு கொஞ்சம் நா சொன்னதப் பாரு. திக்கு திக்குனு இருக்கு" என்றாள்.

ஹரி வாசுவிடம் எதுவும் சொல்லவில்லை. குளித்து சந்தியாவந்தனம் முடித்து எங்கோ வெளியில் போவது போல் பஸ் ஸ்டாப் வரைக்கும் போனான்.

ஏதோ ஒரு கடையில் பேப்பர் படிப்பது போல் அமர்ந்தான். மாலதி வந்து நின்று கொண்டாள். சுற்றும் முற்றும் பார்த்த வண்ணம் இருந்தாள். பஸ் வந்ததும் ஏறிச் சென்றாள். இன்னும் ஒரு இரண்டு மூன்று பேர் டவுனுக்குச் சென்று படிக்கிறார்கள். அவர்கள் வேறு சப்ஜெக்ட் என்பதால் அதிகம் பேசுவதில்லை.

இப்போது சைக்கிளை எடுத்துக் கொண்டு குறுக்கு வழியில் சென்று டவுனில் பஸ்ஸுக்கு காத்திருந்தான். பஸ்ஸும் வந்துவிட்டது. ஆனால் மாலதி இறங்கவில்லை. திக்கென்றது ஸ்ரீஹரிக்கு. யாரிடம் கேட்பது? என்னவென்று கேட்பது? புரியாமல் தவித்தான். இடைப்பட்ட ஐந்து நிறுத்தங்களில் எங்கே என்று போய் தேடுவது? சைக்கிளை அழுத்தி பஸ் செல்லும் வழியிலேயே சென்றான். அடுத்த ஐயனார் கோவில் பஸ் ஸ்டாப்பில் பார்த்தான். எதுவும் புரியவில்லை. அடுத்து செல்லலானான். வழியில் அவன் கண்ட காட்சி! தலை சுற்றியது. ஒன்றரை கிலோமீட்டர் வரை வெறும் கருவை மரமும் பனை மரமும் இருக்கும் ரோட்டில் ஒரு மர நிழலில் அமர்ந்திருந்தாள். உடன் யாரவன்?

நெஞ்சு திக்கென்றது. சைக்கிளை நிறுத்திவிட்டு மெல்ல பின்னால் போய் நின்றான். இவன் நிழல் அவர்கள் முன்னால்! வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தார்கள் இருவரும். மாலதி திரும்பிப் பார்த்து அதிர்ந்தாள்.

"மாலுஊஊஊ, என்ன இது" அதிர்ந்து கத்தினான். அதற்குள் அந்த பையன் படுக்க வைத்திருந்த சைக்கிளை எடுத்துக் கொண்டு சிட்டாய் பறந்து விட்டான்.

ஹரி ஆடிப்போய்விட்டான். அம்மா எத்தனை துல்லியமாக கணித்திருக்கிறாள். தாய் அறியாத சூல் உண்டா? அவள் சொல்லும் போது கூட இவனுக்கு சற்று கோபமும் எரிச்சலும் வந்தது. தற்போது அது இரண்டுமே மாலதியின் மேல்!

"அண்ணா, வந்து வந்து... "சற்று நடுங்கினாள். ஹரி எதுவும் பேசவில்லை.

"ஏறு வண்டில" . போட்ட சத்தத்தில் சைக்கிளில் ஏறி அமர்ந்தாள். ஒரே அழுத்துதான்.

எங்கேயிருந்து அவ்வளவு தெம்பு வந்ததோ தெரியாது. வீட்டின் முன் சைக்கிளை நிறுத்தினான். அம்மா வாசலுக்கும் உள்ளுக்கும் பதட்டத்துடன் இருந்ததை பகவான் அறிவார்.

உள்ளே வந்த மாலதியை இழுத்துக் கொண்டு மேலண்ட உள்ளுக்கு அருகில் உள்ள ஸ்டோர் ரூமிற்கு கூட்டிச் சென்றான். வாசல் கதவை ஒருக்களித்து கரண்டிக் காம்பை சொருகிவிட்டு கோமளமும் வந்தாள்.

தோட்டத்திற்கு போய்விட்டு கிணற்றடியில் கால் அலம்பிக்கொண்டு ஹாலுக்கு வந்த கல்யாணி முற்றத்தின் கரையில் படுத்துக் கொண்டு தூக்கத்தைத் தொடர்ந்தாள்.

"கோமளம் ராத்திரிக்கு என்ன அரிசி உப்புமா பண்ணிடலாமா?" கேட்டுக் கொண்டே வந்த பர்வதம் கோமளத்தைக் காணாது வெளியே வந்தாள்.

கோடியாத்து குமாரவேல் மாட்டுப்பொண்ணு புள்ளப் பெத்து கொழந்தையோட வந்துருக்கா. பாக்கணும்னு சொன்னாள். அங்கதான் போயிருப்பாளோ? என்று நினைத்தாள்.

குமாரவேல் இவர்கள் பண்ணையில் வேலை பார்ப்பவர்களில் ஒருவன். ஹரி கோபத்தின் உச்சியில் இருந்தான். கோமளம் ஏதும் புரியாத நிலையில் இருந்தாள். அகப்பட்ட எலியைப் போல் இருந்தாள் மாலதி.

தொடரும்...

# 20 வகை பிரதோஷங்களும் அதன் பலன்களும்...

மொத்தம் 20 வகை பிரதோஷங்கள்

1. தினசரி பிரதோஷம்
2. பட்சப் பிரதோஷம்
3. மாசப் பிரதோஷம்
4. நட்சத்திரப் பிரதோஷம்
5. பூரண பிரதோஷம்
6. திவ்யப் பிரதோஷம்
7. தீபப் பிரதோஷம்
8. அபயப் பிரதோஷம் என்னும் சப்தரிஷி பிரதோஷம்
9. மகா பிரதோஷம்
10. உத்தம மகா பிரதோஷம்
11. ஏகாட்சர பிரதோஷம்
12. அர்த்தநாரி பிரதோஷம்
13. திரிகரண பிரதோஷம்
14. பிரம்மப் பிரதோஷம்
15. அட்சரப் பிரதோஷம்
16. கந்தப் பிரதோஷம்
17. சட்ஜ பிரபா பிரதோஷம்
18. அஷ்ட திக் பிரதோஷம்
19. நவக்கிரகப் பிரதோஷம்
20. துத்தப் பிரதோஷம்

### 1.தினசரி பிரதோஷம்

தினமும் பகலும், இரவும் சந்திக்கின்ற சந்தியா காலமாகிய மாலை 4.30 மணி முதல் 6.30 மணி வரை உள்ள காலமாகும். இந்த நேரத்தில் ஈசனைத் தரிசனம் செய்வது உத்தமம் ஆகும். நித்தியப்பிரதோஷத்தை யார் ஒருவர் ஐந்து வருடங்கள் முறையாகச் செய்கிறார்களோ அவர்களுக்கு "முக்தி" நிச்சயம் ஆகும் என்கிறது நமது சாஸ்திரம்.

### 2. பட்சப் பிரதோஷம்

அமாவாசைக்குப் பிறகான, சுக்லபட்சம் என்ற வளர் பிறை காலத்தில் 13-வது திதியாக வரும் "திரயோதசி" திதியே பட்சப் பிரதோஷம் ஆகும். இந்தத்திதியின் மாலை நேரத்தில் பட்சிலிங்க வழிபாடு [பறவையோடு உள்ள அது சம்பந்தப்பட்ட லிங்கம் மைலாப்பூர், மயிலாடு துறை போல்] செய்வது உத்தமம் ஆகும்.

### 3. மாசப் பிரதோஷம்

பவுர்ணமிக்குப் பிறகு வரும் கிருஷ்ணபட்சம் என்ற தேய்பிறை காலத்தில், 13-வது திதியாக வரும் "திரயோதசி" திதியே மாதப் பிரதோஷம் ஆகும். இந்த திதியின் மாலை நேரத்தில் "பாணலிங்க" வழிபாடு [பல்வேறு லிங்க வகைகளில் பான லிங்கம் ஒரு வகை] செய்வது உத்தம பலனைத் தரும்.

### 4. நட்சத்திரப் பிரதோஷம்

பிரதோஷ திதியாகிய "திரயோதசி திதி"யில் வரும் நட்சத்திரத்திற்கு உரிய ஈசனை பிரதோஷ நேரத்தில் வழிபடுவது நட்சத்திர பிரதோஷம் ஆகும்.

### 5. பூரண பிரதோஷம்

திரயோதசி திதியும், சதுர்த்தசி திதியும் சேராத திரயோதசி திதி மட்டும் உள்ள பிரதோஷம் பூரண பிரதோஷம் ஆகும். இந்தப் பிரதோஷத்தின் போது "சுயம்பு லிங்கத்தை"த் தரிசனம் செய்வது உத்தம பலனை தரும். பூரண பிரதோஷ வழிபாடு செய்பவர்கள் இரட்டைப் பலனை அடைவார்கள்.

### 6. திவ்யப் பிரதோஷம்

பிரதோஷ தினத்தன்று துவாதசியும், திரயோதசியும் சேர்ந்து வந்தாலோ அல்லது திரயோதசியும், சதுர்த்தசியும் சேர்ந்து வந்தாலோ அது "திவ்யப் பிரதோஷம்" ஆகும். இந்த நாளன்று மரகத லிங்கேஸ்வரருக்கு அபிஷேக ஆராதனை செய்தால் பூர்வஜென்ம வினை முழுவதும் நீங்கும்.

### 7. தீபப் பிரதோஷம்

பிரதோஷ தினமான திரயோதசி திதியில் தீப தானங்கள் செய்வது, ஈசனுடைய ஆலயங்களைத் தீபங்களால் அலங்கரித்து ஈசனை வழிபட சொந்த வீடு அமையும்.

### 8. அபயப் பிரதோஷம் என்னும் சப்தரிஷி பிரதோஷம்

வானத்தில் "வ" வடிவில் தெரியும் நட்சத்திர கூட்டங்களே, "சப்தரிஷி மண்டலம்" ஆகும். இது ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை, மாசி, பங்குனி மாதங்களில் வானில் தெளிவாகத் தெரியும்.

இந்த மாதங்களில் திரயோதசி திதியில் முறையாக பிரதோஷ வழிபாடு செய்து, சப்தரிஷி மண்டலத்தைத் தரிசித்து வழிபடுவதே அபயப் பிரதோஷம் என்னும் சப்தரிஷி பிரதோஷம் ஆகும். இந்த வழிபாட்டை செய்பவர்களுக்கும் ஈசன் தரம் பார்க்காது அருள் புரிவான்.

### 9. மகா பிரதோஷம்

ஈசன் விஷம் உண்ட நாள் கார்த்திகை மாதம், சனிக்கிழமை, திரயோதசி திதி ஆகும். எனவே சனிக்கிழமையும்,



திரயோதசி திதியும் சேர்ந்து வருகின்ற பிரதோஷம் "மகா பிரதோஷம்" ஆகும். இந்த மகா பிரதோஷத்து அன்று எமன் வழிபட்ட சுயம்பு லிங்க தரிசனம் செய்வது மிகவும் உத்தமம் ஆகும்.

குறிப்பாக திருக்கடையூர், சென்னை வேளச்சேரியில் உள்ள, "தண்டீசுவர ஆலயம்". திருச்சி, மண்ணச்சநல்லூர் அருகே உள்ள "திருப்பைஞ்ஞீலி" சிவ ஆலயம், குடவாசலில் இருந்து நன்னிலம் செல்லும் பாதையில் உள்ள "ஸ்ரீவாஞ்சியம்" சிவ ஆலயம், கும்ப கோணம் முதல் கதிராமங்கலம் சாலையில் உள்ள "திருக்கோடி காவல்" சிவ ஆலயம் ஆகியவை குறிப்பிடத்தக்கனவாகும். மாசி மாதம் வரும் மகா சிவராத்திரிக்கு முன்னால் வரும் பிரதோஷமும், "மகா பிரதோஷம்" எனப்படும்.

### 10. உத்தம மகா பிரதோஷம்

சிவபெருமான் விஷம் அருந்திய தினம் சனிக்கிழமையாகும். அந்தக் கிழமையில் வரும் பிரதோஷம் மிகவும் சிறப்பானதாகும். சித்திரை, வைகாசி, ஐப்பசி, கார்த்திகை ஆகிய மாதங்களில் வளர்பிறையில், சனிக்கிழமையில் திரயோதசி திதியன்று வரும் பிரதோஷம் உத்தம மகா பிரதோஷம் ஆகும். இது மிகவும் சிறப்பும் கீர்த்தியும் பெற்ற தினமாகும்.

### 11. ஏகாட்சர பிரதோஷம்

வருடத்தில் ஒரு முறை மட்டுமே வரும் மகா பிரதோஷத்தை 'ஏகாட்சர பிரதோஷம்' என்பர். அன்றைக்கு சிவாலயம் சென்று, 'ஓம்' என்ற பிரணவ மந்திரத்தை எத்தனை முறை ஓத முடியுமோ, அத்தனை முறை ஓதுங்கள். பின், விநாயகரையும் வழிபட்டு, ஏழை எளியவர்களுக்கு அன்னதானம் வழங்கினால் பல விதமான நன்மைகள் ஏற்படும்.

### 12. அர்த்தநாரி பிரதோஷம்

வருடத்தில் இரண்டு முறை மகாபிரதோஷம் வந்தால் அதற்கு அர்த்தநாரி பிரதோஷம் என்று பெயர். அந்த நாளில் சிவாலயம் சென்று வழிபட்டால், தடைப்பட்ட திருமணம் நடைபெறும். பிரிந்து வாழும் தம்பதி ஒன்று சேர்வார்கள்.

### 13. திரிகரண பிரதோஷம்

வருடத்துக்கு மூன்று முறை மகாபிரதோஷம் வந்தால் அது திரிகரண பிரதோஷம். இதை முறையாகக் கடைப்பிடித்தால் அஷ்ட லட்சுமிகளின் ஆசியும் அருளும் கிடைக்கும். பிரதோஷ வழிபாடு முடிந்ததும் அஷ்ட லட்சுமிகளுக்கும் பூஜை வழிபாடு செய்வது மிகவும் நல்லது.

### 14. பிரம்மப் பிரதோஷம்

ஒரு வருடத்தில் நான்கு மகா பிரதோஷம் வந்தால், அது பிரம்மப் பிரதோஷம். இந்தப் பிரதோஷ வழிபாட்டை முறையாகச் செய்தால் முன்ஜென்மப் பாவம் நீங்கி, தோஷம் நீங்கி நன்மைகளை அடையலாம்.

### 15. அட்சரப் பிரதோஷம்

வருடத்துக்கு ஐந்து முறை மகா பிரதோஷம் வந்தால் அது அட்சரப் பிரதோஷம். தாருகா வனத்து ரிஷிகள். 'நான்' என்ற அகந்தையில் ஈசனை எதிர்த்தனர். ஈசன், பிட்சாடனர் வேடத்தில் வந்து தாருகா வன ரிஷிகளுக்குப் பாடம் புகட்டினார். தவறை உணர்ந்த ரிஷிகள், இந்தப் பிரதோஷ விரதத்தை அனுஷ்டித்து பாவ விமோசனம் பெற்றனர்.

### 16. கந்தப் பிரதோஷம்

சனிக்கிழமையும், திரயோதசி திதியும், கிருத்திகை நட்சத்திரமும் சேர்ந்து வரும் பிரதோஷம் கந்தப் பிரதோஷம். இது முருகப் பெருமான் சூரசம்ஹாரத்துக்கு முன் வழிபட்ட பிரதோஷ வழிபாடு. இந்தப் பிரதோஷத்தில் முறையாக விரதம் இருந்தால் முருகன் அருள் கிட்டும்.

### 17. சட்ஜ பிரபா பிரதோஷம்

ஒரு வருடத்தில் ஏழு மகா பிரதோஷம் வந்தால் அது, 'சட்ஜ பிரபா பிரதோஷம்'. தேவகியும் வசு தேவரும் கம்சனால் சிறையிடப்பட்டனர். ஏழு குழந்தைகளைக் கம்சன் கொன்றான். எனவே, எட்டாவது குழந்தை பிறப்பதற்கு முன்பு ஒரு வருடத்தில் வரும் ஏழு மகா பிரதோஷத்தை முறையாக அவர்கள் அனுஷ்டித்ததால், கிருஷ்ணர் பிறந்தார். நாம் இந்த விரதத்தைக் கடைப்பிடித்தால் முற்பிறவி வினை நீங்கி பிறவிப் பெருங்கடலை எளிதில் கடக்கலாம்.

### 18. அஷ்ட திக் பிரதோஷம்

ஒரு வருடத்தில் எட்டு மகா பிரதோஷ வழிபாட்டை முறையாகக் கடைப்பிடித்தால், அஷ்ட திக்குப் பாலகர்களும் மகிழ்ந்து நீடித்த செல்வம், புகழ், கீர்த்தி ஆகியவற்றைத் தருவார்கள்.

### 19. நவக்கிரகப் பிரதோஷம்

ஒரு வருடத்தில் ஒன்பது மகா பிரதோஷம் வந்தால், அது நவக்கிரகப் பிரதோஷம். இது மிகவும் அரிது. இந்தப் பிரதோஷத்தில் முறையாக விரதம் இருந்தால் சிவனின் அருளோடு நவக் கிரகங்களின் அருளும் கிடைக்கும்.

### 20. துத்தப் பிரதோஷம்

அரிதிலும் அரிது பத்து மகாபிரதோஷம் ஒரு வருடத்தில் வருவது. அந்தப் பிரதோஷ வழிபாட்டைச் செய்தால் பிறவி குறைபாடுகள் கூட சரியாகும்.

முனைவர்
**இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.

## தினம் ஒரு தலைவர்கள்

# தீன் தயாள் குப்தா வரலாறு

1951 ஆம் ஆண்டு, சுதந்திரம் அடைந்த சில ஆண்டுகளுக்குப் பிறகு, டாக்டர் ஷ்யாமா பிரசாத் முகர்ஜியுடன் சேர்ந்து, தீன் தயாள் உபாத்யாயா புதிய கட்சியைத் தொடங்கினார் ராஷ்ட்ரிய ஜன சங்கம்
ரிஷப் சவுகான்
பண்டிட் தீன் தயாள் உபாத்யாயா பாஜகவின் முன்னோடியான பாரதிய ஜன சங்கத்தின் சித்தாந்த கட்டமைப்பாளராக பணியாற்றினார். அவரது குறிப்பிடத்தக்க பங்களிப்புகள் இந்த புதிய அரசியல் அமைப்பிற்கான அடித்தளத்தை அமைத்தது மட்டுமல்லாமல், அவரது சமூக தத்துவங்களையும் வெளிப்படுத்தின, அவரை வெறும் அரசியல் அந்தஸ்துக்கு அப்பால் உயர்த்தின.

உத்தரபிரதேச மாநிலம் மதுரா மாவட்டத்தில் செப்டம்பர் 25, 1916 அன்று பிறந்த உபாத்யாயா, சிறு வயதிலிருந்தே அறிவார்ந்த சிறந்து விளங்கினார். பிலானியில் பள்ளிப் படிப்பை முடித்த அவர், பின்னர் ஆங்கில இலக்கியத்தில் இளங்கலை மற்றும் முதுகலைப் பட்டம், பி.இ.டி. மற்றும் மருத்துவம் ஆகிய இரண்டையும் பெற்றார்.

ஆர்.எஸ்.எஸ்ஸின் தீவிர சக்தி
1937 ஆம் ஆண்டு ராஷ்ட்ரிய சுயம்சேவக் சங்கத்தில் (ஆர்.எஸ்.எஸ்) சேர்ந்தபோது உபாத்யாயாவின் அரசியல் பயணம் 21 வயதில் தொடங்கியது. இந்தக் காலகட்டத்தில்தான் அவர் எம்.எஸ். கோல்வால்கரை சந்தித்தார், அவர் அவரது வழிகாட்டியாக மாறி அவரது சித்தாந்தப் பாதையை வடிவமைத்தார். பல ஆண்டுகளாக, உபாத்யாயா ஆர்.எஸ்.எஸ்ஸில் ஒரு குறிப்பிடத்தக்க நபராக உருவெடுத்தார். இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தின் போது, அவர் 'அகண்ட பாரதம்: குறிக்கோள்கள் மற்றும் வழிமுறைகள்' என்ற தலைப்பில் ஒரு செல்வாக்கு மிக்க கட்டுரையை எழுதினார், அதில் அவர் ஒவ்வொரு சமூகமும், அது முஸ்லிம் அல்லது கிறிஸ்தவராக இருந்தாலும், "இந்த நாட்டில் இந்து கலாச்சாரம் என்ற நீடித்த தேசிய கலாச்சார நீரோட்டத்துடன் தங்களை அடையாளம் காண வேண்டும்" என்று வலியுறுத்தினார். இது அடையாள அடிப்படையிலான பிளவுகளைத் தாண்டிய ஒருங்கிணைந்த இந்தியாவைப் பற்றிய அவரது பார்வையை வெளிப்படுத்தியது, மேலும் இது பெரும்பாலும் காங்கிரஸால் விமர்சிக்கப்பட்டது.

தீன் தயாள் உபாத்யாயா கலாச்சாரத்தை தேசியவாதத்தின் சாராம்சமாகக் கருதினார், பன்முக கலாச்சாரக் கருத்தை உறுதியாக நிராகரித்தார். "அனைத்து மக்களும் ஒரே கலாச்சார நீரோட்டத்தின் ஒரு பகுதியாக மாறாவிட்டால், தேசிய ஒற்றுமை அல்லது ஒருங்கிணைப்பு சாத்தியமற்றது" என்று அவர் வாதிட்டார். இந்திய தேசியவாதத்தைப் பாதுகாப்பதற்கு ஒரு ஒருங்கிணைந்த கலாச்சார அடித்தளம் தேவை என்று அவர் நம்பினார்.

1942 ஆம் ஆண்டில், உபாத்யாயா ஆர்எஸ்எஸ்ஸின் முழு உறுப்பினரானார். தேசியவாதத்தை ஆதரிக்கும் ராஷ்ட்ரிய தர்மா என்ற மாத இதழைத் தொடங்கினார். பஞ்சஜன்யா மற்றும் சுதேஷ் என்ற நாளிதழ் உள்ளிட்ட வாராந்திர வெளியீடுகளையும் அவர் தொடங்கினார்.

உள்ளூர் சமூகங்களை அதிகாரப்படுத்த அதிகாரத்தை பரவலாக்குவதில் அவர் காட்டிய முக்கியத்துவம், 1968 இல் அவர் மறைந்து கிட்டத்தட்ட ஒரு தசாப்தத்திற்குப் பிறகு தோன்றிய பஞ்சாயத்து ராஜ் அமைப்புடன் ஒத்துப்போகிறது.

ஜன சங்கத்தின் ஸ்தாபனம்
1951 ஆம் ஆண்டு, சுதந்திரம் அடைந்த சில ஆண்டுகளுக்குப் பிறகு, டாக்டர் ஷ்யாமா பிரசாத் முகர்ஜியுடன் சேர்ந்து, தீன் தயாள் உபாத்யாயா ராஷ்ட்ரிய ஜன சங்கம் என்ற புதிய கட்சியைத் தொடங்கினார்.

பின்னர் உபாத்யாயா ராஷ்ட்ரிய ஜன சங்கத்திற்கான அடித்தளத்தை அமைத்தார். அவரது இலட்சியவாதமும் அர்ப்பணிப்பும் ஷ்யாமா பிரசாத் முகர்ஜியைக் கவர்ந்தது, அவர் "எனக்கு இரண்டு தீன் தயாள்களைக் கொடுங்கள், நான் நாட்டின் முகத்தையே முற்றிலுமாக மாற்றுவேன்" என்று பிரபலமாகக் குறிப்பிட்டார்.
1953 இல் முகர்ஜி இறந்ததைத் தொடர்ந்து, ஜன சங்கத்தின் தலைமை உபாத்யாயாவிடம் சென்றது.

அவரது வழிகாட்டுதலின் கீழ், கட்சி புதிய உயரங்களை எட்டியது, அதன் சித்தாந்தத்தை நாடு முழுவதும் திறம்படத் தெரிவித்தது. பின்னர் பாஜகவால் ஏற்றுக்கொள்ளப்படும் அரசியல் தத்துவத்தை வடிவமைப்பதில் அவரது முயற்சிகள் முக்கிய பங்கு வகித்தன.

தீன் தயாள் உபாத்யாயா, கலாச்சாரத்தை தேசியவாதத்தின் சாரமாகக் கருதினார், பன்முக கலாச்சாரக் கருத்தை உறுதியாக நிராகரித்தார். "எல்லா மக்களும் ஒரே கலாச்சார நீரோட்டத்தின் ஒரு பகுதியாக மாறாவிட்டால், தேசிய ஒற்றுமை அல்லது ஒருங்கிணைப்பு சாத்தியமற்றது" என்று அவர் வாதிட்டார். இந்திய தேசியவாதத்தைப் பாதுகாப்பதற்கு ஒருங்கிணைந்த கலாச்சார அடித்தளம் தேவை என்று அவர் நம்பினார்.

இருப்பினும், உபாத்யாயாவின் பங்களிப்புகள் அரசியலுக்கு அப்பாற்பட்டவை; அவரது மிக முக்கியமான மரபு 'ஏகாத்மா' அல்லது 'ஒருங்கிணைந்த மனிதநேயம்' என்று அழைக்கப்படும் அவரது தத்துவ கட்டமைப்பில் உள்ளது.


உபாத்யாயாவின் கூற்றுப்படி, தனிநபர்களின் நோக்கங்கள் சமூகத்தின் பரந்த இலக்குகளை பூர்த்தி செய்ய வேண்டும், ஏனெனில் ஒரு பகிரப்பட்ட சாராம்சம் அனைத்து மனிதகுலத்தையும் ஒன்றிணைக்கிறது. தனிப்பட்ட மற்றும் குடும்ப அக்கறைகளைத் தாண்டி, அதிக நன்மைக்கு முன்னுரிமை அளிக்கும் ஒரு சிறந்த குடிமகனை அவர் கற்பனை செய்தார்.

ஒரு தீவிர தேசியவாதியான உபாத்யாயா, மேற்கத்திய தத்துவங்களான தனித்துவம் மற்றும் சோசலிசத்தை கடைபிடிப்பதன் மூலம் இந்தியா செழிக்க முடியாது என்று வாதிட்டார்.

ஒரு பொருளாதார நிபுணராக, உபாத்யாயா காந்திய சோசலிசத்துடன் அதிகமாக அடையாளம் காணப்பட்டார், சிறு நிறுவனங்கள் மூலம் உற்பத்தியை அதிகப்படுத்துவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

திட்டக் கமிஷனை கடுமையாக விமர்சித்த அவர், வேலையின்மை, பொது சுகாதாரம் மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாடு போன்ற முக்கிய பிரச்சினைகளை கையாள்வதில் அதன் தோல்வியை எடுத்துக்காட்டினார். இந்தியாவின் கலாச்சார பாரம்பரியத்தை ஏற்றுக்கொண்டு அதற்கு ஏற்ப மாற்றுவதன் மூலம் மட்டுமே உண்மையான முன்னேற்றத்தை அடைய முடியும் என்ற நம்பிக்கையில் இந்தியாவுக்கான அவரது தொலைநோக்கு வேரூன்றியது.

1968 ஆம் ஆண்டு உபாத்யாயா முகல்சராய் நிலையத்திற்கு அருகில் அறிமுகமில்லாத சூழ்நிலையில் இறந்து கிடந்தார். அவர் கொலை செய்யப்பட்டார், இந்த செயல் இன்றுவரை ஒரு மர்மமாகவே உள்ளது.



# 'த்ரிஷ்யம் 3' கதைக்களம்: இயக்குநர் ஜீத்து ஜோசப் விளக்கம்




'த்ரிஷ்யம் 3' படத்தின் கதைக்களம் எப்படியிருக்கும் என்று இயக்குநர் ஜீத்து ஜோசப் தெரிவித்துள்ளார்.

ஜீத்து ஜோசப் இயக்கத்தில் மோகன்லால் நடிப்பில் உருவாகி வரும் படம் 'த்ரிஷ்யம் 3'. இதன் படப்பிடிப்பு மும்முரமாக நடைபெற்று வருகிறது. ஒரே கட்டமாக ஒட்டுமொத்த படப்பிடிப்பையும் முடிக்க படக்குழு திட்டமிட்டு இருக்கிறது. இதன் தெலுங்கு மற்றும் இந்தி ரீமேக் பணிகளும் ஒருபுறம் நடைபெற்று வருகின்றன.

இதனிடையே 'த்ரிஷ்யம் 3' படம் குறித்து பேட்டியொன்றில் பேசியிருக்கிறார் இயக்குநர் ஜீத்து ஜோசப். அப்பேட்டியில், "'த்ரிஷ்யம் 3' கதையினை வேண்டுமென்றே எழுத முயற்சிக்கவில்லை. 'த்ரிஷ்யம் 2' படத்தில் ஜார்ஜ்குட்டி மற்றும் அவரது குடும்பத்தினர் வாழ்க்கையில் அடுத்த 7 ஆண்டுகளில் என்ன நடந்தது என்பதில் மட்டுமே எனது கவனம் இருந்தது.

ஏனென்றால் அவர்களது சுற்றுப்புறங்களும், மக்களும் மாறிவிட்டனர். முதல் பாகத்தில் ஜார்ஜ்குட்டியை சுற்றியிருப்பவர்கள் அப்பாவி என்று நம்பினார்கள். ஆனால் அவர்களே இரண்டாம் பாகத்தில் 'வேறு ஏதோ இருக்கிறது' என்று நினைப்பது மாதிரி திரைக்கதை அமைத்திருப்பேன். 3-ம் பாகத்திலும் இதே போன்று வேறொரு அணுகுமுறையை வைத்திருக்கிறேன்" என்று தெரிவித்துள்ளார் ஜீத்து ஜோசப்.



# வரலாற்றுப் பின்னணி கதையில் நயன்தாரா!



வரலாற்றுப் பின்னணியில் உருவாகும் பான் இந்தியா படத்தில் நயன்தாரா, நாயகியாக நடிக்கிறார்.

நயன்தாரா நடிப்பில், மண்ணாங்கட்டி, டியர் ஸ்டூடன்ட், மூக்குத்தி அம்மன் 2 உள்பட சில படங்கள் வெளியாக இருக்கின்றன. இந்நிலையில் இப்போது வரலாற்றுப் பின்னணி கொண்ட படத்தில் அவர் இணைந்துள்ளார். இதில் அவர் ராணியாக நடிக்கிறார்.

பிரபல தெலுங்கு ஹீரோ பாலகிருஷ்ணா, நாயகனாக நடிக்கிறார். பிரம்மாண்ட அரண்மனை, போர்க்களக் காட்சிகள் என மெகா பட்ஜெட்டில் உருவாகும் இப்படத்தை கோபிசந்த் மலினேனி இயக்குகிறார்.

'சிம்ஹா','ஜெய் சிம்ஹா','ஸ்ரீ ராம ராஜ்ஜியம்' ஆகிய படங்களை அடுத்து நான்காவது முறையாக பாலகிருஷ்ணாவுடன் இணைந்துள்ளார் நயன்தாரா. பாலகிருஷ்ணாவின் 111-வது படமான இதை 'பெத்தி' படத்தைத் தயாரிக்கும் வெங்கட் சதீஷ் கிலாரு, விருத்தி சினிமாஸ் சார்பில் தயாரிக்கிறார்.

நயன்தாராவின் பிறந்த நாளை முன்னிட்டு இப்படக் குழு அவரது கதாபாத்திர டீஸரை வெளியிட்டுள்ளது. இதன் படப்பிடிப்பு அடுத்த மாதம் தொடங்க இருக்கிறது. படத்தின் மற்ற நடிகர்கள் மற்றும் தொழில்நுட்ப கலைஞர்கள் குறித்த அறிவிப்புகள் விரைவில் வெளியிடப்படும்.

நடிகை ஷாலினி பாண்டியன் ஸ்டோர்ஸ் 2 தொடரில் முக்கிய ரோலில் நடித்து வருபவர். அவர் அழகிய சேலையில் போஸ் கொடுத்த ஸ்டில்களை பாருங்க.

# சர்ச்சைக்குள்ளான தனுஷ் விவகாரம்: மான்யா ஆனந்த் விளக்கம்





நடிகர் தனுஷ் குறித்த தனது பேட்டி சர்ச்சைக்குள்ளானதைத் தொடர்ந்து மான்யா ஆனந்த் விளக்கம் அளித்துள்ளார்.

தனுஷ் மற்றும் அவரது மேலாளர் ஷ்ரேயாஸ் குறித்து மான்யா ஆனந்த் பேசிய வீடியோ பதிவு இணையத்தில் வைரலானது. இது இணையத்தில் பெரும் சர்ச்சையையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தியது. இது தொடர்பாக மான்யா ஆனந்த் விளக்கம் ஒன்றை அளித்துள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பாக தனது இன்ஸ்டாகிராம் பதிவில் மான்யா ஆனந்த், "வணக்கம், இது சமீபத்தில் யூடியூப் சேனலுக்கு நான் அளித்த பேட்டியைப் பற்றியது. அந்த நேர்காணலின் அடிப்படையில் பல சேனல்கள் தனுஷ் சார் பற்றி தவறான தகவல்களைப் பரப்புவதைக் கவனித்தேன். தயவுசெய்து முழுமையான வீடியோவைப் பாருங்கள்.

அதில், என்னைத் தொடர்பு கொண்ட நபர் ஸ்ரேயாஸ் பெயரைப் பயன்படுத்தி திரைப்பட வாய்ப்புகள் பற்றிப் பேசிய ஒரு போலி நபராக இருக்கலாம் என்று தெளிவாகக் குறிப்பிட்டிருப்பேன். மேலும், அந்த நபரிடமே, அவருடைய எண்ணை தனுஷ் சார் குழுவினருடன் பகிர்ந்து சரிபார்ப்பேன் என்றும் சொன்னேன் எனவும் கூறியிருப்பேன். முன்முடிவுகளுக்கு வரும் முன்னர் முழுமையான வீடியோவைப் பார்க்கவும். தவறான செய்திகளைப் பரப்ப வேண்டாம் என்று அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

# பெண் குழந்தைக்கு தந்தையானார் பிரேம்ஜி




தமிழ் சினிமாவில் நகைச்சுவை மற்றும் குணச்சித்திர கதாப்பாத்திரங்களில் நடிப்பவர் நடிகர் பிரேம்ஜி. இவர் கடந்த ஆண்டு ஜூன் மாதம் இந்து என்பவரை காதலித்து திருமணம் செய்து கொண்டார்.

இந்த தம்பதிக்கு இன்று பெண் குழந்தை பிறந்துள்ளது. இந்த மகிழ்ச்சியான தகவலை 'வல்லமை' பட இயக்குநர் கருப்பையா தனது சமூக வலைதளத்தில் பகிர்ந்துள்ளார். திரைப்பிரபலங்கள் மற்றும் ரசிகர்கள் பலரும் பிரேம்ஜிக்கு வாழ்த்துகளைத் தெரிவித்து வருகின்றனர்.

47 வயதில் பிரேம்ஜி தந்தையாகியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



# MY LORD படத்தின் முதல் பாடல் வெளியானது



'சுப்ரமணியபுரம்' படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகமாகி தற்போது தமிழ் சினிமாவில் முன்னணி கதாநாயகனாக வலம் வருபவர் சசிகுமார். இவரது நடிப்பில் சமீபத்தில் வெளியான 'டூரிஸ்ட் பேமிலி' படம் மாபெரும் வெற்றியை பெற்றது. அனைத்து தரப்பு மக்களும், திரைப்பிரபலங்கள் பலரும் இப்படத்தை பாராட்டினர்.

இதனை தொடர்ந்து சசிகுமார் தற்போது "ஜோக்கர், குக்கூ, ஜப்பான்" ஆகிய படங்களை இயக்கிய ராஜுமுருகன் இயக்கத்தில் 'மை லார்ட்' படத்தில் நடித்து வருகிறார். இந்த படத்தில் சைத்ரா ஆச்சர் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார். இப்படத்திற்கு ஷான் ரோல்டன் இசையமைத்துள்ளார். ஒலிம்பியா மூவிஸ் நிறுவனம் தயாரிக்கும் இப்படத்தின் படப்பிடிப்பு பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில், 'மை லார்ட்' படத்தின் முதல் பாடல் இன்று வெளியாக உள்ளதாக படக்குழு அறிவித்துள்ளது. இப்படத்தின் 'எச காத்தா' பாடலை சின்மயி, சத்யபிரகாஷ் இணைந்து பாடியுள்ளனர்.

நடிகை மீனாட்சி சவுத்ரி ரெட் ஹாட் உடையில் போஸ் கொடுத்து இருக்கும் புகைப்படங்கள். ரசிகர்களை கவரும் ஹாட் புகைப்படங்கள் இதோ.


# ஒரே ஒரு மதம் தான், அது அன்பின் மதம் - சத்ய சாய் பாபா நூற்றாண்டு விழாவில் ஐஸ்வர்யா ராய் பேச்சு



ஆந்திரப் பிரதேசத்தின் புட்டபர்த்தியில் இன்று நடைபெற்ற சத்ய சாய் பாபாவின் பிறந்தநாள் நூற்றாண்டு விழாவில் பிரதமர் மோடியுடன் கிரிக்கெட் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கர், நடிகை ஐஸ்வர்யா ராய் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டனர்

இந்த நிகழ்ச்சியில் பிரதமர் மோடியின் கால்களை தொட்டு ஐஸ்வர்யா ராய் வணங்கினார். அதன்பின்னர் அந்நிகழ்ச்சியில் உரையாற்றிய ஐஸ்வர்யா ராய், "ஒரே ஒரு இனம் தான், அது மானுட இனம். ஒரே ஒரு மதம் தான், அது அன்பின் மதம். ஒரே ஒரு மொழி தான், அது உள்ளத்தின் மொழி. கடவுள் ஒருவரே, அவர் எங்கும் நிறைந்தவர்" என்று தெரிவித்தார்.

ஐஸ்வர்யா ராயின் இந்த பேச்சு அனைவரையும் வெகுவாக கவர்ந்தது.


LOCATION - CHENNAI
WE ARE HIRING
TELECALLERS
VACANCIES - 50
QUALIFICATION - ANY DEGREE
FRESHERS ALSO CAN APPLY
TELECALLING EXPERIENCE IS PREFERABLE
9337501889
7789941009
qknewstv@gmail.com



PRODUCT
PROMOTION
Rs.100 Only
5000+ Views
FB, INSTA, WEBSITE
Whatsapp
8122798599
vilambaram.com
விளம்பரம்


அருள்தரும்
தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
வழங்கும்
2026 மாத காலண்டர்
தெய்வீகப் படங்களுடன்
3 காலண்டர்
100 ரூபாய்
அனைத்து
இல்லங்களிலும்
இருக்கவேண்டிய
அற்புத காலண்டர்
இது காலண்டர் அல்ல
மினி பஞ்சாங்கம்
Admin office
Padma Media House
116, EH Road, Gandhi Nagar Chennai 600081
தொடர்பு கொள்ளவும்
9337501889



WE'RE HIRING!
A Passionate Content Creator
CONTACT US!
94386 10756


தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக
நிருபர்கள் தேவை (Freelancer)
நமது ஆனந்த பாஸ்கர், பேப்பர்பாய்
மற்றும் தமிழ்நாடுஇபேப்பர் நாளிதழ்களுக்கு
பணியாற்ற தொண்டுள்ளம் கொண்ட
தன்னார்வளர்கள் (freelancer)
அடிப்படையில் நிருபர்களாக பணியாற்ற,
மக்கள் தொடர்பு அதிகம் உள்ள
பத்திரிக்கை துறையில் ஆர்வம் உள்ளவர்கள்,
தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக
நிருபர்கள் தேவை.
NEWS
www.vaniks.com
No Monthly Commitments
9337501889, 7789941009


MLM PERFECT
LIMITED OFFER
HURRY UP!
Cryptocurrency
MLM Software
Development
RS.19999/-
Onetime, No hidden cost
Contact Us
Visite Our Website
www.mlmperfect.com
Call US
9853719337,7436914247


WANTED
FEMALE TELECALLER
EXP : FRESH / EXPERIENCED
SKILL : GOOD COMMUNICATION SKILL
LANGUAGES: KANNADA, TAMIL, TELUGU, ENGLISH, HINDI...
AGE : 18 YRS -60 YRS
SALARY – 10,000 & ABOVE
LOCATION : TIRUVATIYUR, CHENNAI
FOR PADMA MEDIA HOUSE
PadmaMedia House
Call/Whatsapp
94386 10756


WANTED
STORE
HELPER
Boys only
Fresher / Experience
SAA
Venus Sorting Technologies Pvt Ltd
Ganapathy, Coimbatore
Ph: 97919 60482
E-Mail ID: hr@vvhitechhoses.in



CREATE YOUR
PROFILE
WITH US
& SCALE YOUR CAREER
SEND YOUR CV AT -
MKPLACEMENT@GMAIL.COM
FIND AMAZING JOB OPPORTUNITIES WITH US!!


Vilambaram
WE HELP YOU TO BOOST YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM
CONTACT: 8122798599


PADMA MEDIA HOUSE
Best Newspaper
Advertising Agency
Matrimonial
Property
Recruitment
Business
Announcements
Obituary
Public Notices
Education
CONTACT : +91 81227 98599


FREE MARRIAGE INFORMATION CENTER :
இலவச திருமண தகவல் மையம்
இலவசதிருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889


PADMA
MEDIA HOUSE
BOOK
NEWSPAPER ADS IN
Recruitment
Public Notice
Property
Business
Matrimony
Education
CONTACT : +91 81227 98599
தமிழ்நாடு இபேப்பர்.காம்
பாஸ்கர்
பேப்பர்பாய்
ADVERTISE WITH US!
ADVERTISEMENTS
Whatsapp
81228 36299


WORK FROM HOME
Extra Income
Part Time
Full Time
AN OPPORTUNITY THAT ROCKS!!!
BE YOUR OWN BOSS
Work 1-4 Hours / Day
Training / Support Provided
No Experience / No Qualification
Who Can Work - 18 Years & Above
Housewives
Retired Persons
Students
Professionals
Businessman
Employees
9337501889
7789941009




## கிராமமும், பட்டணமும்

உழைத்தவர்கள்
ஊமையானார்கள்....

கொடுத்தவர்கள்
குபேரனார்கள்....

பாடுபட்டவர்கள்
பாவியானார்கள்....

படித்தவர்கள்
படைப்பாளியானார்கள்...

பகட்டான உடை
உடுத்தி பரணி
வருபவர்கள்
பட்டணத்தார்கள்...

கந்த உடை உடுத்தி
களனியிலே
கடமையை செய்பவர்கள்
கிராமாத்தார்கள்...
வங்கி கடன் பெற்று
வாழ்க்கையை ஓட்டுவார்கள்
பட்டணத்தார்கள்....

கடன் வாங்காமல்
கண்ணியமான
வாழ்க்கை வாழ்பவர்கள்
கிராமாத்தார்கள்...

நேர்மை எங்கே இருக்கு
நிதானம் எங்கே இருக்கு
உண்மை எங்கே
இருக்கு
ஊர் மக்களாகிய
கிராமத்தில்தான்
இருக்கு...!!



**பொன்.கருணா**
நவி மும்பை

## முகமூடி !

தேர்தல் வரப்போகிறது...
அரசியல்வாதிகள்
முகமூடி அணிய தயாராகி
விட்டார்கள்....

நல்ல மனிதனாய்
ஒரு முகமூடி...
சாதியத்தலைவனாய் ஒரு
முகமூடி...

பணிவிடை செய்பவனாய்
ஒரு முகமூடி....
கூப்பிட்ட குரலுக்கு
ஓடோடி வருபவனாய் ஒரு
முகமூடி....

ஏழைகளின் நண்பனாய்
ஒரு முகமூடி....
சமத்துவத்தின்
தலைவனாய் ஒரு
முகமூடி....

இதுவெல்லாம் தற்காலிக
முகமூடிகள்....
தேர்தலில் வென்ற பின்
முகமூடிகள் கழட்டப்படும்...
உண்மை முகம் வெளியே
காட்டப்படும் !

**எம்.பி.தினேஷ்.**
கோவை

மழையடித்தால்
வெயிலையும்
வெயிலடித்தால்
மழையையும்
நினைத்து ஏங்கும் மனசு

**ஸ்ரீகாந்த்** திருச்சி



நம் சண்டைகளை
உன்
பார்வைகள்
தீர்மானிக்
கின்றன...
சமாதானங்களை
உன் இதழ்கள்.



**ரிஷபன்**

அத்தனை எளிதாக
இல்லை...

உன் நினைவுகள்
கடப்பதுவும்..

உன் தடயங்கள்
தவிர்ப்பதுவும்...



பிரிவு
தவிப்பை
தள்ளி
வைப்போம்...

வாழ்க்கை
நமதென்று
சொல்லி வைப்போம்...

**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி

## ஆண்கள் தியாகிகளே!

நேரிசை வெண்பா!

குடும்பத்தியாகியே
கூர்த்தநல் ஆண்கள்

இடுக்கண் எதிர்த்தே
இனிமை.. தொடுக்கவே

போராடி வெற்றிகாண்பர்
புத்தெழுச்சி யோடேதான்

சீரோடு வாழ்வர் செழித்து!

இல்லத்தைச்சீராக
ஈடில் உழைப்பினை

நல்விதமாய் நல்கிடுவான்
நல்லாணே... பொல்லாப்பை

நீக்கிப்பொலிவாக
நேர்ந்து குடும்பத்தை

ஆக்கிடுவான் நன்கே அறி!

மனந்திறந்து பேசானே
மாண்புடைஆணே

கனவுகள் காண்பானே
காணும்... கனவில்லம்

ஓங்கிடவே நாளும்
உழைத்திடுவான் எக்காலும்

தாங்கிடுவான்
தம்மில்லம்
தான்!



**முனைவர் இராம. வேதநாயகம்**

திருவண்ணாமலை.



உன்னோடு இணையத்தில்
உறவாடிய ஒவ்வொரு
மாலைப் பொழுதும்...
உன் நினைவுகளோடு தான்
கடந்து செல்கிறது...

புறக்கணிப்பு செய்து
விட்டு...அகலத்தான்
முடியவில்லை...
உன்னைப் போல...

**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி

## கண்ணீர்

சோகம் மகிழ்ச்சி
இரண்டையும்
சொட்டும் கண்ணீர்
சொல்கிறதே !

ஏகும் தூசி குப்பைகள்
எரிச்சல் ஊட்டும்
போதினிலே,

கண்கள் தன்னை
தானேதான்
காத்துக்கொண்டு
விடுகிறதே!

கண்ணீர் அதிலே
வருகிறதே– கண்
காய்ந்து விடாமல்
காக்கிறதே!

தேகம் வலியால் துடித்தாலும்
துக்கம் தொண்டையை
அடைத்தாலும்,

தேனாய் ஆனந்தம்
அடைந்தாலும் தெறிக்கும்
கண்ணீர் வருகிறதே!

பாகும் தேனும் இருந்தாலும்
பசித்தால் தானே சந்தோஷம்!

பலதும்
பார்க்கும்
கண்களுக்கு
கண்ணீர்
தானே
சமநேசம்!



**வெ.தமிழழகன்,**
எம்.ஏ.பிஎட், சேலம்.



## பறக்கும் மகிழ்ச்சி பலூன்

பறப்பது பலூன் இல்லை....
என் உள்ளம் சந்தோஷத்தில்
என்பதை உணர்ந்தேன்..
நீல வானம் என் தோழன்
ஆனதால் சந்தோஷ பலூன்
பறந்தது
பறக்கும் பலூனை
பார்த்தவுடன் மனம்
மகிழ்ச்சியில் உள்ள சிறு
குழந்தையாய் மாறினேன்
பலூன் பறக்க காற்று
காரணம் போல என்
மனம் என்ற பலூன் பறக்க
சந்தோஷமே காரணம்
சுற்றமும் நட்பும்
அரவணைத்துக்கொள்ள
அங்க சந்தோஷ பலூனில்
பறந்தேன்
சிரிப்புக்கும் மனநிறைவுக்கும்
பஞ்சமில்லை என்பதால்
சந்தோஷ பலூனில் பறந்தேன்
நம்பிக்கை என்ற கயிறு
பிடித்த என் மனம்
சந்தோஷமாக வானில்
பறந்தது பலூனாக
இதுவே போதுமே என்று
மனதுக்குள் உல்லாசம்
பொங்க அதுவும்
காற்றடைத்த பலூனாக
வானில் பறந்தது
வானவில் வந்தால் மழை
போல என் மனதுக்குள்
சந்தோஷம்
நிறைய
பலூனாக
நானே வானில்
பறந்தேன் ..



**உஷா முத்துராமன்**



கண்களாலயே
என்னை குடித்து தீர்த்தது
ஒரு ஜின்!

எல்லாமும் " நீ" என
வாழ்ந்து விட்டேன்
இறுதியாய் கண்மூடும் வரை
இப்படியே இருந்து விடு
என் இறைவியாய்!

மறந்து விடும்
எண்ணமிருந்தால்
என்னை காதலே செய்யாதே
ஏனென்றால் உன்னை துறந்து
வாழும்
மனதினை–ஏனோ
அந்த கடவுள்
கொடுக்கவில்லை!

எல்லாவற்றையும்கட
உன்னில்,உள்ளில் காண்பாய்
கடவுளை!

முகம் பார்க்கும்
கண்ணாடியில்
கூடஎனக்கு பதில்
நீ தான் தெரிகிறாய்
பயமாய் இருக்கிறது

என் அகம் கூட
தொலைந்து விடுமோ?
உன் காதலால்!
ஒவ்வொரு வார விடுமுறையும்
உன் தொலைப்பேசி
அழைப்புக்களுக்காகவே
காத்திருக்கிறேன்–ஏனோ
எப்போதும் நீ தொடர்பு
எல்லைக்கு அப்பாலயே
இருக்கிறாய் நம் காதலைப்
போல!

நிலவை ஒத்த அவள்
முகத்தை மட்டுமல்ல
அவள் நினைவுகளையும்
உன்னிலிருந்து அகற்று
அப்புறம் பார் உன்னில்
உதட்டில் பூக்கும் புன்னகை!

எல்லா வலிகளும்
தன்னாலே ஆறிவிடும்
காலம் கடந்தால் நல்லாவே
மாறிவிடும் மறதி பழகு
மருந்து தேவையில்லை
மனிதனுக்கு. இவ்வளவு
தான் இனிக்க வைக்கும்
வாழ்க்கை!



**லி.நௌஷாத் கான்**

## ஜில்லு

நூறு கிலோ மீட்டர்
என்பது ஜில்லுவுக்குக்
கோபம் வரும்போது நான்
காணாமல் போகும் தூரம்.

ஜில்லுவும் நானும்
சேர்ந்து விளையாடும்போது,
ஜில்லு என்னுடன் சேர்ந்து
விளையாடும்
நோக்கைவிட,
நான் ஜில்லுவுடன்
சேர்ந்து
விளையாடும்
நேரம் அதிகம்.




**கே. பி. ஜனார்த்தனன்**

# நூல் விமர்சனம்

ஆயிரம் ஹைக்கூ !
நூல் ஆசிரியர்
கவிஞர் இரா .இரவி !
நூல் விமர்சனம் எழுத்தாளர்
,கவிஞர் விஜயலட்சுமி
மாசிலாமணி!
இருப்பு சவூதி அரேபியா !
முகாம் அமெரிக்கா !
வானதி பதிப்பகம் ,23.
தீனதயாளு தெரு ,தியாயராயர்
நகர் . சென்னை .17
தொலைபேசி 044–24342810 ,
044– 24310769. மின் அஞ்சல்
vanathipathippakam@gmail.com
184 பக்கங்கள் விலை
ரூபாய் 120.




தங்களது ' ஹைகூ ' நூலினைப் படித்தேன்: பல நூறு சிந்தனைகளை

மனதில் விதைத்தேன்!

வானத்து நட்சத்திரங்களின் எண்ணிக்கை போல , உங்கள் 'ஆயிரம் ஹைகூ'க்கள் என் மனதில் எண்ணிலடங்கா எண்ணச் சிதறல்களை ஏற்படுத்தின... . அவற்றில் , எவற்றயெல்லாம் பிடித்து......., எடுத்து ......தொடுத்து .........'நூல் நயம் ' என்ற 'கவி மாலை ' கட்டுவது என்று ......மலைத்து .......ஒருவாறு முடித்து ......இன்று உங்கள் நூலுக்கு என் 'நூல் நயம்' ..........................

நூல் நயம் :

மனிதர்களை நேசிக்கவும் , வாசிக்கவும் தெரிந்த மனிதர் , இரா. இரவி அவர்கள் , பிரபஞ்சத்தைத் தமது கவிதைக் கண்களால் பார்த்துப் பரவசமடைந்தும் , புளகாங்கிதமடைந்தும் , அப்பிரபஞ்சத்தில் , சஞ்சரிக்கும் மனிதர்களைப் படித்தும் அவர்தம் இன்னபிற செயல்களைக் கண்டு , நகைத்தும் ,நையாண்டி , செய்தும் எழுதியிருக்கும் ஒவ்வொரு ஹை கூ கவிதையும் நம்மைப் பலவாறு சிந்திக்க வைப்பதோடு, நம்மை நேர்மைப் படுத்தவும் தவறவில்லை. அதேபோன்று, அவரது கவித்துவம் நமக்கு வழித்துணையாகவும் அமைந்திருக்கிறது.

வானம் இவருக்கு ஒரு பல்கலைக்கழகமாம் ; அதுவும் திறந்தவெளிப் பல்கலைக்கழகமாம் ! நீலவானை ரசித்தபடியே , உலக நடப்புகளை அலசுகிறார்.

"மரபுக் கவிதை
வானத்தில்
நிலவு."
" அய்யகோ!
வானத்திலும் சுரண்டலா?
பிறை நிலவு."

துளிர்ப்போம் என்று தானே மரங்களும் இலயுதிர்க்கின்றன! மரங்களும் நம்பிக்கையோடு!

"இலைகள் உதிர்ந்தும்
நம்பிக்கையோடு மரம்
மழை வரும்>"

கவிஞரின் ரசனை அலாதியானது என்பதற்கு இதோ அவரது

ஹைகூ..................

" ரசிக்கச்சலிக்காத
இயற்கை "

"உணர்த்திச் சென்றன
அலைகள்
கடலின் வனப்பை ."

இவரது தத்துவத்தேடல் .நமக்கு இவரது நூலைப் போதிமரமாகத் தந்திருக்கிறது..

இவரது தேடல் .........................
நமக்குப் புதையல்!

ஒரு அருமையான சிந்தனைக் கவிதை...............

மனிதனுக்காக .........................
" நாயும் பூனையும்
நட்பாக மனிதன்?'

கவிஞர் இரா.இரவி அவர்கள் , காதல் நெஞ்சம் கொண்டவர் என்பதாலேயே கவிதையையும் காதலிக்கமுடிகிறது,,,,,

காதலியையும் கவிதையாக்கிக் காதலிக்க முடிகிறது. உலக நடப்புகளை, மனிதர்களை, மரங்களை வாசித்துச் செவ்வனே மயக்கம் கொள்ளமுடிகிறது.. இவற்றின் வெளிப்பாடாக பிறரை, அவர் வழியில் சிந்திக்கச் செய்ய முடிகிறது.....

மாற்றுத் திறனாளிகளைப் பற்றிய இவரது கவிதைகள் சக மனிதர்களின் இன்னல்களுக்கு நம்மால் இயன்ற உதவிகளை இன்றே இப்பொழுதே செய்யமாட்டோமா என்ற' உதவிக்கர உணர்வு' ஏற்படுகிறதல்லவா?.அதுதான்.. இந்த உந்துதலின் உபயம் தான் ஒரு கவிஞனின் வெற்றி எனலாம்....... மனிதனை மனிதனாக்கச் செய்யும் மகதத்துவச் செயல்!

"சக்கர வண்டியில் சென்றேனும் வாழ்க்கைச் சக்கரத்தை உருட்டும் " மாற்றுத்திறனாளிகளுக்கு," வாய்ப்பு வழங்கினால் வெற்றி பெறுவார்கள் மாற்றுத்திறனாளிகள் " என்பதை அறிந்து, படைத்திருக்கும், கவிஞரின் கவிதைகள் மிக அருமை. அனைத்துப் புலன்களும் முழுமையாகப் பெற்ற மனிதர்களைப் பலவாறு சிந்திக்கவும், செயல்படவும் தூண்டும் கவிதைகளாகும்.

பெண்களைப் பற்றியும், பெண்குழந்தைகளைப் பற்றியும் மிகவும் அக்கறையோடு எழுதியிருக்கும் கவிஞர் ஆண்களின் பங்கு இவர்களின் முன்னேற்றத்திற்கு எவ்வாறெல்லாம் உதவ வேண்டும்.. அல்லது உதவலாம் என்பதைக் கொஞ்சம் சிந்தக்கவேண்டும்; அடுத்த இவரது நூலில் இவை பற்றி எழுதவேண்டும் என்ற வேண்டுகோளை அன்புடன் இங்கே வைக்கிறேன்!.

இதில் ................
"பெண்கள் இட ஒதுக்கீடு
உள் ஒதுக்கீடு இருக்கட்டும்
தருக மன ஒதுக்கீடு."

கொஞ்சம் மனம் .... அமைதிப்படுகிறது............

கவிதையின் இலக்கணமாக....
"மரபா? புதிதா?
என்பது முக்கியமல்ல
மனத்தைக் கவருவதே
கவிதை ."
"மயிலிரகுத் தீண்டலென
மனதைத் தீண்டுவதே
நல்ல கவிதை"

அருமை!

பலரின் வாழ்க்கை சரியான போக்கில் இல்லாமைக்குக் காரணம்..பலப்பல என்றாலும் குறிப்பாக .கவிஞர் சொல்லும் காரணமே எனக்கொள்ளலாம் ..

"கிடைக்காததற்கு ஏங்குவது
கிடைத்ததை உணராதது.......
பலரின் வாழ்க்கை."
"அறிவுறுத்த வேண்டியுள்ளது
மனிதனாக வாழ
மனிதனை."

நல்ல கவிதைகள் ......

ஆயிரம் கவிதைகளைப் புனைந்த கவிஞரின் கவிதைகளை அணு அணுவாக ரசிக்க 'ஒரு நூறு நாட்களாவது தேவை' ஒரு நூறு பக்கங்கள் எழுத..எனக்குள் ஆசைதான் நானே எல்லாவற்றையும் ' நூல் நயத்தில் 'எழுதிவிட்டால்................? என் போன்ற வாசக எழுத்தாளர்களுக்கு அன்புடன் வழி விடுகிறேன்.

நண்பர் மேலும் பல அரிய, சிந்தனைக் கவிதைகளைத் தொடுக்க வாழ்த்துக்கள்!

## யாருமில்லாத மேடையில்

யாருமில்லாத மேடையில் ஒத்திகை பார்க்கிறேன்
யான் பரதம் ஆடிப் பார்க்கிறேன் நன்றாக!

பக்க வாத்தியம் வாசிக்கவும் ஆள் இல்லை
பார்த்து ரசிக்கவும் ஒருவரும் இல்லை!



எனக்கு நானே ரசிகனாகி ஆடுகின்றேன்
என் ஆட்டத்தைச் செம்மையாக்க முயலுகின்றேன்!

கற்றுக் கொடுத்த குரு மேடையில் இல்லை
கற்றறிந்த விதத்தில் ஆடிப் பழகுகின்றேன்!

ஒரே நேரத்தில் பாடியபடியே ஆடுகின்றேன்
ஒருவரும் உடன் இல்லாததால் ஓங்கி ஆடுகின்றேன்!

அரங்கேற்றம் செய்வதற்கான பயிற்சிதான் இது
அரங்கத்தில் ஆட்கள் இல்லை ஆடி மகிழ்கிறேன்!

இன்னும் சில நிமிடங்களில் எல்லோரும் வருவர்
அப்போது எந்தன் நடனம் கண்டு மகிழ்வர்!

தனிமையில் ஆட வேண்டுமா? சிந்திக்கவில்லை
தனிமையே இனிமை என்று பயிற்சி செய்கிறேன்!

யாருமில்லாத மேடை கிடைப்பது கடினம்
யான் கிடைத்த நல்வாய்ப்பை பயன்படுத்துகின்றேன்!

முயற்சி பயிற்சி இருந்தால் முன்னேறி விடலாம்
முன்னோர்கள் சொன்ன சொற்கள் அர்த்தமுள்ளவை!

உனக்கெல்லாம் ஆட்டம் வருமா? என்று
ஒருவன் என்னைப்பார்த்து கேள்வி கேட்டான்!

எனக்கும் ஆடத்தெரியும் என்பதை நான்
என்னிடம் கேட்டவனிடம் நிரூபிக்க வேண்டும்!

அரங்கேற்றத்தின் போது அவனும் வருவான்
அற்புத நடனம் கண்டு அசந்து போவான்!

முயன்றால் முடியாதது உலகில் எதுவுமில்லை
முயன்று பயின்று வெல்வது உறுதி!

எந்த ஒரு செயலையும் ஈடுபாட்டுடன் செய்தால்
அந்த செயலில் சாதனை நிகழ்த்திட முடியும்!



தயக்கம் கூச்சம் தள்ளி வைத்து விட்டு
தரணியில் முயன்றால் உச்சம் தொடலாம்!

யாருமில்லாத மேடையில் நடனம் பயில்கின்றேன்
யாவரும் பார்க்கும் நேரம் சிறப்பாய் இருக்கும்!

**கவிஞர் இரா. இரவி!**







## ஆண்கள் தின நல்வாழ்த்துக்கள்.

பேருந்தில் எத்தனை முறை
மாறி உட்கார்ச் சொன்னாலும்
சலிக்காமல் பெண்களுக்காக
உட்காரும் ஆண்களுக்கு
வாழ்த்துக்கள்.

சினிமாவோ திருமணமோ
எங்கு சென்றாலும்
குழந்தையைத் தூக்கி
வைத்துப் பார்த்துக்
கொள்ளும் பொறுப்பை
ஏற்கும் ஆண்களுக்கு
வாழ்த்துக்கள்

முப்பத்தைந்து வயது
வரையிலும் குடும்ப
சூழ்நிலை காரணமாக
திருமணம் செய்து
கொள்ளாமல்
மாடாய் உழைத்துக்
கொண்டிருக்கும்
ஆண்களுக்கு வாழ்த்துக்கள்

கிரிக்கெட் மேட்ச் மற்றும்
செய்திகளை சீரியல்
இடைவேளையில் மட்டும்
பார்த்து மனைவிக்காக
விட்டுக்கொடுக்கும்
ஆண்களுக்கு வாழ்த்துக்கள்

தான் சம்பாதிக்கும் பாதிப்
பணத்தைதன் தங்கையின்
திருமணத்திற்கு
சேர்த்து வைக்கும்
நல்உள்ளங்களான
ஆண்களுக்கு வாழ்த்துக்கள்

ஊருக்கே ராஜா ஆனாலும்
மனைவியிடம் மட்டும்
குடும்பத்துக்காக
அடங்கி இருக்கும் அனைத்து
ஆண்களுக்கு வாழ்த்துக்கள்

ஆண்களுக்கும் வெட்கம்
உண்டு தன் முதல் காதலிக்கு
காதல் கடிதம் கொடுக்கும்
நேரத்தில்...

ஆண்களுக்கும் கூச்சம்
உண்டு திருமணப் பேச்சை
அம்மா முதன்முதலாய்
சொல்லும் நேரத்தில்....

ஆண்களுக்கும் மாதாந்திர
வலி உண்டு மாசக்கடைசி
மூன்று நாளில் குடும்பத்தை
ஓட்டும் நேரத்தில்...
ஆண்களுக்கும் பிரசவ
வலி உண்டு மனைவி
தலைப்பிரசவத்தில் உள்ளே
இருக்கும் நேரத்தில்...

ஆண்களுக்கும் பயம் உண்டு
நேர்முகத்தேர்வில் குடும்பப்
பொறுப்பை ஏற்று அவர்கள்
கேட்கும் நேரத்தில்...

ஆண்களுக்கும் கற்பு உண்டு
காதலி இருக்கும் போது
கண்டவள் பேசும் நேரத்தில்..

ஆண்களுக்கும் திமிர் உண்டு
அனைத்து வலிகளையும்
சேர்த்து அழும் நேரத்தில்..

ஆண்களுக்கும் அழகு
உண்டு ஆங்காங்கே
அரும்பு மீசை முளைக்கும்
நேரத்தில்....

ஆண்களுக்கும் மானம்
உண்டு அலுவலகத்தில் நாலு
பேர் முன்னே
மானேஜர் திட்டும் நேரத்தில்..

ஆண்களுக்கும் அழுகை
உண்டு பல ஏமாற்றங்களை
நெஞ்சில் சுமந்த நேரத்தில்...

ஆண்களுக்கும் தாய்மை
உண்டு தன் மகளை
ஆசையாக கொஞ்சும்
நேரத்தில்...

ஆண்களுக்கும் நாணம்
உண்டு காதல் சொன்னதும்
காதலி முகம்
பார்க்கும் நேரத்தில்....

ஆண்களுக்கும் பொறுப்பு
உண்டு தனக்கு சாப்பிடாமல்
தன் குழந்தைக்கு
ஊட்டும் நேரத்தில்..

ஆண்களுக்கும் மனசு உண்டு
அந்த மனதில் ஈரம் உண்டு
அந்த ஈரத்தில் பாசம் பரிவு
உண்டு அந்த பரிவில்
மனைவி மக்கள் உண்டு
அந்த மனைவியிடம் உயிர்
உண்டு அந்த உயிரில் அவள்
மட்டுமே உண்டு.

## அவர் வருவாரோ?

அவர் வருவாரோ?
அவர் வருவாரோ?
மாலை வந்ததும்
வருவேன் என்றதும்..
மறந்து போகாமல்..
விருந்து உண்பதற்கு..
அவர் வருவாரோ?
அவர் வருவாரோ?

இனிய கனிகளுண்டு..
இதழில் தேனுமுண்டு..
விடிய விடிய இங்கு..
விருந்து நடப்பதுண்டு..
இலையில் விருந்துவுண்டு
இடையில் ரசமும் உண்டு..
கலைகள் அறுபத்துமூன்று..
கற்று தேர்ந்திடவே..
அவர் வருவாரோ?
அவர் வருவாரோ?

மதுவில் விழுந்த வண்டு
மயக்கம் மிகவும் கொண்டு
தவழ்ந்து தவழ்ந்துவந்து
மடியில் விழுந்ததுண்டு!
இன்று மட்டுமல்ல..



நாளை
வரையிலுண்டு
என்று
நினைத்தபடி..
இரண்டு
கலந்து ஒன்று..
அவர்
வருவாரோ.. அவர்
வருவாரோ..!

**வே.கல்யாண்குமார்.**

## முகமூடி !

தேர்தல் வரப்போகிறது...
அரசியல்வாதிகள்
முகமூடி அணிய தயாராகி
விட்டார்கள்....

நல்ல மனிதனாய்
ஒரு முகமூடி....

சாதியத்தலைவனாய்
ஒரு முகமூடி....

பணிவிடை செய்பவனாய்
ஒரு முகமூடி....

கூப்பிட்ட குரலுக்கு ஓடோடி
வருபவனாய் ஒரு முகமூடி....

ஏழைகளின் நண்பனாய்
ஒரு முகமூடி....

சமத்துவத்தின் தலைவனாய்
ஒரு முகமூடி....

இதுவெல்லாம் தற்காலிக
முகமூடிகள்.... தேர்தலில்
வென்ற பின் முகமூடிகள்



கழட்டப்படும்...
உண்மை
முகம்
வெளியே
காட்டப்படும்!

**எம்.பி. தினேஷ்.**
கோவை

## நிஜங்கள்

சகிக்க இயலா கேவலமாய்
சிகை திருத்தம் செய்யும்
இந்தக் கால இளைஞனை
கேள்வி கேட்க இயலாது

பிறரிடம் கடன் பட்டாவது
இரு சக்கர வாகனம்
வாங்கித் தர வேண்டும்
என வெட்கமின்றி
அடம் பிடிக்கும் வாரிசு

நிறைவேற்றாவிடில் உயிர்
துறப்பது திண்ணமெனும்
மனித வெடிகுண்டு மிரட்டல்

பாசமான தாய் தந்தையைத்



கடைசியில்
தள்ளுவ
தென்னவோ
முதியோர் இல்ல
வாசல்படி

**பி. சுரேகா,**
சென்னை.

## பந்தலிலே பாடவா!

பார்த்து சிரிக்கும் பூ அழகை
பந்தலிலே பாடவா!
பழகிக் களிக்கும் பசுமையிலே
பரவசமாய் ஆடவா!

வாத்து போல நடை நடந்து
வாழ்க்கை பாதை தேடவா!
வண்டு போல ரீங்கரித்து
வசந்த தென்றல் போலவா!

கோர்த்து வைத்த முத்து
போலகொஞ்சி கொஞ்சி
சிரிக்க வா!கோல மயிலின்
தோகை போல கொள்ளை
அழகை பறிக்க வா!

சேர்த்து வைத்த செல்வம்
போலசேர்ந்து வாழ
தெரிந்துவா! சேவல் கூவும்
காலை போல சேர்ந்த நட்பை
புரிந்து வா!

ஆர்த்தெழுந்த வெள்ளம்
போல அறிந்த கருத்தை
சொல்லவா! ஆக்கபூர்வ
சிந்தனைக்குள் ஆழ அமிழ
மெல்லவா!

போர் தொடுத்த வீரன் போல
போக வேண்டும்; போகவா!
போற்றும் நல்ல பண்பை
கொண்டு போற்றித் திகழ
வாழவா!

**வெ. தமிழழகன்**
எம் ஏ பி எட்
சேலம்

## எல்லோருக்கும் உண்டு போதை !

வண்டு கூட மலரில் அமர்வது
தேன் உண்ணும் போதைக்கு
தானே !

அரசியல்வாதிக்கும் உண்டு
பதவி போதை !

கள்வனுக்கு திருடுவதும் ஒரு
போதை தானே !

புகைப்பவனுக்கு சிகரெட் ஒரு
போதை !

ஏழை குடிமகனுக்கு மது
அருந்துவதால் தன்னை
தைரியசாலியாக காட்டிக்
கொள்வதும் ஒரு போதை !

கவிஞனுக்கு கவிதையின்
முதல் வரி தண்ணீர் பாட்டில்
போல.... இரண்டாம் வரி
தொட்டுக் கொள்ளும்
ஊறுகாய் போல....
மூன்றாம் வரி ஜானிவாக்கர்
ஏப்பு போல....
முன்றும் கலரும்போது
நெப்போலியன் வீரத்தை
போல் பொங்குகிறது
கவிதை....

மயக்கம் இருக்கும் வரை
கவிதை தொடரும்....
தைரியம் பிறக்கும்...
எழுந்து நடக்கும்போது நடை
தள்ளாடும்...

எல்லாம் போதும் இனி குடி
வேண்டாவே வேண்டாம்...
என்று இருக்கையிலே ...

"தல இன்னொரு கட்டிங்
வேணுமா !"

என்ற நண்பனின்
கேள்விக்கு மறுப்பேதும்
சொல்வதற்க்கில்லை !

**எம்.பி.தினேஷ்.**
கோவை

## ஹைக்கூ !

அன்று இங்கிலாந்திடம்
இன்று உலக நாடுகளிடம்
இந்தியா !

தீமையிலும் நன்மை
தெரியவில்லை தொடர்கள்
மின்தடை !

தாலி ஆசீர்வாதம்
மணவிழாவில்
கையில் பிடித்தபடி !

வந்தது ஒளி
மின்சாரமின்றி மின்னல் !

கண் சிமிட்டுகின்றாள்
வானிலிருந்து நட்சத்திரம் !

என்ன வளம் இல்லை நம்
தமிழ் மொழியில்!
ஏன் ? கையை ஏந்த
வேண்டும் பிற மொழியில்!

உலகின் முதல் மனிதன்
பேசிய மொழி தமிழ் !
உலகம் முழுவதும் பரவியுள்ள
மொழி தமிழ் !

உலகின் முதல்மொழி
தமிழ்மொழி என்பதை
உரைத்தார் அன்றே
பன்மொழி அறிஞர் பாவாணர்!

பன்னாட்டு ஆட்சிமொழியான
மொழி தமிழ் !
பண்டைக் காலம் முதல்
ஆளுமை மொழி தமிழ் !

இணையத்தில் வாகை சூடிய
மொழி தமிழ் !
இதயத்தில் இடம் பிடித்த
மொழி தமிழ் !

மூவேந்தர்கள் போற்றி
வளர்த்த மொழி தமிழ் !
மூத்த புலவர்கள் கட்டிக்
காத்த மொழி தமிழ் !

எழுத்து பேச்சு
இரண்டிலும் வாழும்
மொழி தமிழ் !
இணையில்லா
திருக்குறளை
ஈந்தமொழி தமிழ் !

மொழி அறியாதவர்களும்
ரசிக்கும் மொழி தமிழ்
மொழியின் பால் ஈர்ப்பு சக்தி
உள்ள மொழி தமிழ் !

செம்மொழி நம் மொழி
உணர்வாய் தமிழா !
செம்மையைக் காத்திட
முயல்வாய் தமிழா !

கலப்பு தாவரத்தில் நன்மை
தரலாம் ! கலப்பு மொழிக்கு
தீமையே தந்திடும் !

கலப்படம் உணவில்
தண்டனைக்குரிய குற்றம் !
கலப்படம் மொழியில் புரிவதும்
குற்றமே !

இலக்கண இலக்கியம்
நிறைந்த மொழி தமிழ் !
எண்ணிலடங்கா சொற்கள்
மிகுந்த மொழி தமிழ் !

இயல் இசை நாடகம் நிறைந்த
மொழி தமிழ் !
இனிய முத்தமிழில் இனிய
மொழி தமிழ் !

தமிங்கிலப் பேச்சிற்கு
முடிவுரை எழுதுங்கள் !
தமிழை தமிழாகவே பேசிட
முயலுங்கள் !

ஆயிரம் மொழிகள் உலகில்
இருந்தாலும்
அழகு தமிழுக்கு எந்த
மொழியும் ஈடாகாது

தமிழன் பெருமையை
நெஞ்சில் நிறுத்து !
தமிழோடு பிற மொழி
கலப்பதை நிறுத்து !

இல்லாதவன் பிச்சை எடுத்தல்
நியாயம் ! இருப்பவன் பிச்சை
எடுத்தல் அநியாயம் !



என்ன வளம் இல்லை
நம் தமிழ் மொழியில்
! ஏன் ? கையை
ஏந்த வேண்டும் பிற
மொழியில்.

**கவிஞர் இரா .இரவி**

## கண்ணா மூச்சி:

கண்ணா மூச்சிதான்
கவனமே அதன்மேலே
உண்ணாமல் எண்ணாமல்
உறவாடி விளையாட
ஒடிப் பிடித்து ஒருவர்பின்
ஒருவராய் தேடிப் பிடிக்கும்
விளையாட்டிதுவே
உற்சாகம் தருமிது
உறவினை வளர்ப்பது
பொற்காலம் என்பது
இளமையில் வாழ்க்கையே !!

## இருசக்கர வணிகம்:

இருசக்கர வாகனம்
இணையருடன் பயணம்
இருக்கும் இருக்கைகள்
இதர சாமான்கள்
பொறுப்பாய் ஏற்றிப்



போவது
துணையுடன்
மறுப்பின்றி
சலிப்பின்றி
மொத்தமாய்
வணிகம் !!

**வைரமணி**
சென்னை

குறள்வெண் செந்துறை!

## வானவில்!

ஏழு வண்ண வானவில்லே
எழிலாய்க் காணும்
வானவில்லே வாழும் நாமும்
பார்த்திடலாம் வண்ண
நிறங்கள் சேர்த்திடலாம்!

அழகின் சின்னம்
வானவில்லே அன்பின்
வடிவம் வானவில்லே
மழையே ஓய்ந்தால்
வந்திடுமே மகிழ்வை
நெஞ்சில் தந்திடுமே!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்.**

## வாய்மை எனப்படுவது யாதெனின்...

மண்ணுக்கும்
விண்ணுக்குமான போட்டியில்
மரங்களைத் தொலைத்த
அவலம்.

வயலுக்கும் வாழ்வுக்கும்,
நிழலுக்கும் போராட
எவருமில்லை இங்கு.

நகரமயமாதலில் குடி'கள்
விரிவடைகிறது அரசுக்கோ
வருமானம் தாராளம்.
பசித்தீ யால்
பற்றி எரிகிறது வயிறுகள்.

சமூக நீதி
காட்சிப்படுத்தப்படுகிறது.
நடைமுறையில்லாமுடம்
தோற்றுப் போகிறது.

கோயில் பிரசாதங்களில் கூட
கலப்படம். சோதித்துப்
பார்த்தார்களா முதலாளிகள்.
கடவுளும் அவர்களை
தண்டிக்கவே இல்லை.

இறைச்சி ஏற்றுமதியில்
முன்னிலை வகிக்கும்
நாட்டில் ஆதிக்க சக்திகளின்
பின்னணியில் அப்பாவிகளை
தண்டிக்கும் கோழைகள்.

உலகுக்கு மட்டுமே
உபதேசம். உள்ளூரில்
ந(ம)லிந்தோரைக்
கொல்லும் அவலம்.
வாய்மை எப்போது தான்
வெல்லும்?... உண்மையும்
அப்போது சொல்லும் !...

**எறும்பூர் கை. செல்வகுமார்,**
செய்யாறு.

## வளர்சிதை வனிதையே....

கொடநாட்டின் குளிரே...

பனிப்பிரதேசத்தின்...அனலே...

சிந்தனை சீறிப்பாயும்
சிறுமலரே..

வந்தனம் புரியும்
எண்திசையும்...இளமலரே...

சிக்கிமுக்கிக் கல் உனது
கண்கள்..

வழிமறிக்கும் உனதுவிழிகள்...

மாஞ்சோலை...ரதியே
மண்சாலை...மணமே

நேரில் வந்து விடு...
தேனாய் ...இனித்து..விடு...

**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி

1. ஒரு நூல் நிலைய கதவு
திறக்கப்படும் போது ஒரு
சிறைச்சாலை கதவு
மூடப்படுகிறது

2. மரணம் என்பது
நல்லவர்கள் இறந்தால்
அவர்களுக்கு ஓய்வு
கெட்டவர்கள் இறந்தால்
மற்றவர்களுக்கு ஓய்வு

3. வேஷம் போடத்
தெரிந்தவனுக்கு ரோஷம்
இருக்காது உறவுகள்
இருக்கும் வேஷம் போடத்
தெரியாதவனுக்கு
ரோஷம் இருக்கும்
உறவுகள் இருக்காது

4. காதலில் அரிச்சந்திரனாக
இருந்தால் கூட பொய்
சொல்லி தான் ஆகணும்
கல்யாணத்தில் அர்னால்டு
ஆக இருந்தாலும் அடி
வாங்கித்தான் ஆகணும்

5. மணல் லாரியில் இருந்து
ஒழுகும் நீர் தண்ணீர் அல்ல
அது ஆற்றைப் பிரிந்த
மணலின் கண்ணீர்

6. எத்தனை நாள் இந்த
மண்ணில் இருந்தோம்
என்பது முக்கியமல்ல



எத்தனை
பேரின்
மனதில்
இடம்
பிடித்தோம்
என்பதே
முக்கியம்

**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி

## நெல்லை இறைவன்

நெல்லை அப்பன் சிவநேசன்,
நினைத்த மனத்தில்
நின்றிடுவான் !,
புல்லைத் தடுக்கி புற்றினிலே,
பூமி காக்கப் புறப்பட்டான்!

நெல்லைக் காத்து நிழலாக,
நீரின் பாதை மாற்றிட்டான்!

கல்தூண் இசையில் களி
நடனம், காட்டு சபையில்
ஆடுகின்றான்!

இறைவி

பொருநை நதியின்
கரையோரம், பூமி காக்கும்
பெண்கோலம்!

அருளை வழங்கி
அமர்ந்திருக்கும் அன்னைத்
தாயின் சிவக்கோலம்!

உருளும் தேரில் ஊர்கோலம்
உண்மை அன்பைக் கண்
தேடும் !



கருணை
அன்பின்
அடையாளம்,
காந்தி
மதியாள்
விழிக்கோலம்!

**திருமதி.**
**இரா. இராஜாமணி**
ஈரோடு.

## கோவா

இந்தியாவின் மேற்கில்
இயற்கை அழகு
மிளிரும் இனிமையான
எழில் கொஞ்சும்
அழகான கோவா

நெய்தல் நிலத்தில்
நிழலாடும் நீலவானம்,

போவென, வாவென
அழைக்கும் அலைகள்

கடல் உணவுக்கு
பஞ்சமில்லா கடற்கரை

மது, மாதுவின்
சூதாட்ட கேளிக்கைகள்

மனதையும், படகையும்
தாலாட்டும் தென்றல்

உடலும், உள்ளமும்



மகிழ
ஒளிரும்
நட்சத்திரங்
களோடு
கனவில்
ஒரு
சுற்றுலா

செல்வோம் வாரீர் !

**நா.பத்மாவதி**
கொரட்டூர்

## ஜான்சி ராணி லட்சுமி பாய்!

நேரிசை வெண்பா!

விடுதலைப்போராளி
வீறுடை ஜான்சி
கெடுதலை நீக்கியே
கேண்மை... படைக்கவே
முன்வந்தும் ஆங்கிலேயர்
முன்னேறக்காண்கிலர்
தன்னிச்சைகொண்டார்
தக!

இந்திய தேசிய ஈடிலா
வாதத்தின் விந்தை
அடையாளம்
வீறுடை... சிந்தை
மணிகர்ணிகாதானே
மாண்புசக்தி வாய்ந்த
அணியாளர் லட்சுமிபாய்
ஆம்!

வீர மரணமே வீறுடன்
ஏற்றாளே சூரத் தனமுமே
சோர்விலாத்.. தீரமும்
ஜான்சிராணி கொண்டாளே
சந்தன வாசமே
மானாகத் துள்ளினாள்
மாண்பு!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.

வளர்சிதை வனிதையே....
கொடநாட்டின் குளிரே...
பனிப்பிரதேசத்தின்...
அனலே...

சிந்தனை சீறிப்பாயும்
சிறுமலரே..வந்தனம் புரியும்
எண்திசையும்...இளமலரே...

சிக்கிமுக்கிக் கல் உனது
கண்கள்.. வழிமறிக்கும்
உனது விழிகள்...

மாஞ்சோலை...ரதியே
மண்சாலை...மணமே
நேரில் வந்து விடு...
தேனாய் ...இனித்து..விடு...

**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி



## சென்ரியு கவிதைகள்

இரண்டு நாட்களாக
வரைந்து
கொண்டிருக்கிறேன்...
ஆமையின் படத்தை

# நெல்லிக்கனி வியாபாரிக்கு
கடன் கொடுத்து உதவினார்
வங்கி மேலாளர் அதியமான்

#காற்றடித்ததும்
கையைவிட்டு
துள்ளித் துள்ளி ஓடியது

மான் மார்க் குடை

#மறந்தே போனான்
வல்லாரைக் கீரை விற்றவன்
காசு வாங்க

# நண்பர் அப்துல்லாவோடு
காசி நகருக்குப் பயணம்
கிருத்துமஸ் விடுமுறையில்

# புத்தனோடு சுயமி
ஆசையோடு எடுத்தேன்
புன்னகை காணவில்லை.

**கா.ந.கல்யாணசுந்தரம்**

# வாசகர் கடிதம்

போரூர் வி.கே. லஷ்மிநாராயணன் எழுதிய "சிடு (சிரி) மூஞ்சி!" ஒரு விடுப்புக்காக என்னவெல்லாம் செய்ய வேண்டியுள்ளது என்பதை உணர்த்தியது.

புதுக்கவிதைகள் பகுதியில் கவிஞர் அனந்தராமன் ராணுவ சிப்பாய்கள் கரங்களில் ஆயுதங்கள் நூலகங்களில் வாசகர்கள் கரங்களில் உள்ள புத்தகங்கள் என இரண்டையும் ஒப்பிட்டது மிகச் சிறப்பு.



-ஸ்ரீகாந்த்
திருச்சி

GREAT OPPORTUNITY
AT
ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
விளம்புரம்
vilambarampage@gmail.com
7789941009



AllIndiaJobz
FREE Job Placements
www.allindiajobz.com
FREE JOB PLACEMENT
WHATSAPP US / CALL US
9337501889/7789941009
Urgent Hiring !! Hurry Up
Multiple Job Openings for Freshers
Refer Your Friends who are searching jobs



WANTED
EXPERIENCED
SOCIAL MEDIA
CONTENT CREATORS
94386 10756

Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250-Rs500 per day
Work From Home Jobs
Ananda Bhaskar
Rs 8000 - Rs 15000 per month
9337501889
7789941009

பிரதமர் மோடி இன்று கோவை வருகிறார்
தமிழகம் முழுவதும் இன்று ஜாக்டோ ஜியோவினர் ஆர்ப்பாட்டம்/வேலை நிறுத்தப் போராட்டம்
புதுக்கோட்டை அருகே தனியார் பஸ்சில் 4.5 கோடி போதைப் பொருள் சிக்கியது
வங்கி அதிகாரிகள் முறைகேட்டுக்கு உடந்தையாக இருந்தால் கடும் நடவடிக்கை பாயும்#சென்னை காவல் ஆணையர் எச்சரிக்கை
பச்சிளம் குழந்தைகளுக்கு கழுதைப் பால் கொடுக்கக் கூடாது#ஸ்டான்லி மருத்துவர் கணேஷ்
றிவுறுத்தல்=காலங்காலமாக கழுதைப் பால் கொடுக்கிறபோது செலக்டிவ் அம்னீஷியாவில் எங்கே போயிருந்தார்?
ஈரோட்டில் 70 வயது பூர்த்தி அடைந்த 25 மூத்த தம்பதியர்களுக்கு சிறப்பு செய்து சீர் வரிசை
சூரிய குடும்பத்தின் 'வேக்குவம் கிளீனர்' என்ன? அதன் கண் சொல்லும் சேதி என்ன?
நடிகர்கள் அஜீத் குமார், சூர்யா காதலில் தூது போனது குறித்து மனம் திறந்த டைரக்டர் ரமேஷ் கண்ணா
புதுக் கவிதைகள் அருமை
வாசகர் கடிதங்கள் நேர்த்தி
14 பல்கலைக் கழகங்களில் துணை வேந்தர்கள் இல்லை#உச்ச நீதி மன்றத்தில் தமிழக அரசு குற்றச்சாட்டு
சென்னை: நகைப் பட்டறையிலிருந்து 220 பவுன் திருடிய ஊழியர் உட்பட நால்வர் கைது
ரூ.13.17 கோடியில் புதிய / முடிவுற்ற திட்டங்கள்#செந்தில் பாலாஜி எம் எல் ஏ தொடங்கி வைத்தார்
குட்கா கடத்திய அசாம் இளைஞர்கள் நால்வர் கைது
பாம்புக் கடிக்கு குதிரையின் உடம்பிலிருந்து மருந்து
வங்க தேசத்தை விட்டு வெளியேறியது வருத்தமளிக்கிறது #முன்னாள் பிரதமர் ஷேக் அசீனா உருக்கம்
அமெரிக்காவிடமிருந்து 2.2 மில்லியன் டன் எல்பிஜி வாங்க இந்தியா ஒப்பந்தம்
குடும்பச் சண்டை வலுத்தது#லாலு பிரசாத் யாதவ்வின் மூன்று மகள்களும் வீட்டை விட்டு வெளியேறினர்
மண்டல பூஜைக்காக சபரிமலை ஐயப்பன் கோவில் நடை திறப்பு
இந்தோனேஷியாவில் நிலச் சரிவு 34 பேர் மாயம்+18 பேர் பலி
ஃபிரான்ஸிடமிருந்து 100 ரஃபேல் போர் விமானங்களை வாங்கும் உக்ரைன்
ரஷியாவுடன் வர்த்தகம் செய்யும் எந்த நாடும் கடுமையாக தண்டிக்கப்படும் #அமெரிக்க அதிபர் டிரம்ப் மிரட்டல்
அமெரிக்காவும் நட்பு நாடான டிரினிடாவும் இணைந்து கூட்டு ராணுவப் பயிற்சி
வாட்சப்புக்கு போட்டியாக எக்ஸ் தளத்திலும் சாட்டிங் வசதி அறிமுகம்



-பி.சுரேகா
சென்னை

மதிப்பிற்குரிய ஆசிரியர் அவர்களுக்கு,

வணக்கம். 19.11.25 அன்றைய தமிழ்நாடு இ பேப்பர். காம் முதல் பக்கத்தில் தமிழகம் முழுவதும் "ஜாக்டோ ஜியோ" வினர் வேலை நிறுத்த போராட்டம் என்ற செய்தி அதிர்ச்சியாக இருந்தது. புதுக்கோட்டையில் தனியார் பஸ்ஸில் ரூபாய் நாலரை கோடி போதை பொருள் சிக்கியது வேதனையான செய்தியாக இருந்தது. இன்றைய பஞ்சாங்கம் மிக அற்புத நாளாக இருக்க எனக்கு உதவியது.

திருக்குறளை அருமையான பொருளுடன் படித்து மகிழ்ந்தேன். அதிமுக பொதுச் செயலாளர் தமாகா தலைவர் வாசன் அவர்களை சந்தித்த செய்தி படத்துடன் பார்க்கும் போது அதை நேரில் சென்று பார்த்தது போல ஒரு மகிழ்ச்சியாக இருந்தது.

தேங்காய் பால் மிகவும் அற்புதமான உணவு. அதை சாப்பிட்டால் அது இதய நோயால் நோயாளிகளுக்கு ஆபத்தா என்ற கேள்வியும் கேட்டு அதற்கான தீர்வையும் பதிலாக சொன்ன நலம் தரும் மருத்துவ பகுதிக்கு மனமார்ந்த பாராட்டுக்கள். காஞ்சிபுரம் கூட்டுறவு வார விழாவில் பல மகளிருக்கு நலத்திட்ட உதவிகள் அமைச்சர் ஆர் காந்தி வழங்கினார் என்ற படத்துடன் பார்க்கும் போது மகிழ்வாக இருந்தது.

தினம் ஒரு தலைவர்கள் பகுதியில் இன்று டி எஸ் துரைராஜ் அவர்களின் வரலாறு பற்றிய செய்திகள் மிகவும் அற்புதமாக இருந்தது பாராட்டுக்கள்.

பல்சுவை களஞ்சியம் பக்கத்தில் பிரசுரமான அனைத்து தகவல்களும் மிகவும் அருமை. மீம்ஸ் பார்த்து ரசித்து சிரித்து என்னை மறந்து மகிழ்ந்தேன்.

மாவட்டத்தில் குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் போதைப்பொருள் எதிர்ப்பு என்று உறுதிமொழி எடுத்த அந்த பள்ளி மாணவர்களைப் பார்த்தது இந்த பிஞ்சு உள்ளங்கள் நல்லபடியாக இதை கைப்பிடி கடைப்பிடித்து சமூகத்தை உயர்த்த வேண்டும் என்று பாராட்டினேன்.

சுற்றுலா பக்கத்தில் இன்று ஆன்மீக சுற்றுலா மிகவும் அற்புதம். பஞ்ச வைத்தியநாத தலங்கள் என்று மிக அருமையான தகவலை சொன்னது ஆன்மீக மக்களுக்கு மட்டுமல்ல சுற்றுலா செல்ல விருப்பமுள்ளவர்கள் அனைவருக்கும் பயனுள்ள தகவல்.

தொழில்நுட்பம் மற்றும் அறிவியல் செய்திகள் என்று பாம்பு கடிக்கு குதிரையின் உடம்பிலிருந்து மருந்து எடுத்த செய்தி நல்ல விஞ்ஞான வளர்ச்சியை மிக அழகாக சொன்னது பாராட்டுக்குரியது.

மும்பை ஆமதாபாத் புல்லட் ரயிலில் நம் பிரதமர் மோடிஜி நேரில் ஆய்வு செய்தது மிகவும் அருமையான தகவல். பாராட்டுக்கள் குடும்ப சண்டை வலுத்தது. லாலுவின் மூன்று மகள்களும் வீட்டை விட்டு வெளியேறினார் என்று அரசியலில் சொன்னது அங்கு நடப்பதை அப்படியே புரிய வைத்தது. பிரான்சிடம் இருந்து 100 ரபேல் போர் விமானங்களை உக்கிரன் நாடு வாங்கப் போகிறது என்ற தகவல் மிகவும் அருமை நாகை மீனவர்கள் 31 பேர் நிபந்தனைகளுடன் விடுதலை செய்யப்பட்ட கொழும்பு செய்தி அயல்நாட்டு செய்தியாக ஆவலுடன் படித்து தெரிந்து கொண்டேன்.


புத்துணர்ச்சி தரும் புதன்கிழமை விடியலை மேலும் புத்துணர்ச்சி தரும் செய்திகளாக கையிலே அலைபேசியில் கொடுத்த தமிழ்நாடு இ பேப்பரின் ஆசிரியர் குழுமத்திற்கு மனமார்ந்த பாராட்டுக்கள்.



-உஷா முத்துராமன்

ADVERTISE WITH US!

Get Free Jobs Alert on Your WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address on Above Number
Josh Jobs Team Give u Daily Update of Govt. as Well as Private Jobs

CREST THE BEST @ ANAKAPUTHUR
SPOT BOOKING OFFERS
1 BHK FLAT ₹.22.99 L*
2 BHK FLAT ₹.38.50 L*
3 BHK FLAT ₹.56.99 L*
Onwards

visit our site www.crest.homes
CREST HOMES PVT LTD
Elegant Affordable...
89399 65050

NR MAHINDRA WORLD CITY NXT TO VIKAS MANTRA SCHOOL
DTCP & RERA அங்கீகாரம் பெற்ற புதிய லேஅவுட் மனைகள்
1200-2400 சதுர அடி விற்பனைக்கு
ANUGRAHA
CONTACT
90477 34343

GPHOMES
NEXT TO PATTABIRAM (TIDEL PARK)
NEAR SEVVAPET RLY. STN.,
DTCP APPROVED VILLA PLOTS ₹30* Lakhs onwards
INDIVIDUAL HOUSE ₹13.5* Lakhs onwards
MOGAPPAIR 2.0
NEAR AYANAMBAKKAM VELAMMAL SCHOOL
3 BHK INDIVIDUAL HOME
₹1.20* Cr.
6384 003 003

Launch Your Own Secure Crypto MLM Software Today!
@4999/- onwards

CALL: 98537 19337, 74369 14247
www.mlmperfect.com

பூமி விற்பனைக்கு
கள்ளப்பாளையம் பஸ் ஸ்டாப் அருகில்
3½ ஏக்கர்
ரெசிடென்சியல் பூமி விற்பனைக்கு
தொடர்புக்கு:
99434 53815
97863 99079

SITE FOR SALE
40X60
SOUTH FACING
40 FEET ROAD
AERIAL VIEW PROPERTY SOLUTION
PRR NAGAR
BEHIND-BIMETAL BEARINGS
P.N.PUDUR
COIMBATORE-641041
78717 63629

குடோன் வாடகைக்கு விடப்படும்
கோவை வடவள்ளி
IOB காலனியில்
3614 sq.ft with EB Service 150HP
CT: 88708 68595

GODOWN FOR RENT
NEW GRADE-A WAREHOUSE
20,000 sqft
Location: Salem
✣ 12th KM Salem - Chennai NH
✣ Ample Truck Parking
Dock Leveller
72000 51508

நிலம் விற்பனை
சேரன்மஹாதேவி அருகில், திருநெல்வேலி மாவட்டத்தில்,
30 ஏக்கர் நிலம் விற்பனைக்கு
Good Water, Clear Title
நியாயமான விலை
Rs.13 Lacs per ஏக்கர்
74832 05910

ADMIN EXECUTIVE
Salary: 18K to 20K
Experienced system knowledge
BILLING EXECUTIVE
Salary: 18K to 20K
Any / Preferred B.Pharm, D.Pharm
MARKETING EXECUTIVE
Salary: 30K to 35K
(Monthly. Inc + Allow) Min 3yrs Exp
Shri Kalki Speciality's (P) Ltd., D.No. 4/22, Ramakrishna St, T.Nagar.
Ph: 8925266127 / 8925713334

WANTED
FOUNDRY SUPERVISOR
SENIOR ACCOUNTANT
ACCOUNTS ASSISTANT
Sathy Road, Kovilpalayam
88700-04951 / 52

WANTED
Receptionist
FOR DENTAL CLINIC
(FEMALE CANDIDATE)
94432 43070
Peelamedu, Coimbatore

WANTED
○ Marketing / Sales Manager & Executives
○ Service Manager & Supervisor
○ Telecaller / CRO (F)
○ Store incharge(M)
SWASTIK REFRIGERATION TRADERSS
Airconditioner Spare parts Distributors
Kodambakkam & Porur
98410 42122

WANTED
Tour Marketing Executive
For reputed engineering company in Porur.
Location: South India (extensive travel)
Experience: 1-3 years in marketing/sales, preferably engineering sector. Good communication in English, telugu and hindi.
Send CV to: [workenquiry971@gmail.com]
CALL @ 89258 18582

PERMANENT JOB
➜ Plumbers (பிளம்பர்கள்)
➜ Water Purification Service Technicians
MNC COMPANY
9003101308

WANTED
FEMALE / MALE STAFF
For Office at RS Puram
1. ADMIN / ADMIN ASSISTANT
2. ACCOUNTANT
3. OFFICE BOY
Min 3yrs Experience
email: haasyacom@gmail.com
93622 22222

WANTED
MARKETING HEAD REAL ESTATE
Fixed Salary Rs.25000/- & Above + INCENTIVE
(Monthly up to - 1.5 Lakhs)
Age: 25 to 40 Experienced Only
Office @ Anna Nagar
9790021367

WANTED
30 years old reputed engineering & manufacturing company requires
Mechanical CADD Draftsman
(DME - Exp : 2-3 Years only)
Office Assistant (Female Candidates only)
with computer knowledge & Tally
(Exp 1-2 years) for office @ valasaravakkam
Apply by mail vintechchennai@yahoo.co.in
*Preferences given to nearby candidates

REQUIRED
Bank & Finance
LOAN CONSULTANCY
TELECALLER (F)
Age Below 30 | Fresh/Exp 2Yrs
Qual: +2 or Any Degree
Sal: 12 to 18K + Inc
West CIT Nagar, T.Nagar-35.
ct: 97907 88886

RENTAL COMMERCIAL @ ROYAPURAM
No.247, Suryanarayana Chetty St, Royapuram, Ch-13
1st Floor 2830 Sq.ft, Lift Car Parking
Rent for Office, Bank, Etc.,
Ct: 94440 46328

Industrial / Warehouse FOR RENT
@ Malumichampatti, CBE

Brand New
18,000 sq.ft Buid up Area ✦ 34 feet center height ✦ Bore well with 10,000 Lts Sump ✦ Car parking ✦ Security, Power & Rest room ✦ Compound
99439 11012
93447 20747

கடை வாடகைக்கு
கோவை
பா.நா.பாளையம்
லட்சுமி மில்ஸ் அருகில்
● 60 அடி ரோட்டின் மேல்
● 1800 சதுரஅடி
● தரைத்தளத்தில்
● தண்ணீர் வசதியுடன்
Suitable for: IT Office, Clinic, Laundry, Cloud Kitchen
CONTACT
+ 91 99650 90000

இடம் விற்பனைக்கு
கோவை சத்தி ரோடு
குன்னத்தூர் CRI Pump அருகில்
வடக்கு கிழக்கு பார்த்த கார்னர் சைட்
14.5 சென்ட்
இடம் விற்பனைக்கு.
பிரித்தும் வீடு கட்டி தரப்படும்.
97863-43827

அலுவலக இடம் வாடகைக்கு
நாகர்கோவிலில் 3500 சதுர அடி அலுவலகம் நடத்த வசதியான இடம் வாடகைக்கு உள்ளது.
2 கார் மற்றும் 20 இருசக்கர வாகனங்கள் பார்க்கிங் செய்யும் இட வசதி.
தொடர்புக்கு:
9841062644

## டிரைவர்கள் தேவை

சென்னை, பெங்களூர் மற்றும் திருப்பூர் லைனில் ஓட்டுவதற்கு டிரைவர்கள் தேவை.
ஹெவி லைசென்ஸ் மற்றும் பேட்ஜ் வைத்திருக்க வேண்டும்
தினசரி பேட்டா மற்றும் திறமைக்கேற்ற நல்ல சம்பளம்.

ACCOUNTANT
Tally knowledge must

OFFICE STAFF
+2 or Degree

SKT கார்டன், S.பெரியபாளையம், ஊத்துக்குளி ரோடு, திருப்பூர்.
93676-77779

## WANTED

Arc-Welder-
Compressor Air Tank-6
Gas-Welder Compressor
Air Driyer-5
Service-Engineer-
Compressor-7
Helper-3
Compressor Fitter-2

Jayam Equipments
Ganapathy,
Coimbatore-06
9944642406

## WANTED

We are Looking For
BUSINESS PARTNERS
(MALE / FEMALE)
in Coimbatore
Real Estate Marketing
Call
98945 72840

## ஆட்கள் தேவை

கோவை காட்டூரில் உள்ள இரும்பு வணிக நிறுவனத்திற்கு அனுபவமுள்ள
கேஸ்கட்டர்கள்
மார்க்கர்கள்
ஹெல்பர்கள்
அனுபவத்திற்கேற்ற நல்ல சம்பளம் தரப்படும்
0422 2230352
99949 91236

## WANTED

ALAGU SANITARY & HARDWARES
Ramnagar, Gandhipuram, CBE
- Experienced Staff -
• Sales • Accounts Asst
• Godown Incharge
3 - 5 years experience. F/M
Freshers are also welcome
Attactive Salary + Inc
89032 19125

## ஆட்கள் தேவை

- எலிவேட்டர் இன்ஸ்டாலேஷன் டெக்னீசியன்ஸ்
- எலிவேட்டர் அசெம்பிளி டெக்னீசியன்ஸ்
- எலிவேட்டர் ட்ரெயிளர் சூட்டிங் டெக்னீசியன்ஸ்
- எலிவேட்டர் குவாலிட்டி இன்ஸ்பெக்டர்ஸ்
- எலிவேட்டர் சேஃப்டி ஆபிசர்ஸ்
- எலிவேட்டர் NPD டெக்னீசியன்ஸ்
- கிரிம்பிங் டெக்னீசியன்ஸ்
- சோல்டரிங் டெக்னீசியன்ஸ்
- HINDI SPEAKING DATA ENTRY FRESHER WITH MS-OFFICE KNOWLEDGE
- எலிவேட்டர் இன்ஸ்டாலேஷன் கான்ட்ராக்ட்டர்ஸ்

Candidates with Elevator field Experience & Knowledge are Welcome
jeeva.v@eliteelevators.com
Cell: 8925998689
Elite Elevators

## MACHINE REPAIR TECHNICIAN WANTED

Construction Company in
CALICUT, Kerala
requires Technicians for Bar Bending and Bar Cutting Machine, Mini Lift, Mixer Machine repairing with proven experience in repairing construction machinery.
GOOD SALARY
Accommodation Available
85938 12049

AUTHORISED கருடவேகா INTERNATIONAL COURIER
GARUDAVEGA
A Brand of NexGen Logistics Pvt Ltd

## International Courier Service

ஆண் / பெண்
வேலைக்கு தேவை
கல்வி தகுதி : 10th Std முதல்
Ganapathy, Thudiyalur.
88866 56211

## INDUSTRIAL SALES EXECUTIVE WANTED

FOR REPUTED BEARING DISTRIBUTOR DEGREE/ DIPLOMA IN ENGG WITH EXPERIENCE JOP IS COIMBATORE BASED AND EXTENSIVE TRAVELLING IN AND AROUND.
Send Resume to
cbe@pibl.co.in

## டிரைவர் தேவை

Chairmanக்கு Automatic கார் ஓட்ட அனுபவமுள்ள டிரைவர் தேவை
98414 41844
93455 31270

## WANTED

CHENNAI PROJECT
PIPING
- FABRICATORS
- TIG / ARC WELDERS
- SUPERVISORS
- GRINDERS

90920 08000 / 99421 71692
prateeshengineering@yahoo.co.in

## மகேந்திரா வேர்ல்ட் சிட்டி அருகில்

விகாஸ் மந்திரா பள்ளி அடுத்து
DTCP & RERA
அங்கீகாரம் பெற்ற புதிய லேஅவுட் மனைகள்
1200 - 2400 சதுர அடி
அனுக்ரஹா
தொடர்புக்கு: 90477 34343

## ஸ்ரீபெரும்புதூர் அருகில் உள்ள

கம்பெனிக்கு
50 Staff
தங்குவதற்கு Building வாடகைக்கு தேவை
97899 85835 / 79046 02553

## LAND FOR SALE

COIMBATORE PEELAMEDU
GV RESIDENCY 4.25 cents,
RAMANATHAPURAM KRISHNA COLONY
5.50 and 8 and 11Cents
RAMANATHAPURAM NEAR JUNCTION
1.10Acre & 4Acre
Broker Excuse
Contact: R.Sasikumar
81242 63136

## New House for Sale

@ EB Colony, Veerapandi Pirivu
2BHK House
2.7 cent - North Facing
1000 sq.ft
9751041250

## வள்ளியூர் NH அருகில்

வீட்டுமனை 5 சென்ட் ரூ.2 லட்சம்
வீட்டுமனை 4 சென்ட் ரூ.4 லட்சம்
வள்ளியூர் பூங்கா நகர்
5 சென்ட் ரூ.45 லட்சம்
9940 20 7778

## OMR GOLDEN CITY ALERT!

THIRUPORUR
Sold Out in 2019 - Limited
Resale Plots Now Open!
Starts : Rs.13 Lacs
90% Bank Loan
Call: 9962 888 888

## Commercial Building for Rent

THIRUNINDRAVUR
Main Road 3000Sft, 2nd Floor
Suit for Gym Etc.
REDHILLS - ORR
Main Road 2500Sft, Ground Floor
(Via Redhills to Thiruvallur)
Suits for Showroom, Restaurant.
98412 38854

## கட்டிடம் விற்பனைக்கு

பொள்ளாச்சி நகரில் பிரபல இன்ஜினியரிங் கல்லூரி அருகில் 13 அறைகளுடன் (ALL BATH ATTACHED) கூடிய புதிய கட்டிடம் விற்பனைக்கு
மாத வாடகை வருமானம் ரூ.50,000
CONTACT
98420 14702

## குடோன் வாடகைக்கு

நீலாம்பூர்
கதிர் காலேஜ் ரோட்டில்
500,1000,1600, 2600 சதுரடி
(EB 50HP)
குடோன் வாடகைக்கு
98941 09560

## 2 BHK FIRST FLOOR FOR RENT

DVD COLONY, KOTTAR
MARBLE FLOOR
24 HOUR WATER
9840741033

## ADVERTISE WITH US

CONTACT US
9438610756

## JOB VACANCY

- Nurse (ICU/NICU/OT/Casualty/Labour/Ward)
- Lab Technician
- AC Technician
- Accountant
- Reception - Billing
- House Keeping
- Ward Boy

AMRIT MEDICAL CENTRE
No. 73/28, Dr. Alagappa Road, Purasawalkam, Chennai - 600 084.
Call : +91 7695957120
calling time 11.00 am to 5 pm

## ஆட்கள் தேவை

திருவள்ளூர் மாவட்டம் தண்ணீர்குளம் பகுதியில் அமைந்துள்ள ஸ்ட்கரல் ஸ்டீல் தொழிற்சாலைக்கு PEB / கன்வென்ஷனல் ஃபேப்ரிகேஷன், நன்கு வேலை தெரிந்த ஆட்கள் தேவை.
1. ஒப்பந்ததாரர்கள் (CONTRACTORS)
2. வெல்டர்ஸ் மற்றும் கேஸ்கட்டர்ஸ்
3. கிரேன் ஆப்ரேட்டர்கள்


தங்குமிடம் ESI / PF வசதிகள் உள்ளன.
Ct: 93800 72095 / 98416 46097

## WANTED EXECUTIVES


Age Limit 40 Years
For Chennai, Tiruvallur, Chengalpattu
Attractive Salary Package, PF, ESI & Bonus with Allowances
999 BRAND
+91 893 999 7476
Email: 999lungies@kasz.in

## அன்ஜுமன் இ-ஹிமாயத்-இ-இஸ்லாம்

ஆட்கள் தேவை
துப்புரவு பணியாளர்
தோட்டக்காரர், தச்சர்
சமையல்காரர்
உதவி சமையல்காரர்
சமையலறை உதவியாளர்
ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் நேரில் அணுகவும். 15, 16 & 17.09.2025
காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணிவரை
16, பி.என்.ரெட்டி சாலை, தி.நகர், சென்னை - 17.
E-Mail : hr@anjhimayath.com



# பல்சுவை களஞ்சியம்




செம்மை மாந்தர்...மகளிர் தினத்தில் எனது அத்தை முதன்மை பெறுகிறார். பெரியம்மா, அண்ணி,அக்கா, ஆசிரியை, மருமகள், தங்கை, சித்தி, மாமி போன்ற உறவு முறைகள் ஏதோ ஒரு விதத்தில் இன்ஸ்பிரேஷன் ஆயிருக்கிறார்கள்.
ஆனால் என் கூடவே இருந்தவள் அத்தை. என் குழந்தைப் பருவம் முதல் அவளது முடிவு காலம் வரை எனக்கு ஏதோ ஒருவிதத்தில் பாடம் நடத்தியவள்.
அவளுக்கு இதனைக் காணிக்கையாக்குகிறேன்.
இது ஒரு கதை போலும், என் வாழ்நாளில் அவள் பயணப்பட்டதும் இதனில் இடம் பெறும்.
அவள் மேற்பார்வையில் பிறந்தவள் நான். எனக்கு அம்மாவை விட அவளிடம் வளர்ந்ததுதான் அதிகம். எனக்குப் பசி என்றாலும், அழுகை வந்தாலும், சந்தோஷமாக இருந்தாலும், மனது தேடுவது அவளைத் தான்.

ஒருசமயம் எனக்குக் காய்ச்சல். எல்லாரும் கல்யாணத்திற்குக் கிளம்பியாச்சு. மருத்துவர் என்னைப் பிரயாணம் பண்ணக் கூடாது, மாத்திரை, ஊசி இரண்டு நாட்களுக்குப் போட வேண்டும் என்றார். முதலாவதாக, நான் வரவில்லை என்றதோடு நிற்காமல், "கவலைப் படாமல் எல்லாரும் போய் வாருங்கள்!" என்று இன்முகத்தோடு அனுப்பி வைத்தாள். நான் காய்ச்சலில் இருந்து நார்மலுக்கு வரும் வரை, நான் என்ன சாப்பிட்டேனோ அதையே அவளும் சாப்பிட்டாள்.
சிவப்பானவள். ஒல்லியான உருவம். அதற்கேற்ற மாதியான உயரம். அவள் சிறிதாக ஸ்ரீசூர்ணம் இட்டுக் கொண்டிருப்பாள். எனக்கு விவரம் தெரிந்தவரை சட்டை(ரவிக்கை) போடாதவள். மரியாதைக்கு உரியவள். என் அப்பாவிற்கும் அவருக்கும் கிட்டதட்ட பதினாறு வயது வித்தியாசம்.

அவர் அம்மா இறக்கும்போது, என் அப்பாவுக்கும் அவருடைய தங்கைக்கும் கல்யாணம் ஆகவில்லையாம். இவள் அவர்களையே குழந்தைகளாகப் பாவித்து, அவர்களுக்காகவே வாழ்ந்ததாகச் சொல்வாள்.
காலையில் நான்கு மணி அலாரம் வேண்டாம். எழுந்துவிடுவாள். ஒரு சின்ன சப்தம் கேட்டாலும் விழித்துக் கொண்டு விடுவாள். சமையல் ஏழு ஊருக்கு மணக்கும். தின்கின்ற பொருளை, இவர்களுக்கு என எடுத்து வைத்துவிட்டால், அவர்களிடம் கொடுத்து ரகசியமாக, அவர்கள் தின்பதை ஆசையோடு பார்த்து ரசிப்பாள். எல்லாவிதமான பதாதர்த்தையும் ருசி பார்க்காமல் சமைப்பாள். ஒரு வில்லல் கூடத் தன் வாய்க்குப் போகாது.
எனக்கும், இப்பழக்கம் பிடித்துத் தொற்றிக் கொண்டது. அரிசியில் அவரவர் பெயர் எழுதியிருக்கும் என்று ரொம்ப நாள் கழித்துப் புரிந்து கொண்டேன்.

ஒருமுறை என் தங்கைக்குக் காய்ச்சல் . அப்பொழுதெல்லாம் ஆசாரம்தான் பெரிதாக இருந்தது. அவள் ஆத்திற்கு வெளியில். காய்ச்சல் வேறு, தனியாக ஓர் அறையில், அனத்தல் சப்தம் பொறுக்க முடியாமல் அத்தை அவள் அருகில் சென்று மூன்று நாட்களும் அவள் கூடவே இருந்து தலைக்குப் பச்சைத்தண்ணீரில் குளித்து, ஆசாரத்தை வெறுத்த என் தங்கைக்கு அதனை எடுத்துரைத்து, ஆனாலும் அதனை உடைக்காமல், அவளை வீட்டிற்குள்ளோ,பெட்டில் படுக்கலாம் என்றோ, சலுகை காட்டாமல், தியாகச் செம்மல் தான் அவள்.
தானும் சாப்பிடாமல், என்ன செய்தாலும் தன் ஆச்சாரத்தில் இருந்து வழுவியதில்லை. தலைவலி என்று ஒரு நாள் கூடச் சொன்னதில்லை... சோர்விலாள் பெண்.. உண்மைதான்.

மதியம் இரண்டரை மணியிலிருந்து மூன்றரை மணி வரை தூங்கும் நேரம் அவளுக்கு. எனக்குப் பள்ளி விடுமுறை என்றால், அந்த நேரத்தில் அவளிடம் கேட்பேன், நீ இங்கேயே இருக்கிறாயே உனக்குக் கல்யாணம் ஆகிவிட்டது என்று அப்பா சொன்னாரே, அவர் எப்படி இருப்பார் உனக்கு அவரைப் பிடிக்குமா? நான்தான் நிறைய தடவை கேள்விகள் கேட்டிருக்கேனே தவிர, பதிலைச் சொன்னதாக ஞாபகமே இல்லை. எங்களுக்கு அத்தை மட்டுமே தெரியும். தன் அந்தரங்கத்தை யாரிடமும் வெளிக்காட்டியதில்லை. அதற்காக ஐயோ பாவம் வாங்கியதும் இல்லை. இது, என்னைச் சின்ன வயதில் பாதித்தது. இப்பவும் நானாக யாரிடமும் அவர்களைப் பற்றி கேட்கவும் மாட்டேன் என்னைப் பற்றிச் சொல்வதையும் விரும்ப மாட்டேன். எதற்காகவும் அடுத்தவர்கிட்டே ஐயோ பாவமாக நிற்க வைக்கவில்லை ஆண்டவன் என்னையும் .இறைவனுக்கு நன்றி



எல்லா குழந்தைகளும் வீட்டில் தான் பிரசவம். பெரியம்மா, அக்கா, பக்கத்துவீடு அத்தை இல்லாமல் நடக்காது. அவளை யாருமே தள்ளி நில்லு என்று சொன்னதே இல்லை . எல்லாரிடமும் அந்த அளவு அன்பு. கருப்பு,சிவப்பு, குண்டு, ஒல்லி,ஆண், பெண்,இப்படி எந்தக் குழந்தையாக இருந்தாலும் குழந்தையாகவே பாவிக்கும் அவளது மனநிலை.

எல்லாரிடத்திலும் கோபப்படாமல், என் வாழ்வில், நான் அன்புடையவளாக ஆக்கியது அவளது சுபாவம்.
ஒரு சமயம் அத்தை, தன் தங்கை, அக்காவைப் பற்றிக் கூறும் போது நம் பிறவி ஒருதடவைதான், வீம்பு, வீராப்பு வேண்டாம் என்பாள். எத்தனையோ உணவுசெரிக்கிறது, ஒரு வார்த்தை செரிக்காதா என்பாள். காரியம் பெரிதா வீரியம் பெரிதா, அதற்கு அவளே பதில் சொல்வாள் காரியம் தான். இது, எனக்கு மிகப் பெரும் வார்த்தைகளாய்ப் பட்டது. என் வாழ்வின் உச்சம் தொட்ட போது, என் அப்பாவின் சுமைகளை நெஞ்சில் சுமந்தேன். இறக்கி வைக்க உதவினேன்.
குழந்தைகளைப் பராமரிக்கும் அழகே தனி. மரணத்தையும், ஜனனத்தையும் சமமாகப் பார்த்தாள். மரணம் வந்த பின் அங்கு ஒரு ஜனனம் என்றால், மரணத்தின் வலியை வெளிக்காட்டாமல் ஜனித்த உயிருடன் உறவாடுவாள். எந்த ஒரு காரியத்தையும் பெரிதாகக் கொண்டாட மாட்டாள். மற்றவர் வாழ்க்கையை வெளியில் நின்று ரசிக்கும்ஒரு உன்னதமான உயிர் . அவள் மட்டும் அவர்களுக்குள் நிறைவாள். தனக்கென்று ஒரு வாரிசும் இல்லை. ஆனாலும் அவள் இறக்கும் வரை, அதைப் பற்றிய சிந்தனை இல்லை. நாங்களும், அவளுக்கு கடைசி வரையிலும் செய்தோம். அவள் இறப்புக்கு மட்டும் சொந்தங்களே நூறு எட்டியது. அவ்வூரே வியந்தது.

புதிதாக வந்த மருமகள் ஆகட்டும், மருமகனாகட்டும் இவளது அன்பில் அகப்படாமல் தப்ப முடியாது. யாரிடமும் எதையும் எதிர்ப்பார்க்கமாட்டாள்.
ஆட்கள் சிலரைப் பிடிக்கவில்லை என்றாலும் கடமையைச் செய்யாமல் விட மாட்டாள்.
இவளிடமிருந்து எல்லாரும் கற்றார்கள் என்றாலும், கடைசி காலம் வரை என்னுடன் இருந்தாள். கடைசி இரண்டு வருடங்கள் அம்மா பராமரிப்பில், இறப்பதற்கு ஒரு வாரம் முன்பிலிருந்து நான் கூடவே இருந்தேன்.
பொறுமை, நம் வாழ்க்கையையே வெளிநின்று பார்த்தல், யாரிடமும் எதையும் எதிர்பாராதல், பெரிய காரியங்கள் நடக்கும் போது சின்ன சின்ன விவாதங்களைப் பெரிது படுத்தாமல்... இன்னும் எழுதுவதற்கு உண்டு.. அவளுடைய வீரம்..
ஒருமுறை ஒருவர் மரணம் அடைந்த போது பத்தாம் நாள் காரியம் ஆரம்பிக்க, இன்னொருவர், அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல், அது முடிந்தவுடன் இச்சாவைப் பற்றி சொன்னாராம்.

அவள் ஸ்ரீசூர்ணம் இடும் போதெல்லாம் ஒரு ரசம் போன கண்ணாடியை உபயோகிப்பாள். போட்டாவில் அழகாகத் தெரிவாள். ஒரு நாள் கண்ணாடி வைத்த பீரோ வாங்கி, அதனைப் பார்க்க அத்தையைக் கூப்பிட்டோம். அப்போது தன் முகத்தைப் பார்த்து, காலம் எத்தனை கோலங்களைக் கொடுத்துள்ளது. என் முகத்தில் தான் எத்தனை கோடுகள், கண்கள் உள்ளே போய், கிழடு தட்டி விட்டது என்றாள். அப்போது அவளுக்கு வயது எண்பது இருக்கும்.
அவள் ஒரு சாதனைப் பெண்மணியோ இல்லையோ.. எங்கள் உறவில் ... எத்தனையோ மனங்களில் சிம்மாசனம் போட்டு அமர்ந்திருக்கிறாள் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை.. அவளது பெயர் அவளைப் போலவே பொன்னம்மாள்...

# மீம்ஸ்







# எனக்கு செல்லிடபேசி வேண்டாம்



சமீபத்தில் ஒரு பெற்றோரிம் பேசிக் கொண்டிருந்தேன். என் பையன் எப்போதும் வீட்டில் செல்லிடபேசி பார்கிறான். சமூக வலைதளம் ரீல் ஸ் என பார்கிறான் அவனை கட்டுபடுத்த முடியவில்லை. கொடுக்கவில்லை என்றால் அழுகிறான். பிடிங்கிக் கொண்டால் கோபித்துக் கொள்கிறான் என்ன செய்வதென்றே தெரியவில்லை என்றார்.

இது உங்கள் பிரச்சனை மட்டு மல்ல பெரும்பான வீடுகளில் இதுதான் நிலைமை. இதிலிருந்து மீட்பது அல்லது மடை மாற்றுவது அவசியம் தான்.

குழந்தைகளுக்கு விளையாட்டு எப்போதும் பிடித்தமானது. எனவே வீட்டிலும் சரி வீதியில் பள்ளிக்கூடத்தில் உடலியக விளையாட்டை விளையாட வேண்டும். கவனத்தை விளையாட்டில் செலுத்தினால் செல்லிட பேசி மீது கவனம் குறையும். வீட்டில் சதுரங்கம் கேரம் போன்ற விளையாட்டை பெற்றோருடன் விளையாடலாம்.

இன்னொன்று குழந்தைகள் பார்பதை அப்படியே செய்வார்கள். வீட்டில் பெற்றோரும் வீட்டில் உள்ளவர்களும் என்ன செய்கிறார்களோ அதை செய்வார்கள் . அதனால் அவர்கள் கண்ணுக்கு தெரியும்படி புத்தகங்களை பரப்பி வைக்க வேண்டும். முதலில் படங்களை பார்ப்பார்கள். பின்பு படிக்க தொடங்குவார்கள். புத்தத்தின் மீது கவனம் செலுத்தினால் செல்லிட பேசி கவனம் குறையும்.
சிறுவர்களை செய்தித்தாளும் படிக்க வைக்க வேண்டும் அப்போது அன்றாட நிகழ்வுகள் மீதும் அதில் வரும் சிறுவர் பகுதி பார்த்து அவர்களும் ஓவியம் கதை எழுத பழகுவார்கள் கவனத்தை திசை திருப்பலாம்.

அப்படியே அவர்களுக்கு மிதிவண்டி ஒட்டி கற்றுத்தர வேண்டும். அப்போது பள்ளியிலிருந்து வந்து விட்டால் மிதிவண்டி மீது கவனம் வரும். ஒட்டுவார்கள் உடற்பயிற்சியாகவும் இருக்கும்.

குழந்தைகளை அக்கம் பக்கம் வீட்டு குழந்தைகளிடம் சிறிது நேரம் விளையாட விடலாம் நொண்டி ஓடி விளையாட்டு தொடு விளையாட்டு விளையாடும் போது விட்டுக் கொடுத்தல் போட்டியிட்டு வெற்றி பெறுதல் போன்ற பண்பு மட்டுமல்ல செல்லிட பேசி மீது கவனம் குறையும்.

பெற்றார்களும் தொடர்ந்து உரையாட வேண்டும்.

அவர்களுக்கு இசை கலைகள் மீது விருப்பத்தை கொண்டு வர வேண்டும். படிப்பதிலும் தினந்தோறும் அவர்களுக்கு துணை புரிய வேண்டும். அவர்களின் கவனத்தை திசை திருப்ப வேண்டும்
குறிப்பாக விடுமுறை தினங்களில் விளையாட்டு மைதானம் நூலகங்களுக்கு அழைத்துக் சென்று கவனத்தை நல்ல பாதையில் கொண்டு சென்றால் நல்ல பாதையில் குழந்தைகள் செல்வார்கள். குழந்தைகள் நல்ல எண்ணங்களோடும் நல்ல பண்புகளோடும் வாழ்வதற்கான சூழலை ஆசிரியர்கள் பெற்றோர்கள் சமூகம் என அனைவரும் இணைந்து ஏற்படுத்தினால் மிச்சிறந்த மனிதர்கள் . உருவாகுவார்கள். அனைவரும் இணைத்து சிறுவர்களை நல்லவர்களாக உருவாக்குவோம்.




# விடுகதை

| | |
|---|---|
| அடித்தால் விலகாது, அணைத்தால் நிற்காது. அது என்ன? | தண்ணீர் |
| நடக்கத் தெரியாதவன், நட்டுவனுக்கு வழி காட்டுகிறான் அவன் யார்? | கைகாட்டி |
| தலையில் கீரீடம் வைத்த தங்கப்பழம் அது என்ன? | அன்னாசிப்பழம் |
| ராஜா, ராணி உண்டு நாடு அல்ல. இலைகள் பல உண்டு, தாவரம் இல்லை! அது என்ன? | காட்ஸ் |
| கந்தல் துணிக்காறி முத்துப் பிள்ளைகள் பெற்றாள் அவள் யார்? | சோளப்பொத்தி |
| மூன்றெழுத்துப் பெயராகும். முற்றும் வெள்ளை நிறமாகும் அது என்ன? | பஞ்சு |



# ஜோக்ஸ்



தத்துவம்
ஏழு பரம்பரைக்கு உட்கார்ந்து சாப்பிடுற அளவுக்கு சொத்து இருந்தாலும் பாஸ்ட் புட்க்கு போனா நின்று தான் சாப்பிடணும்.
---------------------------------------------------------------------

தோழிகள் இருவர் பேசிக் கொள்கிறார்கள்
ராதா: நேத்து உன் லவ்வரை பார்க்க கூஷநநஉh-க்கு போறதா சொன்னியே! என்ன ஆச்சு?

கீதா: அட! அத ஏண்டி கேக்குறா? வாத்தியாரை லவ் பண்ணது தப்பா போச்சு!

ராதா: ஏன்! என்ன ஆச்சு?

கீதா: கொஞ்ச நேரம் லேட்டா போனேன். அதுக்காக படகு மேல ஏறி நிற்க சொல்லிட்டாருடி!

ராதா: ஹா! ஹா! ஹா!
----------------------------------------------------

முத்தம்
கணவன்: டார்லிங்! நான் இந்த மாச சம்பளத்துக்கு பதிலா 500 முத்தம் தரலாம்-னு நினைக்கிறேன். என்ன டிம தானே?

மனைவி: எனக்கொன்னும் பிரச்சினை இல்லை. நானும் அப்படியே கேபிள் காரனுக்கு 30 முத்தம், பால்காரனுக்கு 50 முத்தம், பேப்பர் காரனுக்கு 20 முத்தம், மளிகை கடைகாரனுக்கு 150 முத்தம். அவுஸ் ஓனருக்கு 250 முத்தம் கொடுத்துடுறேன் என்ன? ஓ.கே. தானே?

கணவன்: ???
----------------------------------------------------

தொலைக்காட்சி விளம்பரம்
வரும் சனிக்கிழமை இரவு பத்து மணிக்கு... உங்கள் அபிமான தொலைக்காட்சியில்... அற்புதமான ஹாலிவுட் திரைப்படம்... தமிழில்

சிலந்தி அண்ணாச்சி (Spiderman)

உங்களின் விடுமுறை நாளை குதூகலமாக கொண்டாட ஞாயிற்றுகிழமை மதியம் 2 மணிக்கு

சூப்பர்ஹிட் ஹாலிவுட் திரைப்படம்

"அம்மாச்சி திரும்ப வந்தாச்சு" (Mummy Returns)

முற்றிலும் தமிழில்... காணத்தவறாதீர்கள்!!!

# வாங்க சம்பாதிக்கலாம்



## ஏற்றுமதி நிறுவனம் அழைக்கிறது



மத்திய அரசின் ஏற்றுமதி கடன் உத்தரவாத கழகத்தில் (இ.சி. ஜி.சி.,) பணிக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.
'புரொபஷனரி ஆபிசர்' பிரிவில் மொத்தம் 30 இடங்கள் உள்ளன.
கல்வித்தகுதி: பட்டப்படிப்பு
வயது: 21-30 (2.12.2025ன் படி)
தேர்ச்சி முறை: ஆன்லைன் தேர்வு, நேர்முகத்தேர்வு.
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
விண்ணப்பக்கட்டணம்: ரூ. 950. எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு ரூ. 175
கடைசிநாள்: 2.12.2025 விவரங்களுக்கு: ecgc.in

## விளையாட்டு வீரர்களுக்கு ரயில்வேயில் பணியிடங்கள்




ரயில் சக்கர தொழிற்சாலையில் காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.
டெக்னீசியன், கிளார்க் பணியில் ஹாக்கி 6, கபடி 4, கால்பந்து 3, செஸ் 1, கிரிக்கெட் 1 என மொத்தம் 15 இடங்கள் உள்ளன.
கல்வித்தகுதி: பத்தாம் வகுப்பு, பிளஸ் 2, ஐ.டி.ஐ.,
வயது: 18-25 (1.1.2026ன் படி)
தகுதி: சர்வதேச, தேசிய, பல்கலை போட்டிகளில் சான்றிதழ்
தேர்ச்சி முறை: சான்றிதழ் சரிபார்ப்பு, ஸ்கில் தேர்வு.
தேர்வுக்கட்டணம்: ரூ. 500. எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு ரூ. 250
The Assistant Personnel Officer--IV, Personnel Dept, Rail Wheel Factory (RWF), Administrative Building, Yelahanka, Bangalore - 560 064
கடைசிநாள்: 5.12.2025
விவரங்களுக்கு: rwf.indianrailways.gov.in

## வங்கியில் அதிகாரி வாய்ப்பு



பொதுத்துறையை சேர்ந்த 'பாங்க் ஆப் இந்தியா'வில் காலியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. 'சிறப்பு அதிகாரி' பிரிவில் தலைமை மேனேஜர் 15, சீனியர் மேனேஜர் 53, மேனேஜர் 44, சட்ட அலுவலர் 2 உட்பட மொத்தம் 115 இடங்கள் உள்ளன.
கல்வித்தகுதி: பிரிவு வாரியாக மாறுபடும்.
அனுபவம்: தொடர்புடைய பிரிவில் அனுபவம் அவசியம்.
வயது: 25 - 34, 28 - 37, 28 - 40 (30.11.2025ன் படி)
தேர்ச்சி முறை: ஆன்லைன் தேர்வு, நேர்முகத்தேர்வு.
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
விண்ணப்பக்கட்டணம்: ரூ. 850. எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு ரூ. 175
கடைசிநாள்: 30.11.2025
விவரங்களுக்கு: bankofindia.bank.in

## விஞ்ஞானியாக விருப்பமா...



இஸ்ரோவின் கீழ் செயல்படும் 'நியூஸ்பேஸ் இந்தியா' நிறுவனத்தில் ஒப்பந்த பணிக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.
புராஜக்ட் சயின்டிஸ்ட் 22, புராஜக்ட் இன்ஜினியர் 15, புராஜக்ட் அசிஸ்டென்ட் 10 என மொத்தம் 47 இடங்கள் உள்ளன.
கல்வித்தகுதி: டிப்ளமோ / பி.இ.,/ பி.டெக்., / பி.எச்டி.,
வயது: 18 - 35, 18 - 40 (30.11.2025ன் படி)
தேர்ச்சி முறை: 'வாக் இன் இன்டர்வியூ'. 2025 டிச. முதல் வாரத்தில் நடைபெறும்.
பணிக்காலம்: 6 மாதம் - 2 ஆண்டு
பணியிடம்: ஐதராபாத், பெங்களூரு, ஆமதாபாத், புனே, கோவை.
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
கடைசிநாள்: 30.11.2025
விவரங்களுக்கு: nsilindia.co.in

## 'எய்ம்ஸ்' மருத்துவமனையில் வேலை



இந்தியாவில் உள்ள 'எய்ம்ஸ்' மருத்துவமனைகளில் பல்வேறு பணியிடங்களுக்கு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.
கிளார்க் 121, அனஸ்தீசியா டெக்னீசியன் 182, ரேடியாலஜி 105, ஸ்டோர் ஆபிசர் 102, ஆய்வக உதவியாளர் 80, பார்மசிஸ்ட் 35, நர்சிங் ஆபிசர் 122, பிசியோ தெரபிஸ்ட் 46 உட்பட மொத்தம் 1353 இடங்கள் உள்ளன.
வயது, கல்வித்தகுதி: பிரிவு வாரியாக மாறுபடும்.
தேர்ச்சி முறை: ஆன்லைன் தேர்வு, ஸ்கில் தேர்வு, சான்றிதழ் சரிபார்ப்பு
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
விண்ணப்பக்கட்டணம்: ரூ. 3000. எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு ரூ. 2400
கடைசிநாள்: 2.12.2025
விவரங்களுக்கு: aiimsexams.ac.in

## மத்திய அரசு பள்ளியில் 14,967 பணியிடங்கள்



மத்திய அரசின் 'கேந்திரிய வித்யாலயா', 'நவோதயா வித்யாலயா' பள்ளிகளில் காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.
பள்ளி முதல்வர் 227, துணை முதல்வர் 58, முதுநிலை ஆசிரியர் 2978, பட்டதாரி ஆசிரியர் 5772, நூலகர் 147, தொடக்கப்பள்ளி ஆசிரியர் 3365, ஆசிரியர் அல்லாத பணி 1942 உட்பட மொத்தம் 14,967 இடங்கள் உள்ளன.
வயது, கல்வித்தகுதி: பிரிவு வாரியாக மாறுபடும்.
தேர்ச்சி முறை: எழுத்துத்தேர்வு, ஸ்கில் தேர்வு, சான்றிதழ் சரிபார்ப்பு
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
விண்ணப்பக்கட்டணம்: ரூ. 1700 -2800. எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு ரூ. 500
கடைசிநாள்: 4.12.2025
விவரங்களுக்கு: kvsangathan.nic.in

## பங்குச் சந்தை சரிவுடன் நிறைவு: சென்செக்ஸ் 277 புள்ளிகள் சரிந்த நிலையில், நி.ஃப்டி 0.40% வீழ்ச்சி!

பலவீனமான உலக சந்தைகளின் போக்குகளால் இன்றைய வர்த்தகத்தில் ஐடி, உலோகம் மற்றும் மூலதனப் பங்குகளை முதலீட்டாளர்கள் வெகுவாக லாபம் ஈட்டியதன் காரணமாக, சென்செக்ஸ் மற்றும் நிஃப்டி தனது ஆறு நாள் வெற்றித் தொடரை முறியடித்துக் கொண்டு பெஞ்ச்மார்க் சென்செக்ஸ் 277.93 புள்ளிகள் சரிந்ததும் அதே வேளையில் நிஃப்டி 26,000 புள்ளிகளுக்குக் கீழே சென்று முடிவடைந்தன.

இன்றைய வர்த்தகத்தில் சென்செக்ஸ் 392.59 புள்ளிகள் சரிந்து 84,558.36 புள்ளிகளாக இருந்தது. வர்த்தக முடிவில் 30 பங்குகளைக் கொண்ட சென்செக்ஸ் 277.93 புள்ளிகள் சரிந்து 84,673.02 புள்ளிகளாகவும் 50 பங்குகளைக் கொண்ட நிஃப்டி 103.40 புள்ளிகள் சரிந்து 25,910.05 புள்ளிகளாக நிலைபெற்றது.

சென்செக்ஸில் டெக் மஹிந்திரா, இன்ஃபோசிஸ், பஜாஜ் ஃபைனான்ஸ், பஜாஜ் ஃபின்சர்வ், எடர்னல், அதானி போர்ட்ஸ், இந்துஸ்தான் யூனிலீவர் மற்றும் பாரத் எலக்ட்ரானிக்ஸ் ஆகியவை சரிந்து முடிந்த நிலையில் பாரதி ஏர்டெல், ஆக்சிஸ் வங்கி, ஏசியன் பெயிண்ட்ஸ் மற்றும் டைட்டன் ஆகியவை உயர்ந்து முடிவடைந்தன.


டிசம்பரில் அமெரிக்க ஃபெடரல் ரிசர்வ் வங்கியானது வட்டி விகிதக் குறைப்புக்கான எதிர்பார்ப்புகள் குறைந்துள்ள நிலையில் இது முதலீட்டாளர்களின் உணர்வைப் பாதித்தது. அதே வேளையில் வலுவான டாலருக்கு மத்தியில் ஐடி, உலோகம் மற்றும் ரியல் எஸ்டேட் பங்குகள் சரிந்ததாக வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

ஆசிய சந்தைகளில் தென் கொரியா கோஸ்பி, ஜப்பான் நிக்கி 225 குறியீடு, ஷாங்காய் எஸ்எஸ்இ காம்போசிட் குறியீடு மற்றும் ஹாங்காங் ஹாங் செங் குறியீடும், ஐரோப்பிய சந்தைகளும் சரிந்தன. நேற்று (திங்கள்கிழமை) அமெரிக்க சந்தைகளும் சரிந்து முடிவடைந்தன.

இதனிடையில், வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சரான பியூஷ் கோயல், இந்தியா-அமெரிக்க ஒப்பந்தம் நியாயமானதும் அதே வேளையில் சமநிலையானதும் என்றார். விரைவில் இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான முன்மொழியப்பட்ட வர்த்தக ஒப்பந்தம் குறித்து நீங்கள் ஒரு நல்ல செய்தி கேட்பீர்கள்.

அன்னிய நிறுவன முதலீட்டாளர்கள் நேற்று (திங்கள்கிழமை) ரூ.442.17 கோடி மதிப்புள்ள பங்குகளை வாங்கியுள்ள நிலையில், உள்நாட்டு நிறுவன முதலீட்டாளர்களும் ரூ.1,465.86 கோடி மதிப்புள்ள பங்குகளையும் வாங்கியுள்ளனர்.

உலகளாவிய பிரெண்ட் கச்சா எண்ணெய் பீப்பாய் ஒன்றுக்கு 0.40% குறைந்து 63.94 அமெரிக்க டாலராக உள்ளது.



சென்னையில் நேற்று காலை 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை உயர்ந்துள்ளது. தங்கம் விலை சவரனுக்கு ரூ.800 உயர்ந்து ரூ.92 ஆயிரத்துக்கு விற்பனை செய்யப்பட்டது. தங்கம் விலை கிராமுக்கு ரூ.100 உயர்ந்து ரூ.11,500-க்கு விற்பனை செய்யப்பட்டது.

இந்நிலையில் ஆபரணத் தங்கத்தின் விலை இன்று 2-வது முறையாக மீண்டும் உயர்ந்தது. இன்று காலை சவரனுக்கு ரூ.800 கூடிய நிலையில், தற்போது மேலும் ரூ.800 கூடியது.

தங்கம் விலை சவரனுக்கு ரூ.800 உயர்ந்து ரூ.92,800க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் விலை கிராமுக்கு ரூ.100 உயர்ந்து ரூ.11,600-க்கு விற்பனை செய்யப்பட்டது.

நேற்று ஒரே நாளில் மட்டும் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.1600 உயர்ந்து வாடிக்கையாளர்களை அதிர்ச்சிக்குள்ளாகி உள்ளது.

வெள்ளி விலையும் நேற்று உயர்ந்துள்ளது. வெள்ளி விலை கிராமுக்கு ரூ.3 உயர்ந்து ரூ.173-க்கும், கிலோவுக்கு மூவாயிரம் உயர்ந்து பார் வெள்ளி ஒரு லட்சத்து 73 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.




இந்த பகுதியில் உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்



whatsapp No
8122664699

## சேலம் மண்டல கலை பண்பாட்டு மையம் சார்பாக தமிழிசை விழா



**சேலம்,நவ.20:** சிஷ்யா சிபிஎஸ்இ பள்ளி வளாகத்தில் 16.11.25 ஞாயிற்றுக்கிழமை சேலம் மண்டல கலை பண்பாட்டு மையம் சார்பாக தமிழிசை விழா நடைபெற்றது. மண்டல உதவி இயக்குனர் சங்கரராமன், அவர்கள் தலைமையில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றது இவற்றில் மகரிஷி வித்யா மந்திர் பள்ளி மாணவர்கள், டைட்டான், குருகுலம் மற்றும் சிஷ்யா பள்ளி மாணவர்களும் பங்கு பெற்றனர். என் எஸ் சி சிவராமன், நிர்வாக இயக்குனர் ஜே பி எஸ் ஆர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

## கார்த்திகை மாத அமாவாசை பூஜையை முன்னிட்டு அபிஷேகம், அன்னதானம்





**திருவாரூர், நவ.20:** வலங்கைமான் அருகே உள்ள பாடகச்சேரி மகான் ஸ்ரீ-ல-ஸ்ரீ இராமலிங்க சுவாமிகள் அருள் புரிந்த தவபீடத்தில் கார்த்திகை மாத அமாவாசை பூஜையை முன்னிட்டு அபிஷேகம், அன்னதானம் நடைபெற்றது.

திருவாரூர் மாவட்டம் வலங்கைமான் அருகே உள்ள பாடகச்சேரி மகான் ஸ்ரீ-ல-ஸ்ரீ இராமலிங்க சுவாமிகள் அருள் புரிந்த தவபீடத்தில் மாதந்தோறும் அமாவாசை மற்றும் பௌர்ணமி அன்று பூஜைகள் நடைபெறுவது வழக்கம்.

அதேபோல் நேற்று கார்த்திகை மாத அமாவாசை பூஜையை முன்னிட்டு பகல் 12 மணிக்கு தொடங்கி அபிஷேக ஆராதனைகள், தீபாராதனை நடைபெற்று பக்தர்களுக்கும், பொதுமக்களுக்கும் அருட்பிரசாதமும், அறுசுவையுடன் கூடிய அன்னதானமும் வழங்கப்பட்டது. ஏராளமான பக்தர்கள், பொதுமக்கள் திரளாக பங்கேற்றனர்.

நிகழ்ச்சி ஏற்பாடுகளை பாடகச்சேரி அன்னதான அறக்கட்டளையினர் சிறப்பாக செய்திருந்தனர்.

## கோவை வந்த பிரதமர் மோடிக்கு வரவேற்பு



தென்னிந்தியா இயற்கை வேளாண்மை மாநாடு 2025-யில் பங்கேற்பதற்காக கோவை வந்த பிரதமர் மோடியை மாநில பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் வரவேற்றார். உடன் ஜிகே வாசன், எடப்பாடி பழனிசாமி உள்ளனர்.

## மின்வாரிய பிரிவு அலுவலகம் திறப்பு



ஆவடி சட்டமன்ற தொகுதி திருநின்றவூர் மின்வாரிய பிரிவு அலுவலகத்தை மக்கள் பயன்பாட்டிற்கு அமைச்சர் நாசர் நேற்று திறந்து வைத்தார். மின்வாரிய செயற்பொறியாளர் பாலகிருஷ்ணன், நகர செயலாளர் ரவி, மற்றும் திமுக நிர்வாகிகள் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தமிழக வாழ்வுரிமை கட்சி சார்பில் கருத்து கேட்பு கூட்டம்



சேலம் டால்மியா போர்டு அருகே ஜாகீர்அம்மாபாளையம் பகுதியில் சாயப்பட்டறைகள் அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து, அப்பகுதியில் தமிழக வாழ்வுரிமை கட்சி சார்பில் கருத்து கேட்பு கூட்டம் நேற்று நடந்தது. இதில் அக்கட்சி தலைவர் வேல்முருகன் பேசினார்.

## கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் தொகுப்பு வழங்கும் திட்டம்



செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் தொகுப்பு வழங்கும் திட்டத்தை துணை முதல்வர் உதயநிதி நேற்று தொடங்கி வைத்தார். தமிழ்நாட்டில் உள்ள மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் அனைத்திற்கும் மொத்தம் 19,800 விளையாட்டு உபகரணத் தொகுப்புகள் வழங்கப்படும் என உதயநிதி தெரிவித்தார்.உடன் அமைச்சர் தா.மோ.அன்பரசன், எம்எல்ஏக்கள் இ.கருணாநிதி, வரலட்சுமிமதுசூதனன் உள்ளனர்.

## எஸ்ஐஆர் படிவங்கள் பதிவேற்றம் செய்யும் பணி



உதகை நகராட்சி அலுவலகத்தில் எஸ்ஐஆர் படிவங்கள் பதிவேற்றம் செய்யும் பணிகளை கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு ஆய்வு செய்தார்.

## மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்களுக்கு தாட்கோ மூலம் மாடுகள் வாங்க கடன்



தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியம் திட்டை ஊராட்சியை சேர்ந்த செம்பருத்தி மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்களுக்கு தாட்கோ மூலம் மாடுகள் வாங்க கடன் உதவி செய்தமைக்காக கலெக்டர் பிரியங்கா பங்கஜத்துக்கு மகளிர் குழுவினர் நன்றி தெரிவித்தனர்.

## திமுக நிர்வாகிகளுடன் கலந்தாலோசனை



சென்னை அண்ணா அறிவாலயத்தில், நேற்று ஓட்டப்பிடாரம் - கன்னியாகுமரி - ஆலங்குளம் ஆகிய தொகுதிகளுக்குட்பட்ட திமுக நிர்வாகிகளுடன் திமுக தலைவரும், முதல்வருமான ஸ்டாலின் கலந்தாலோசனை நடத்தினார். இதில் கனிமொழி எம்.பி. பங்கேற்றார்

## எஸ்ஐஆர் பணிகள் குறித்து கலெக்டர் சந்திரகலா வீடுகளில் ஆய்வு



ராணிப்பேட்டை நகராட்சி பகுதியில் எஸ்ஐஆர் பணிகள் குறித்து கலெக்டர் சந்திரகலா வீடுகளில் ஆய்வு நடத்தினார்.

## இந்திரா 108 வது பிறந்தநாள்



முன்னாள் பாரத பிரதமர் இந்திரா 108 வது பிறந்த நாளையொட்டி நாகர்கோவில் டெரிக் சந்திப்பில் அவரது திரு உருவ சிலைக்கு மாநகர மாவட்ட காங்கிரஸ் தலைவர் நவீன் குமார் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

## திமுக பாகநிலை முகவர்கள் ஆலோசனை கூட்டம்





அம்பத்தூர் வடக்கு பகுதி திமுக பாகநிலை முகவர்கள் ஆலோசனை கூட்டத்தில் அமைச்சர் சேகர்பாபு ஆலோசனை வழங்கினார்.

## டேபிள் டென்னிஸ் அரங்க அரங்கத்தினை துணை முதல்வர் உதயநிதி திறந்து வைத்தார்



தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழக வளாகத்தில் ரூ.7.82 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள டேபிள் டென்னிஸ் அரங்கத்தினை துணை முதல்வர் உதயநிதி நேற்று திறந்து வைத்து விளையாடினார்.

## வாக்காளர்கள் வீடுதேடிச் சென்ற பிஎல்ஓக்கள்,



நாகர்கோவில் மாநகராட்சி பகுதிகளில் வாக்காளர்கள் வீடுதேடிச் சென்று பிஎல்ஓக்கள், படிவங்களை திரும்பப் பெற்று வருகின்றனர்.

## பூங்கா அமைப்பதற்காக அமைச்சர் அடிக்கல் நாட்டினர்



சென்னை திருவிக. நகர் சட்டமன்ற தொகுதி மேடவாக்கம் டேங்க் ரோடு பகுதியில் ஓஎஸ்ஆர் நிலத்தில் 39.50 லட்ச ரூபாயில் பூங்கா அமைப்பதற்காக அமைச்சர் சேகர்பாபு, மேயர் பிரியா அடிக்கல் நாட்டினர்.

## ரவுசு மணி

தான் உயர வேண்டும் என்று நினைப்பவன் மனிதன்...

தன்னுடன் இருப்பவர்களும் உயர வேண்டும் என்று நினைப்பவனே மாமனிதன்....




V. முத்து ராமகிருஷ்ணன்

## வண்ணக்கோலமிட்டு வாக்காளர்களுக்கு விளக்கம்



சேர்மாதேவி வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் எஸ்ஐஆர் பணிகள் பற்றி வண்ணக்கோலமிட்டு வாக்காளர்களுக்கு விளக்கப்பட்டது.

## திருவண்ணாமலை அண்ணாமலையார் கோபுரங்கள் மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு ஒளிரும் காட்சி.



திருவண்ணாமலை திரு கார்த்திகை தீபத் திருவிழாவை முன்னிட்டு திருவண்ணாமலை அண்ணாமலையார் கோபுரங்கள் மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு கோபுரங்கள் ஒளிரும் காட்சி. **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## சிறார் அறிவியல் பூங்கா திறப்பு




சென்னைஅண்ணா நூற்றாண்டு நூலகத்தில் சிறார் அறிவியல் பூங்காவை பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி நேற்று திறந்து வைத்தார்.

## மாற்றுத் திறன் மாணவர்களுக்கான சிறப்பு மருத்துவ முகாம்



குனியமுத்தூர் அரசு பள்ளியில் மாற்றுத் திறன் மாணவர்களுக்கான சிறப்பு மருத்துவ முகாமில் கலெக்டர் பவன்குமார் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

## மாற்றுத்திறனாளி பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவி



காஞ்சிபுரத்தில் மாற்றுத்திறனாளி பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை கலெக்டர் கலைசெல்வி வழங்கினார்.

# சுற்றுலா: பயணிகளின் சொர்க்கம் கோவா கடற்கரை!



கோவா சுற்றுலா கடற்கரை பகுதிகளை மையமாகக் கொண்டு செயல்படுகிறது. 2004 ஆம் ஆண்டு இரண்டு மில்லியனுக்கும் அதிகமான சுற்றுலா பயணிகள் இங்கு வருகை தந்துள்ளனர். அவர்களில் நாலு லட்சம் பேர் அயல் நாட்டினர். ஆண்டுதோறும் ரஷ்யா பிரிட்டன் போன்ற நாடுகளில் இருந்து அதிக அளவில் சுற்றுலா பயணிகள் வருகை தருகிறார்கள். 2013இல் ரஷ்யாவின் சுற்றுலா பயணிகள் சுமார் மூன்று லட்சம் பேர் சுற்றி பார்க்க வந்தார்கள்.

கோவாவில் இரண்டு விதமான சுற்றுலா காலங்களை கொண்டது. ஒன்று கோடை காலம். மற்றொன்று குளிர் காலம். குளிர்காலத்தில் அயல்நாட்டினர் அதிகம்பேர் வருகை தருகிறார்கள். குறிப்பாக ஐரோப்பிய நாடுகளைச் சார்ந்தவர்கள் அதிக அளவில் வருவார்கள். கோடை காலத்தில் இந்தியாவைச் சார்ந்தவர்கள் அதிக அளவில் இங்கு சுற்றிப் பார்க்க வருகிறார்கள். இந்தியர்கள் அநேகமாக கோடை விடுமுறையில்தான் அதிக அளவில் வருகின்றனர்.

இங்கு மேற்கு கடற்கரை பகுதியில் மகாராஷ்டிரா மற்றும் கர்நாடகா எல்லையில் உள்ள சிறிய மாநிலம்தான் கோவா. சுமார் 450 ஆண்டு காலம் போர்ச்சுகீசியர்கள் இந்த பகுதியை ஆண்டு வந்தனர். எனவே இந்த பகுதி முழுவதும் லத்தின் கலாச்சாரத்தை பின்பற்றி உள்ளது. போர்ச்சுகீசியர்கள் அதிகம் உள்ள பகுதியாக பேசப்படுகிறது. எனவே அயல்நாட்டு மக்களை அதிக அளவில் இந்த கோவா சுற்றுலா பயணிகளை ஈர்த்துள்ளது என்றால் மிகையாகாது.

கடற்கரை தேவாலயம் கோவில்கள் என பல உள்ளது. இங்குள்ள பாம் இயேசு தேவாலயம், அகுடா கோட்டை போன்றவை மிகப் பிரபலமாக உள்ளது. சமீபத்தில் புகழ்பெற்ற மெழுகு சிலை அருங்காட்சியகம் திறக்கப்பட்டுள்ளது.

இங்கு வரும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் இதன் அழகில் மயங்கி இங்கேயே மாதக்கணக்கில் தங்கி விடுகின்றனர். இந்த கடற்கரையின் நீளம் சுமார் 77 மைல்கள். கரையோரப் பகுதியில் ஆங்காங்கே கடற்கரை சுற்றுலா பகுதிகள் உள்ளது

இவை வடக்கு கோவா, தெற்கு கோவா என இரண்டு பகுதியாக பிரிக்கப்பட்டுள்ளது. இரண்டு பகுதிகளிலும் எண்ணற்ற குடில்கள் வாடகைக்கு கிடைக்கும் சுமார் ஆயிரம் ரூபாயிலிருந்து கிடைக்கிறது. எல்லா குடில்களிலும் சுவையான மீன் சாப்பாடு மதுபானங்கள் தாராளமாக கிடைக்கிறது. சில குடில்களில் கேளிக்கை விருந்துகளும் நடைபெறும். குறிப்பாக ரஷ்யா பிரிட்டன் போன்ற நாடுகளில் இருந்து வரும் சுற்றுலா பயணிகள் உயர்தரமான குடில்களில் தங்குகிறார்கள்.

கோவா கடற்கரை பகுதிகளில் தண்ணீர் விளையாட்டுக்கள் மிகப் பிரபலம். பாராசெய்லிங் ஜெட் ஸ்கிங் போன்ற தண்ணீர் விளையாட்டுக்கள் மிகப்பிரபலமாக உள்ளது.

வடக்கு கோவா கடற்கரை பகுதிகளில் கலங்குட் கடற்கரை கண்டோலம் கடற்கரை பாக கடற்கரை, பனாஜி கடற்கரை மீரா மா கடற்கரை டோனா பவ்லா கடற்கரை போன்றவை மிகப் பிரபலமான கடற்கரை பகுதியாகும். இந்த பகுதிகள் அனைத்திலும் உள்ள குடில்களில் சிறப்பான மீன் சாப்பாடு மதுபானங்களும் தரமான முறையில் கிடைக்கிறது. இந்தப் பகுதிகளில் நிறைய சினிமா சூட்டிங் நடைபெறுகிறது

தெற்கு கோவா கடற்கரை பகுதிகளை எடுத்துக் கொண்டால் கோல்வா கடற்கரை முழுவதும் வெண் மணல் நிரம்பி காணப்படுகிறது. இது மூன்று கிலோ மீட்டர் நீளம் கொண்டது. இவை தவிர பாலோலும் கடற்கரை அக்கௌன்டா கடற்கரை

போன்றவையும் உள்ளது. இங்கு உள்ள பாம் ஜீசஸ் பேசிலிக்கா மிகவும் புகழ் பெற்றது. மிகச்சிறந்த தேவாலயமாக கருதப்படுகிறது. இங்கு புனித பிரான்சிஸ் சேவியர் உடல் பதப்படுத்தி பாதுகாக்கப்பட்டு வருகிறது.

12 ஆண்டுகளுக்கு ஒரு முறை பிரான்சிஸ் சேவியர் உடல் வழிபாட்டுக்காகவும் பொதுமக்கள் பார்வைக்காகவும் வைக்கப்படும். இந்தப் பகுதியில் கோப்ரா கோர் ஜயன் அகுடா போன்ற புகழ்பெற்ற கோட்டைகள் உள்ளன. பனாஜி கடற்கரை பகுதியில் கடற்படை அருங்காட்சியகம் உள்ளது.

வெளிநாட்டவர்கள் குளிர்காலத்திலும் உள்நாட்டு பகுதியைச் சார்ந்தவர்கள் கோடை காலத்திலும் கோவாவிற்கு அதிக அளவில் சுற்றுலா வருகிறார்கள். இதனால் கோவா கடற்கரை ஆண்டு முழுவதும் சுற்றுலாப் பயணிகளால் நிரம்பி வழிகிறது. கோடை காலத்தில் சன் பாத் எடுப்பது மிகவும் பிரபலமாக உள்ளது.

## வேலைவாய்ப்பு கார்னர்

### விஞ்ஞானியாக விருப்பமா...

இஸ்ரோவின் கீழ் செயல்படும் 'நியூஸ்பேஸ் இந்தியா' நிறுவனத்தில் ஒப்பந்த பணிக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.

புராஜக்ட் சயின்டிஸ்ட் 22, புராஜக்ட் இன்ஜினியர் 15, புராஜக்ட் அசிஸ்டென்ட் 10 என மொத்தம் 47 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: டிப்ளமோ / பி.இ., / பி.டெக்., / பி.எச்டி.,

வயது: 18 - 35, 18 - 40 (30.11.2025ன் படி)

தேர்ச்சி முறை: 'வாக் இன் இன்டர்வியூ'. 2025 டிச. முதல் வாரத்தில் நடைபெறும்.

பணிக்காலம்: 6 மாதம் - 2 ஆண்டு

பணியிடம்: ஐதராபாத், பெங்களூரு, ஆமதாபாத், புனே, கோவை.

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

கடைசிநாள்: 30.11.2025

விவரங்களுக்கு: nsilindia.co.in

### மத்திய அரசு பள்ளியில் 14,967 பணியிடங்கள்

மத்திய அரசின் 'கேந்திரிய வித்யாலயா', 'நவோதயா வித்யாலயா' பள்ளிகளில் காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.

பள்ளி முதல்வர் 227, துணை முதல்வர் 58, முதுநிலை ஆசிரியர் 2978, பட்டதாரி ஆசிரியர் 5772, நூலகர் 147, தொடக்கப்பள்ளி ஆசிரியர் 3365, ஆசிரியர் அல்லாத பணி 1942 உட்பட மொத்தம் 14,967 இடங்கள் உள்ளன.

வயது, கல்வித்தகுதி: பிரிவு வாரியாக மாறுபடும்.

தேர்ச்சி முறை: எழுத்துத்தேர்வு, ஸ்கில் தேர்வு, சான்றிதழ் சரிபார்ப்பு

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

விண்ணப்பக்கட்டணம்: ரூ. 1700 -2800. எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு ரூ. 500

கடைசிநாள்: 4.12.2025

விவரங்களுக்கு: kvsangathan.nic.in

## வாக்குச்சாவடி நிலை அலுவலருக்கான ஊதியம் ரூ.6,000-ல் இருந்து ரூ.12,000-ஆக உயர்வு

**சென்னை, நவ.20:**

வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிக்கான ஊக்கத்தொகை ரூ.1000-லிருந்து ரூ.2000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் கடந்த 4 ஆம் தேதி முதல் சிறப்பு தீவிர வாக்காளர் திருத்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்தப் பணிகள் வருகின்ற டிசம்பர் 4 ஆம் தேதியுடன் முடிவடைகின்றன. இந்நிலையில் வாக்காளர் படிவங்களைப் பூர்த்தி செய்ய பொதுமக்களுக்கு உதவும் வகையில், சென்னை மாநகராட்சியில் நேற்று முதல் வாக்காளர் உதவி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. நவம்பர் 25 ஆம் தேதி வரை இந்த உதவி மையங்கள் செயல்படும்.

இந்நிலையில் பணி நெருக்கடி காரணமாக, வாக்காளர் திருத்தப் பணிகளை நேற்று முதல் வருவாய் துறை சங்கம் புறக்கணித்தது. பணிக்கு வராத ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கப்பட மாட்டாது என அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களின் ஊதியத்தை இரண்டு மடங்காக உயர்த்தி தமிழக அரசு அறிவிப்பானை வெளியிட்டுள்ளது.



பணி நெருக்கடி காரணமாக சிறப்பு வாக்காளர் திருத்தப் பணிகளைப் புறக்கணிப்பதாக வருவாய் துறை சங்கம் நேற்று முன்தினம் அறிவித்தது. இதன்படி நேற்று பல ஊழியர்கள் வேலைக்கு வரவில்லை. இதனை சமாளிக்கும் விதமாக வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு சம்பளம் உயர்த்தப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இதன்படி, வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிக்கான ஊக்கத்தொகை ரூ.1000-லிருந்து ரூ.2000 ஆகவும், வாக்குச்சாவடி நிலை அலுவலருக்கான ஊதியம் ரூ.6,000-ல் இருந்து ரூ.12,000-ஆகவும், வாக்குச்சாவடி மேற்பார்வையாளர்களுக்கான ஊதியம் ரூ.12,000-லிருந்து ரூ.18,000 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது. தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி தமிழ்நாடு அரசு இதற்கான அரசாணையை வெளியிட்டுள்ளது.

## மதுபோதையில் ரெயிலில் செல்வோரை மடக்கிப்பிடிக்க ரெயில்வே போலீசார் தீவிரம்

**சென்னை, நவ.20:**

தமிழ்நாட்டில் ரெயில்களில் பயணம் செய்பவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து கொண்டே செல்கிறது. இந்தநிலையில் ரெயிலில் ஒருசில பயணிகள் மதுகுடித்து விட்டு பயணம் செய்வதால் பயணிகளின் பாதுகாப்பு கேள்விக்குறியாகி உள்ளது.

மதுபோதையில் கட்டுப்பாட்டை இழக்கும்போதை ஆசாமிகள் சில சமயங்களில் சக பயணிகளிடம் தேவையில்லாமல் தகராறில் ஈடுபடுவது, ஆபாசமாக பேசுவது என சட்டவிரோத செயல்களில் ஈடுபடுவது தொடர் கதையாகி வருகிறது. மேலும், ஏ.சி. பெட்டிகளில் பயணம் செய்யும் செல்வந்தர்களும் சர்வ சாதாரணமாக ரெயில் பெட்டியிலேயே அமர்ந்து மது அருந்துவதாக பயணிகளிடம் இருந்து குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இதுபோன்ற சம்பவங்களால் ரெயிலில் பயணிக்கும் குழந்தைகள், பெண்கள், முதியோர்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில், மதுபோதையில் பயணம் செய்பவர்களுக்கு ரெயில்வே பாதுகாப்பு படையினர் அபராதம் விதித்து வருகின்றனர்.



இதுதொடர்பாக, ரெயில்வே பாதுகாப்பு படை உயர் அதிகாரி ஒருவர் கூறியதாவது:-

மதுபோதையில் ரெயில் பயணம் மேற்கொள்வது ரெயில்வே பாதுகாப்பு சட்டம் 145-ஏ-படி தண்டனைக்குரிய குற்றமாகும். அவர்களுக்கு, ரூ.100 முதல் ரூ.500 வரை அபராதம் வசூலிக்கப்படும் அல்லது 6 மாத சிறை தண்டனை விதிக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் நடப்பாண்டில் மட்டும் மதுபோதையில் பயணம் செய்த 135 பேர் பிடிபட்டனர். அவர்களிடம் இருந்து ரூ.50 ஆயிரம் அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளது. இதில், சென்னையில் மட்டும் 21 பேர் சிக்கினர்.

இனிவரும் காலங்களில் புகாரின் பேரில் மட்டுமல்லாமல் மதுபோதையில் பயணம் செய்யும் அனைவருக்கும் அபராதம் விதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதன்படி, ரெயிலில் சந்தேகப்படும் படி பயணம் செய்பவர்களிடம் சுவாச பகுப்பாய்வு (ப்ரீத் அனலைசர்) கருவிகள் மூலம் சோதனை செய்ய திட்டமிட்டுள்ளோம்.

இதற்கான நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட உள்ளது. இதன்மூலம் மதுபோதையில் பயணம் செய்பவர்கள் மீது வழக்குப்பதிவு செய்து உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். பயணிகள், ரெயில் பயணத்தின் போது ஏதாவது இடையூறுகளை சந்தித்தால் உடனடியாக 139 என்ற ரெயில்வே பாதுகாப்பு உதவி எண்ணை தொடர்பு கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

## மூன்றாம் தலைமுறை நெல் நடவு இயந்திரங்கள் அறிமுகம்

**சென்னை, நவ.20:**

முன்னணி வேளாண் உபகரண நிறுவனமான எஸ்கார்ட்ஸ் குபோடா லிமிடெட், KA6 மற்றும் KA8 ஆகிய மூன்றாம் தலைமுறை நெல் நடவு இயந்திரங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. ஜப்பானில் வடிவமைக்கப்பட்ட இவை, உயர் உற்பத்தித்திறன், இயக்குபவர் சௌகரியம் மற்றும் துல்லியமான நடவு வழங்குகின்றன.

தமிழ்நாடு உட்பட ஏழு மாநிலங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. முறையே 21 மற்றும் 24 குதிரைத்திறன் என்ஜின்களால் இயங்கும் இவை, திறன்மிக்க திருப்ப அமைப்பு, தானியங்கி தூக்கும் வசதி, கிடைமட்டக் கட்டுப்பாடு, மறுவடிவமைக்கப்பட்ட நடவு அமைப்புகள் கொண்டவை.

பரந்த தளம், பயன்பாட்டிற்கு ஏற்ற வடிவமைப்பு, எல்இடி விளக்குகள் இயக்குபவரின் சௌகரியத்தை உறுதி செய்கின்றன. இயந்திரமயமாக்கலை விவசாயிகளுக்கு அதிகார மளிக்கும் தேசிய இலக்காகவும், உலகளாவிய தொழில்நுட்பத்தை உள்ளூர் புரிதல்களுடன் இணைப்ப தாகவும் நிறுவனத்தின் தலைமை நிதி அதிகாரி பாரத் மதன் கூறினார். வேளாண் தீர்வுகள் தலைவர் ராஜன் சுக், தொழிலாளர் பற்றாக்குறை போன்ற உண்மையான சவால்களை சமாளிக்க இவை வடிவமைக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

## அகர்பத்தி தயாரிப்பு பயிற்சி சென்னையில் நடைபெறுகிறது

**சென்னை, நவ. 20:**

தமிழக அரசின் தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் சார்பில், இரண்டு நாள் அகர்பத்தி பொருட்கள் தயாரிப்புப் பயிற்சி வரும் நவம்பர் 25 மற்றும் 26-ஆம் தேதிகளில் சென்னையில் நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சி ஈக்காட்டுத்தாங்கலில் உள்ள நிறுவன வளாகத்தில் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெறும். பாரம்பரிய மற்றும் அதிக தேவை உள்ள அகர்பத்திகள், மூலிகை அகர்பத்தி, சாம்பிராணி, மூலிகை மெழுகுவர்த்திகள், பூஜை எண்ணெய், கற்பூரக் கேக், சந்தன மாத்திரைகள், உலோக சுத்திகரிப்பு திரவங்கள் உள்ளிட்ட 17 வகையான பொருட்களைத் தயாரிக்க இந்தப் பயிற்சியில் கற்றுக்கொடுக்கப்பட உள்ளது. ஆண், பெண் மற்றும் திருநங்கைகள் என 18 வயதுக்கு மேற்பட்டோர் மற்றும் குறைந்தபட்சம் 10-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் இதில் பங்கேற்கலாம்.

குறைந்த கட்டணத்தில் தங்கும் விடுதி வசதியும் வழங்கப்படும். பயிற்சியில் பங்கேற்க விரும்புவோர் www.editn.in என்ற இணையதளத்திலோ அல்லது 9360221280 / 9840114680 ஆகிய எண்களிலோ (திங்கள் முதல் வெள்ளி வரை, காலை 10 மணி முதல் மாலை 5.45 மணி வரை) தொடர்பு கொண்டு முன்பதிவு செய்து கொள்ளலாம்.

## கோவையில் ரூ.214 கோடியில் செம்மொழி பூங்கா: மு.க.ஸ்டாலின் 25-ந் தேதி திறந்து வைக்கிறார்

**கோவை, நவ.20:**

கோவை காந்திபுரம் மத்திய சிறைச்சாலை பகுதியில் 45 ஏக்கரில் செம்மொழி பூங்கா அமைக்க கடந்த 2023-ம் ஆண்டு டிசம்பர் மாதம் அடிக்கல் நாட்டப்பட்டது. இந்த பணிக்காக முதலில் ரூ.167.25 கோடி, தற்போது கூடுதலாக ரூ.47 கோடி என மொத்தம் ரூ 214.25 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இதைத்தொடர்ந்து பூங்கா அமைக்கும் பணிகள் முழுவீச்சில் நடைபெற்றது. பூங்கா முகப்பில் செயற்கை மலைக்குன்றுகள், அதில் நீர் வீழ்ச்சி, வன விலங்குகள் நடமாடுவது போன்றும் சிற்பங்கள் வடிவமைக்கப்பட்டு உள்ளன. அதன் வழியாக செல்வது பார்வையாளர்களுக்கு புதிய அனுபவத்தை அளிக்கும் வகையில் அமைக்கப்பட்டு உள்ளது.

பூங்காவில் கடையேழு வள்ளல்களின் சிலைகள், 23 வகையான பூந்தோட்டம், ஆயிரம் வகை ரோஜா செடிகள், தென் அமெரிக்க நாடுகளில் இருந்து வரவழைக்கப்பட்ட அரிய வகை மரங்கள் மற்றும் பலவித கற்றாழைகள் நடவு செய்யப்பட்டு உள்ளன. செம்மொழி பூங்காவில் 1,000 பேர் அமரக்கூடிய இருக்கை வசதியுடன் மாநாட்டு மையம், வாகனங்களை நிறுத்தும் வளாகம் அமைக்கப்பட்டு உள்ளது.



கோவை மாநகர மக்களின் பொழுதுபோக்கு மையமாக விளங்க உள்ள செம்மொழி பூங்காவை முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் வருகிற 26-ந் தேதி தொடங்கி வைக்க இருப்பதாக முதலில் தெரிவிக்கப்பட்டு இருந்தது. இதைத்தொடர்ந்து கடந்த 15-ந் தேதி நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, செம்மொழி பூங்கா பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர் அவர் நிருபர்களுக்கு அளித்த பேட்டியின்போது, செம்மொழி பூங்காவில் மொத்தம் 23 பணிகள் முடிந்து விட்டன. 4 பணிகள் மட்டும் மீதி உள்ளது. திறப்பு விழா தேதியை முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பார் என்று கூறினார். இதைத்தொடர்ந்து 26-ந் தேதிக்கு பதிலாக ஒரு நாள் முன்கூட்டியே 25-ந் தேதி செம்மொழி பூங்கா திறக்கப்பட உள்ளது. அதன்படி முதல் - அமைச்சர் மு.க.ஸ்டாலின் வருகிற 25-ந் தேதி கோவை வந்து செம்மொழிப் பூங்காவை திறந்து வைக்கிறார். எனவே பூங்காவில் இறுதிக்கட்ட பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.

# சபரிமலையில் கட்டுக்கடங்காத கூட்டம்! தேசிய பேரிடர் மீட்புக் குழு விரைவு!

திருவனந்தபுரம், நவ. 20:

சபரிமலை ஐயப்பன் கோயிலில் கட்டுக்கடங்காத கூட்டம் நிலவுவதால், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கூடுதல் வீரர்களை தேசிய பேரிடர் மீட்புக் குழு அனுப்பியுள்ளது.

சபரிமலை ஐயப்பன் கோயிலில் வருடாந்திர மண்டல-மகரவிளக்கு உற்சவ காலத்தையொட்டி நடை திறக்கப்பட்ட 48 மணி நேரத்துக்குள் 2 லட்சத்துக்கும் அதிகமான பக்தர்கள் திரண்டதால், நெரிசலைக் கட்டுப்படுத்த முடியாமல் தேவஸ்வம் அதிகாரிகளும், போலீஸாரும் திணறி வருகின்றனா.



அடிவாரமான பம்பையில் இருந்து சந்நிதானம் வரையான மலைப் பாதைகளில் பக்தர்கள் கூட்டம் நிரம்பி வழிந்ததால், பல மணி நேரம் தாமதத்துடன் பக்தர்கள் மலையேறி, தரிசனம் செய்யும் நிலை உள்ளது.

கடந்த ஆண்டு 4 வெவ்வேறு நாள்களில் பக்தர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்தைத் தாண்டியது. ஆனால் இந்த முறை, முதல் இரண்டு நாள்களிலேயே சுமார் 2 லட்சம் பக்தர்கள் யாத்திரைக்கு வந்துள்ளனர்.

பக்தர்கள் பதினெட்டாம்படியில் சீராக ஏறவும், யாரும் வரிசையைத் தாண்டி முன்னால் செல்லாமல் இருக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.


பம்பையில் பக்தர்கள் கூட்டத்தைக் குறைக்கவும், அவர்கள் பல மணி நேரம் காத்திருக்காமல் விரைவாக யாத்திரையை முடிக்கவும் நிலக்கல் பகுதியிலேயே பக்தர்களின் வருகையைக் கட்டுப்படுத்த தேவஸ்வம் வாரியம் உத்தரவிடப்பட்டுள்ளது.

இதனிடையே, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கூடுதலாக தேசிய பேரிடர் மீட்புக் குழுவைச் சேர்ந்த வீரர்கள் சபரிமலைக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

அதன்படி, அரக்கோணத்தில் இருந்து 60 பேர் கொண்ட 2 பேரிடர் மீட்புக் குழுவினர், தேவையான உபகரணங்களுடன் சபரிமலைக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

## தொழில்நுட்ப / அறிவியல் செய்திகள்

### சூரிய ஒளியில் இயங்கும் வேதியியல் ஆலை



சூரிய ஒளி, தட்டுப்பாடற்ற இலவச ஆற்றல் ஆதாரம். அதை, ஒரு வேதியியல் தொழிற்சாலையாக மாற்றியிருக்கின்றனர் கேம்பிரிட்ஜ் பல்கலை ஆய்வாளர்கள். அவர்கள் வடிவமைத்த, 'பாதி செயற்கை இலை' (semi-artificial leaf), கரியமில வாயுவையும் நீரையும், சூரிய ஒளியைக் கொண்டு, மதிப்புமிக்க மூலக்கூறுகளாக மாற்றுகிறது.

உதாரணமாக, பார்மேட் (formate) போன்ற மூலப் பொருட்களை பாதி செயற்கை இலை உருவாக்குகிறது. எரிபொருட்கள் மற்றும் மருந்துகளை உருவாக்கும் தூய மூலப்பொருளாக இருக்கக்கூடியது பார்மேட். இதை வெறும் சூரிய ஒளி மூலம் உருவாக்க முடியும் என்பது விஞ்ஞானி களுக்கு உற்சாகத்தை ஏற்படுத்தி உள்ளது.

இந்தக் கருவி, வழக்கமான உலோக வினையூக்கிகள் மற்றும் கனிம குறைக் கடத்திகளுக்குப் பதிலாக, ஒளி- உறிஞ்சும் கரிமப் பொருட்களையும் பாக்டீரிய நொதிகளையும் நம்பியுள்ளது.

எனவே, கச்சிதமான, நச்சுத்தன்மையற்ற வேதியியல் உற்பத்தி ஆலையாக இருக்கிறது இந்த 'பாதி செயற்கை இலை.' இது சாதாரண பைகார்பனேட் கரைசலில் இயங்குகிறது. தவிர, இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட செயற்கை ஒளிச்சேர்க்கை கருவிகள் ஒரு நாளுக்கு மேல் வேலை செய்வதில்லை. ஆனால், கேம்பிரிட்ஜ் விஞ்ஞானிகளின் பாதி செயற்கை இலை கருவி, ஒரு நாளுக்கு மேல் தொடர்ந்து இயங்கிக் காட்டியுள்ளது.

முந்தைய செயற்கை-இலை கருவிகள், பெரும்பாலும் ஹைட்ரஜனை மட்டுமே உருவாக்கின. ஆனால், இது சிக்கலான வேதிப்பொருட்களை உருவாக்குகிறது. இதை அப்படியே வளர்த் தெடுத்து, தொழிற்சாலை மட்டத்திற்கு கொண்டுவர முடிந்தால், தொழிற் சாலைகள் முற்றிலும் சூரிய ஒளியின் மூலம், இயங்கி, காற்றிலிருந்து வேதிப் பொருட்களை உறிஞ்சி எடுக்க முடியும்.

# தாய்லாந்தில் இருந்து நாடு திரும்பிய இந்தியர்கள்! எண்ணிக்கை 1,500 ஆக உயர்வு



புதுடெல்லி, நவ.20:

தாய்லாந்தில் இருந்து இந்திய விமானப் படையின் சிறப்பு விமானம் மூலம் புதியதாக 125 இந்தியர்கள் நாடு திரும்பியுள்ளனர்.

மியான்மர் நாட்டில், செயல்படும் மோசடி மையங்களில் வேலைச் செய்வதற்காக போலி தரகர்கள் மூலம் ஏமாற்றி அழைத்துச் செல்லப்பட்ட இந்தியர்கள் மீட்கப்பட்டு தாய்லாந்து வழியாகத் தொடர்ந்து இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பப்பட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், மத்திய அரசு மற்றும் பாங்காக் நகரத்தில் உள்ள இந்தியத் தூதரகத்தின் முயற்சியால் புதியதாக 125 இந்தியர்கள் தாய்லாந்தின் மே சோட் நகரத்தில் இருந்து இந்திய விமானப் படையின் சிறப்பு விமானம் மூலம் நேற்று (நவ. 19) நாடு திரும்பியுள்ளனர்.

இதன்மூலம், கடந்த மார்ச் மாதம் முதல் மியான்மரில் இருந்து மீட்கப்பட்டு தாய்லாந்து வழியாகத் திருப்பி அனுப்பப்பட்ட இந்தியர்களின் எண்ணிக்கை 1,500 ஆக உயர்ந்துள்ளதாக, பாங்காக்கில் உள்ள இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

முன்னதாக, செவ்வாய்க்கிழமை மே சோட் நகரத்திலிருந்து இந்திய விமானப் படையின் சிறப்பு விமானங்கள் மூலம் 11 பெண்கள் உள்பட 269 இந்தியர்கள் நாடு திரும்பியது குறிப்பிடத்தக்கது.

# ரூ. 300 கோடி முறைகேடு புகார்: விசாரணை அறிக்கையில் அஜித் பவாரின் மகன் பெயர் இல்லை!

புதுடெல்லி, நவ.20:

புணேயின் முந்துவா பகுதியில் உள்ள 40 ஏக்கா அரசு நிலம் 'அமடே' என்ற தனியார் நிறுவனத்துக்கு ரூ.300 கோடிக்கு விற்பனை செய்யப்பட்டது. இதற்கு முத்திரைத்தாள் வரி வசூலிக்கப்படவில்லை. அந்த நிறுவனத்தில் பார்த் பவார் மற்றும் திக்விஜய் அமர்சிங் பாட்டீல் உள்ளிட்டோர் பங்குதாரர்களாக உள்ள நிலையில் அரசு நிலம் தனியார் நிறுவனத்துக்கு விற்பனை செய்யப்பட்டதாக குற்றச்சாட்டு எழுந்தது. மேலும் சாச்சைக்குள்ளான அந்த நிலம் ரூ.1,800 கோடி மதிப்புடையது என எதிர்க்கட்சிகள் கூறி வருகின்றன.

இதையடுத்து, இந்த விவகாரத்தில் உரிய விசாரணை மேற்கொள்ள கூடுதல் தலைமைச் செயலா (வருவாய்) விகாஸ் கார்கே தலைமையிலான குழுவை அமைத்து மகாராஷ்டிர முதல்வர் தேவேந்திர ஃபட்னாவீஸ் உத்தரவிட்டிருந்தார்.

இதனிடையே, பதிவுத் துறை சார்பில் விசாரணை அறிக்கை தாக்கல் செய்ய, துறையின் இணை ஐஜி ராஜேந்திர முத்தே தலைமையில், மூன்று பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டிருந்தது.

அந்த குழு, தனது அறிக்கையை பதிவுத் துறை மண்டலத் தலைவரிடம் செவ்வாய்க்கிழமை சமர்ப்பித்துள்ளது.

மேலும், சர்ச்சைக்குரிய நிலம் தொடர்பான எந்த ஆவணங்களிலும் பார்த் பவாரின் பெயர் இல்லாததால், பதிவுத் துறையின் விசாரணை அறிக்கையில் அவரின் பெயர் இல்லை என்று மூத்த அதிகாரி ஒருவர் விளக்கம் அளித்துள்ளார்.

# மருந்து தயாரிப்பு நிறுவனங்களால் பாதிக்கப்படும் நுகர்வோருக்கு சரியான தீர்வு கிடைக்க வேண்டும்: உச்சநீதிமன்றம்

புதுடெல்லி, நவ.20:

மருந்து தயாரிப்பு நிறுவனங்களின் நீதிநெறியற்ற நடவடிக்கைகளால் ஏமாற்றப்படும் நுகர்வோருக்கு சரியான தீர்வு கிடைக்க, மருந்து பொருள்களை சந்தைப்படுத்துவதற்கான பொது விதிகளின் கீழ் வலுவான நடைமுறைகள் இருக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் தெரிவித்தது.

இதுதொடர்பாக உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு ஒன்றில், மருந்து தயாரிப்பு நிறுவனங்களிடம் மருத்துவர்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கான நடத்தை விதிமுறைகள் 2002-ஆம் ஆண்டின் இந்திய மருத்துவ கவுன்சில் விதிமுறைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மருந்து தயாரிப்பு நிறுவனங்களிடம் இருந்து பணம், பரிசுகள், பயண வசதிகள் உள்ளிட்டவற்றை மருத்துவர்கள் பெற அந்த ஒழுங்குமுறைகள் தடை விதித்துள்ளன.



இந்த நடத்தை விதிமுறைகளை மருத்துவர்களுக்கு எதிராக அமல்படுத்த முடியும். ஆனால் அந்த விதிமுறைகள் மருந்து தயாரிப்பு நிறுவனங்களுக்குப் பொருந்தாது. இதனால் அந்த நிறுவனங்களுடன் சேர்ந்து மருத்துவர்கள் முறைகேடாக நடந்தால், அவர்களின் உரிமங்கள் மட்டும் ரத்து செய்யப்படும். அந்த நிறுவனங்களின் தூண்டுதலால் மருத்துவர்கள் அவ்வாறு நடந்துகொண்டாலும், எந்தவித நடவடிக்கையையும் எதிர்கொள்ளாமல் மருந்து தயாரிப்பு நிறுவனங்கள் தப்பித்துக் கொள்கின்றன. அந்த நிறுவனங்கள் மருத்துவர்கள் மூலம் மருந்துகளை விளம்பரப்படுத்துவதை கட்டுப்படுத்த தற்போது எந்தச் சட்டமும் இல்லை. இதனால் மருந்து விற்பனையில் அந்த நிறுவனங்களின் நீதி நெறியற்ற நடவடிக்கைகள் தடையின்றி தொடர்கின்றன. எனவே மருந்துகளை சந்தைப்படுத்தும் நடைமுறைகளின் பொது விதிகளின் மூலம், மருந்து தயாரிப்பு நிறுவனங்களின் நீதிநெறியற்ற நடவடிக்கைகளைத் தடுக்க வேண்டும் என்று கோரப்பட்டது.

இந்த மனு உச்சநீதிமன்ற நீதிபதிகள் விக்ரம் நாத், சந்தீப் மேத்தா ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பாக செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு வந்தது.

அப்போது நீதிபதிகள் கூறுகையில், மருந்துகளை சந்தைப்படுத்தும் நடைமுறைகளின் பொது விதிகள் கொண்டுவரப்பட்டிருந்தால், அந்த விதிகளில் தவறு செய்யும் மருந்து தயாரிப்பு நிறுவனங்கள் மீது நுகர்வோர் புகார் அளிக்கவும், நடவடிக்கை எடுக்கவும் வசதியான வழிமுறையைக் கொண்ட பொருத்தமான நடவடிக்கைகள் ஏன் இருக்கக் கூடாது? மருந்து தயாரிப்பு நிறுவனங்களின் நீதிநெறியற்ற நடவடிக்கைகளால் ஏமாற்றப்படும் எந்தவொரு நுகர்வோருக்கு சரியான தீர்வு கிடைக்க, மருந்து பொருள்களை சந்தைப்படுத்துவதற்கான பொது விதிகளின் கீழ் வலுவான நடைமுறைகள் இருக்க வேண்டும் என்று தெரிவித்தனர்.

நுகர்வோர் தங்கள் புகார்களை பதிவு செய்வதற்கும் தவறு செய்யும் நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுவதை உறுதி செய்வதற்கும் ஒரு வசதியான வழிமுறையைக் கொண்ட பொருத்தமான நடவடிக்கைகள் இருக்க வேண்டும் என்று நீதிபதிகள் விக்ரம் நாத் மற்றும் சந்தீப் மேத்தா ஆகியோர் அடங்கிய அமர்வு கூறியது.

இதற்கு மத்திய அரசு தரப்பில் ஆஜராகி பதிலளித்த கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் கே.எம். நட்ராஜ், அந்த விதிகளின் கீழ் புகார் அளிக்கவும், அபராதம் விதிக்கவும் தனி வலைதளத்தை தொடங்கலாம் என்று யோசனை தெரிவித்தார்.

## க்ரைம் கார்னர்

### ஏடிஎம் வாகனத்தை ஊழியருடன் கடத்தி ரூ.7 கோடி கொள்ளை

பெங்களூரு, நவ.20:

பெங்களூரு: பெங்களூருவில், பட்டப்பகலில் ஏடிஎம் வாகனத்தில் இருந்த ரூ.7 கோடியை மர்ம நபர்கள் கொள்ளை அடித்துச் சென்றனர். வரித்துறை அதிகாரிகள் என்ற போர்வையில் இவர்கள் கொள்ளைச் சம்பவத்தை அரங்கேற்றி இருக்கின்றனர்.

இதுபற்றிய விவரம் வருமாறு; ஜெபி நகரில் உள்ள தனியார் வங்கி கிளையில் இருந்து கோடிக்கணக்கான ரூபாயுடன் ஏடிஎம் வேன் ஒன்று புறப்பட்டது. ஜெயாநகர், அசோக் பில்லர் அருகே வந்தபோது, சொகுசு கார் ஒன்றில் வந்த சிலர் வேனை மறித்துள்ளனர். மத்திய அரசின் வருமான வரித்துறை அதிகாரிகள் என்று கூறிய அவர்கள், வேனில் உள்ள ஊழியரை மிரட்டி ரூ.7 கோடியுடன் தங்கள் வாகனத்தில் ஏற்றினர்.

பின்னர், டெய்ரி சர்க்கிள் அருகே காரை நிறுத்தி, வங்கி ஊழியரை கீழே தள்ளிவிட்டு அருகில் உள்ள பாலத்தில் வண்டியுடன் தப்பிவிட்டனர். வினாடிக்கும் குறைவான நேரத்தில் நிகழ்ந்த இந்த சம்பவத்தில் அதிர்ச்சி அடைந்த வங்கி ஊழியர் இது குறித்து உடனடியாக போலீசாருக்கு தகவல் தெரிவித்தார்.

வங்கி ஊழியரிடம் விசாரணை நடத்திய போலீசார், சொகுசு வேன் பன்னார்கட்டா சாலையில் சென்றிருப்பதை ஊர்ஜிதம் செய்துள்ளனர். வேனை பிடிக்க, அனைத்து சோதனைச் சாவடிகளையும் உஷார்படுத்தி உள்ளனர்.

இந்த சம்பவத்தில் வேனில் இருந்த ரூ.7.11 கோடியும் கொள்ளை அடிக்கப்பட்டு உள்ளது. பட்டப்பகலில் நிகழ்ந்த துணிகர கொள்ளையைத் தொடர்ந்து, சொகுசு வேன் எங்கிருந்து வந்தது? அதன் பதிவெண் உள்ளிட்ட விவரங்களை கண்டறிய, சம்பவம் நிகழ்ந்த பகுதியில் உள்ள சிசிடிவி காட்சிகளை கைப்பற்றி விசாரணை நடத்தி வருகின்றனர்.

### டில்லி கார் குண்டு வெடிப்பு பயங்கரவாதி சென்னையில் தங்கினாரா என விசாரணை

சென்னை, நவ.20:

டில்லியில், தற்கொலை படை தாக்குதலில் ஈடுபட்ட பயங்கரவாதி உமர் நபி, சென்னையில் உள்ள பண்ணை வீடுகளில், தன் கூட்டாளிகளுடன் தங்கி சென்றாரா என, என்.ஐ.ஏ., அதிகாரிகள் விசாரித்து வருகின்றனர்.

டில்லி செங்கோட்டை அருகே, கடந்த, 10ம் தேதி பயங்கரவாதி உமர் நபி, காரில் வெடி பொருட்களை எடுத்து சென்று வெடிக்க வைத்தார். இதில், அவரும், அப்பாவிகள், 14 பேரும் பலியாகினர். இச்சம்பவம் குறித்து, என்.ஐ.ஏ., எனும் தேசிய புலனாய்வு முகமை அதிகாரிகள் விசாரித்து வருகின்றனர். இவர்கள், டில்லியில் நடந்த குண்டு வெடிப்பு சம்பவத்தில் தொடர்புடையவர்களுக்கும், கோவையில், கடந்த 2022ல், கோட்டை ஈஸ்வரன் கோவில் முன் நடந்த, கார் குண்டு வெடிப்பு சம்பவத்தில் ஈடுபட்டவர்களுக்கும் தொடர்பு உள்ளதா என, விசாரித்து வருகின்றனர்.

இக்குண்டு வெடிப்பு வழக்கில் கைதான 17 பேரையும், கேரள சிறையில் அடைக்கப்பட்டு உள்ள அசாருதீனையும், விசாரணை வளையத்திற்குள் கொண்டு வந்துள்ளனர்.

இதற்கிடையே பயங்கரவாதி உமர் நபி, அக்டோபரில் சென்னையில் உள்ள பண்ணை வீடுகளில், கூட்டாளிகளுடன் தங்கி சென்றதாக, என்.ஐ.ஏ., அதிகாரிகளுக்கு தகவல்கள் கிடைத்து உள்ளன. அதன் அ டிப்படையில், விசாரணை நடத்தி வருகின்றனர். என்.ஐ.ஏ., அதிகாரிகள் கூறுகையில், 'இலங்கையில், 2019ல், ஈஸ்டர் நாளில் தொடர் குண்டு வெடிப்பு நடத்திய சஹ்ரான் ஹாசிம், சென்னை மண்ணடி மற்றும் கோவைக்கு வந்து சென்றார்.

'உமர் நபியும் தன் கூட்டாளிகளுடன் தமிழகம் வந்து சென்றிருக்கலாம் என்ற கோணத்தில் விசா ரணை நடக்கிறது' என்றனர்.

### 'ஆன்லைன்' பண மோசடியை தடுக்க கூட்டு நடவடிக்கை குழுக்கள் அமைப்பு

சென்னை, நவ.20:

சென்னை: 'ஆன்லைன்' வாயிலாக நடக்கும் பண மோசடியை தடுக்க, வங்கி அதிகாரிகள், சைபர் குற்றப்பிரிவு போலீசார் இணைந்து செயல்படும் வகையில், 500 கூட்டு நடவடிக்கை குழுக்கள் அமைக்கப்பட்டு உள்ளன.

தமிழகத்தில் நடப்பாண்டில், 'ஆன்லைன்' வாயிலாக பண மோசடி செய்வது உள்ளிட்ட சைபர் குற்றங்கள் தொடர்பாக, 1.22 லட்சம் புகார்கள் பதிவாகி உள்ளன.

இதுதொடர்பாக, கடந்த மூன்று ஆண்டுகளில், 1,759 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும், 'ஆன்லைன்' வாயிலாக நடக்கும் பண மோசடியை தடுக்க, வங்கி அதிகாரிகள், சைபர் குற்றப்பிரிவு போலீசார் இணைந்து செயல்படும் வகையில், 500 கூட்டு நடவடிக்கை குழுக்கள் அமைக்கப்பட்டு உள்ளன. சைபர் குற்றங்களை தடுக்க, வங்கி அதிகாரிகள் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து, சைபர் குற்றப்பிரிவு கூடுதல் டி.ஜி.பி., சந்தீப் மிட்டல் பிறப்பித்துள்ள உத்தரவு: வாடிக்கையாளர்களின் வருமானம், தொழில், முகவரி போன்ற விபரங்களை முழுமையாக சரி பார்க்க வேண்டும். வாடிக்கையாளர் தெரிவித்த வருமானத்தை விட, அதிகமாக பண பரிவர்த்தனை நடந்தால், உடனே, 'சந்தேகமாக உள்ளது' என, குறிப்பிட்டு விசாரணை நடத்த வேண்டும். திடீரென பெரும் தொகைக்கு பணப் பரிமாற்றம் நடந்தால், ஒரே நேரத்தில் பல முறை பணம் எடுக்கப்பட்டால், வங்கி செயல்பாடுகளை நிறுத்த, தானியங்கி எச்சரிக்கை முறையை அமல்படுத்த வேண்டும் வியாபாரத்தின் உண்மைத் தன்மை, வணிக நிறுவனம் செயல்படும் இடங்கள், ஆவணங்களை முழுமையாக சரிபார்த்த பின்னரே, நடப்பு கணக்கு துவங்க வேண்டும். சைபர் குற்றங்கள் நடந்திருப்பதாக, வாடிக்கையாளர்களிடம் இருந்து தகவல் கிடைத்த உடனேயே, வங்கி அதிகாரிகள் புகார் அளிக்க வேண்டும் புதிய வகையிலான, சைபர் குற்றங்கள் மற்றும் அவற்றை தடுப்பது குறித்து, வங்கி அதிகாரிகளுக்கு தொடர் பயிற்சி அளிக்க வேண்டும். மென்பொருள் மற்றும் சர்வர் பாதுகாப்பில், மிகுந்த கவனம் செலுத்த வேண்டும்

இவ்வாறு அவர் உத்தரவிட்டுள்ளார்.

# ஆந்திரத்தில் ஒருங்கிணைந்த நடவடிக்கை: 50 மாவோயிஸ்ட்கள் கைது!

**புதுடெல்லி, நவ.20:**

ஆந்திரப் பிரதேசத்தில் காவல்துறையினர் மற்றும் ஒருங்கிணைந்த உளவுத்துறை தலைமையிலான நடவடிக்கைகளில் ஐந்து மாவட்டங்களில் சுமார் 50 சிபிஐ (மாவோஸ்யிட்) கைது செய்ததாக அதிகாரி தெரிவித்தார்.

நவம்பர் 18 அன்று அல்லூரி சீதாராம் ராஜு மாவட்டத்தில் உள்ள மாரேடுமில்லியில் நடந்த என்கவுண்டருடன் இந்த அதிரடி நடவடிக்கையும் நடந்தது. அங்கு நக்சலைட் தளபதி எம். ஹித்மா மற்றும் 5 பேர் கொல்லப்பட்டனர்.

தளபதி ஹித்டத கொல்லப்பட்டதைத் தொடர்ந்து ஐந்து மாவட்டங்களில் ஒருங்கிணைந்த உளவுத்துறை சார்ந்த நடவடிக்கைகளைத் தொடங்கி 50 சிபிஐ மாவோயிஸ்ட்கள் கைது செய்யப்பட்டனர் என விஜயவாடாவில் செய்தியாளர் கூட்டத்தில் பேசிய ஏடிஜிபி உளவுத்துறை மகேஷ் சந்திர லத்தா தெரிவித்தார்.



கைது செய்யப்பட்டவர்கள் மாவோயிஸ்ட்களுக்குள் வெவ்வேறு நிலைகளைச் சேர்ந்தவர்கள் என்று போலீஸார் தெரிவித்தனர், இதில் சிறப்பு மண்டலக் குழு உறுப்பினர்கள், பிரிவுக் குழு உறுப்பினர்கள், பகுதிக் குழு உறுப்பினர்கள் மற்றும் தெற்கு பஸ்தர்-தண்டகாரண்யா பகுதியில் செயல்படும் உறுப்பினர்கள் ஆகியோர் அடங்குவர்.

லத்தாவின் கூற்றுப்படி, சமீபத்திய ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட விரிவான நடவடிக்கைகளில் இதுவும் ஒன்றாகும். இதன் விளைவாகப் பல மாவட்டங்களிலிருந்து 50 மாவோயிஸ்ட் செயல்பாட்டாளர்கள் கைது செய்யப்பட்டனர்.

விஜயவாடா நகரம் உள்பட கிருஷ்ணா, எலுரு, என்டிஆர், காக்கிநாடா, கோனசீமா மாவட்டங்களில் இந்த நடவடிக்கை அமைதியாகவும், ஒருங்கிணைத்தும் மேற்கொள்ளப்பட்டது.

மாவோயிஸ்ட் இயக்கம் குறித்த தகவல்களைத் தொடர்ந்து மாநில புலனாய்வுத் துறை, சிறப்புப் புலனாய்வுப் பிரிவு, மாவட்ட காவல் பிரிவுகள் மற்றும் விஜயவாடா ஆணையரகத்தைச் சேர்ந்த பணியாளர்கள் இந்த நடவடிக்கையில் பங்கேற்றனர்.

தொடர்ச்சியான பாதுகாப்பு அழுத்தம் காரணமாக சத்தீஸ்கரில் உள்ள சுக்மா, பிஜாப்பூர், நாராயண்பூர், மேற்கு பஸ்தர் மாவட்டங்களிலிருந்து நக்சல்கள் பலர் தப்பிச் சென்றதாகவும், அவர்கள் ஆந்திரத்தில் கைது செய்யப்பட்டதாகவும் அவர் கூறினார்.

சோதனைகளின் போது பல்வேறு இடங்களிலிருந்து 39 ஆயுதங்கள், 302 தோட்டாக்கள், டெட்டனேட்டர்கள், கார்டெக்ஸ் வயர், தகவல் தொடர்பு சாதனங்கள் மற்றும் ரூ. 13 லட்சம் ரொக்கம் ஆகியவற்றை போலீஸார் மீட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ராகுலின் குற்றச்சாட்டுகளுக்கு எதிராக 272 பேர் தேர்தல் ஆணையத்துக்கு கடிதம்!

**புதுடெல்லி, நவ.20:**

மகாராஷ்டிரம், பிகார் சட்டப்பேரவைத் தேர்தல் என அடுத்தடுத்து தோல்விகளைக் காங்கிரஸ் சந்தித்து வரும் நிலையில், மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி தேர்தல் ஆணையத்தின் மீது அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளை முன்வைத்து வருகிறார். வாக்குத்திருட்டு, போலி வாக்காளர்கள் உள்பட தொடர்ச்சியான புகார்களைச் சொல்லி வருகிறார். மேலும் பாஜக வெற்றிக்குத் தேர்தல் ஆணையம் உதவுவதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் தேர்தல் ஆணையத்தை பலமுறை தாக்கி வருகிறார். தேர்தல் ஆணையம் வாக்குத் திருட்டில் ஈடுபட்டதற்கான வெளிப்படையான ஆதாரம் தன்னிடம் 100 சதவீத ஆதாரம் இருப்பதாகவும் கூறியுள்ளார். நம்பமுடியாத அளவிற்கு அநாகரீகமான சொல்லாட்சியைப் பயன்படுத்தி, அவர் கண்டுபிடித்தது ஒரு அணுகுண்டு என்றும், அது வெடித்தால், தேர்தல் ஆணையத்திற்கு மறைக்க இடமில்லை என்றும் கூறியுள்ளார். இந்த குற்றச்சாட்டுகளுக்கு மறுப்பு தெரிவித்தும் ராகுல் காந்தியிடம் தேர்தல் ஆணையம் விளக்கம் கேட்டுள்ளது. அதேசமயம் அவருக்கு தகுந்த விளக்கத்தையும் அளித்து வருகின்றது. இந்த நிலையில், எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தியின் தேசிய அரசியலமைப்பு அதிகாரிகள் மீதான தாக்குதலை மீண்டும் மீண்டும் கண்டித்து 16 நீதிபதிகள், 123 ஓய்வு பெற்ற அதிகாரிகள், 14 தூதர்கள், 133 ஓய்வு பெய்ய ஆயுதப்படை அதிகாரிகள் உள்பட மொத்தம் 272-க்கும் மேற்பட்டோர் தேர்தல் ஆணையத்திற்குக் கடிதம் எழுதியுள்ளனர்.

## 45 பேரின் உடல்களை சவூதியிலேயே அடக்கம் செய்ய ஏற்பாடு?

இந்தியா உள்ளிட்ட உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து இஸ்லாமியர்களின் புனித நகரமாக கருதப்படும் மெக்காவுக்கு புனித யாத்திரை செல்வது வழக்கம். திங்களன்று அதிகாலை 1 மணி அள வில் சவூதி அரேபியாவில் இந்த யாத்தி ரைக்கு சென்றவர்களை ஏற்றிக் கொண்டு, மெக்காவில் இருந்து மதீனா வுக்கு சென்று கொண்டிருந்த பேருந்து முப்ரிஹட் என்ற இடத்தில் டீசல் டேங்கர் லாரியுடன் மோதி தீப்பிடித்தது. இந்த கோர விபத்தில் 45 பேர் உயிரிழந்தனர். உயிரிழந்த அனைவரும் தெலுங்கானா மாநிலம் ஹைதராபாத்தில் இருந்து சென்றவர்கள் என்று கண்ட றியப்பட்டுள்ளது. இந்நிலையில், மெக்கா பேருந்து விபத்தில் உயிரிழந்த 45 பேரின் உடல்கள் கருகிய நிலையில் இருப்பதால், உடல் களை சவூதியிலேயே அடக்கம் செய்ய தெலுங்கானா அரசு ஏற்பாடு செய்துள்ள தாக செய்திகள் வெளியாகியுள்ளன. ஒரு குடும்பத்திற்கு தலா 4 பேரை அரசு செலவில் இறுதிச் சடங்கு நடைபெறும் இடத்திற்கு அழைத்துச் செல்லவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் காங்கிரஸ் ஆளும் தெலுங்கானா அரசு தரப்பில் தகவல் வெளியாகியுள்ளதாக கூறப்படுகிறது.

## தில்லி குண்டு வெடிப்பு 24 இடங்களில் அமலாக்கத்துறை சோதனை

தில்லியில் நவம்பர் 10ஆம் தேதி நிகழ்ந்த கார் குண்டு வெடிப்பில் 15 பேர் உயிரிழந்தனர். 20க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். இந்த விவகாரம் தொடர்பாக பலர் கைது செய்யப்பட்டனர்.

இந்நிலையில், தில்லி குண்டு வெடிப்பு சம்பவம் தொடர்பாக செவ்வா யன்று அமலாக்கத்துறை 24 இடங்களில் சோதனை நடத்தியது. ஹரியானாவின் பரீதாபாத்தில் அமைந்துள்ள அல்-பலா பல்கலைக்கழகத்தின் தலைமையிடம், தில்லி மற்றும் பரீதாபாத்தில் உள்ள 24 இடங்களில் அமலாக்கத்துறை அதிகாரிகள் சோதனை நடத்தினர். மேலும் சோதனை நடைபெற்ற இடத்தில் 30க்கும் மேற்பட்ட நபர்களிடம் அம லாக்கத்துறை அதிகாரிகள் விசாரணை நடத்தியதாகவும் செய்திகள் வெளியாகி யுள்ளன. ஆனால் சோதனையில் கைப் பற்றப்பட்ட ஆவணங்கள் தொடர்பாக உறுதியான தகவல் எதுவும் வெளி யாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# அல் ஃபலா குழுமத்தில் கணக்கில் வராத ரூ. 415 கோடி பணம்! அமலாக்கத்துறை

**புதுடெல்லி, நவ.20:**

அல் ஃபலா குழுமத்தின் தலைவர் ஜாவத் அகமது சித்திக்கின் அறக்கட்டளையால் நடத்தப்படும் கல்வி நிறுவனங்களில் கணக்கில் வராத ரூ. 415 கோடி பணம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அமலாக்கத்துறை நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

மேலும், ஜாவத் அகமது சித்திக் வளைகுடா நாடுகளுக்கு தப்பிச் சென்று குடியேற திட்டமிட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தில்லி செங்கோட்டை அருகே நிகழ்ந்த கார் வெடிப்பு வழக்கில் தொடர்புடைய ஹரியாணா மாநிலம் ஃபரீதாபாதின் அல் ஃபலா அறக்கட்டளை, அதன் பல்கலைக்கழக நிறுவனங்கள், மேம்பாட்டாளர்கள் தொடர்புடைய 25-க்கும் மேற்பட்ட இடங்களில் அமலாக்கத் துறையினர் செவ்வாய்க்கிழமை சோதனை நடத்தினர்.

இந்த சோதனையில் ரூ.48 லட்சம் கைப்பற்றப்பட்டதாகவும், போலி நிறுவனங்கள் மூலம் பண முறைகேடுகள் நடைபெற்றது கண்டுபிடிக்கப்பட்டதாகவும் அமலாக்கத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதையடுத்து, பண முறைகேடு தடுப்புச் சட்டத்தின் கீழ் அல் ஃபலா குழுமத் தலைவர் ஜாவத் அகமது சித்திக் கைது செய்யப்பட்டு, கூடுதல் அமர்வு நீதிபதி ஷீத்தல் சௌத்ரி பிரதானின் வீட்டில் ஆஜர்படுத்தப்பட்டார்.

அப்போது, சித்திக்கின் வழிகாட்டுதல்படி, அல் ஃபலா பல்கலைக்கழகமும், அதன் கீழ் இயங்கும் அறக்கட்டளையும் மாணவர்கள் மற்றும் பெற்றோர்களிடம் இருந்து முறைகேடாக ரூ. 415 கோடி பணத்தை வசூலித்தது கண்டுபிடிக்கப்பட்டதாக அமலாக்கத்துறை நீதிபதியிடம் தெரிவித்தது.

மேலும், அவரது நெருங்கிய உறவினர்கள் வளைகுடா நாடுகளில் குடியேறியிருப்பதால், சித்திக்கும் நாட்டைவிட்டுத் தப்பிச் செல்ல வாய்ப்புள்ளதால் அவரை கைது செய்வது அவசியம் எனத் தெரிவிக்கப்பட்டது.

பண முறைகேடு தொடர்பாக விசாரணை மேற்கொண்டு முழுமையான உண்மைகளை வெளிக் கொண்டுவர சித்திக்கிற்கு அமலாக்கத்துறை காவல் விதிக்க வேண்டும் என்று நீதிபதியிடம் கோரிக்கை வைக்கப்பட்டது.

இதனை ஏற்ற நீதிபதி, சித்திக்கிற்கு 14 நாள்கள் அமலாக்கத்துறை காவல் விதித்து உத்தரவிட்டார்.

தில்லி கார் வெடிப்பு சம்பவத்தை நிகழ்த்திய மருத்துவர் உமர் நபி, அல் ஃபலா பல்கலைக்கழகத்தில் மருத்துவக் கல்லூரியின் பேராசிரியராகப் பணியாற்றியவர்.

இதே பல்கலை. யின் பேராசிரியர்களாக பணியாற்றியவர்கள்தான் கைது செய்யப்பட்டிருக்கும் மருத்துவர்கள் ஷாஹீன் ஷாஹித், முஸாமில் அகமது.

மேலும், உமரின் நெருங்கிய உதவியாளர்கள் இரண்டு பேரை என்ஐஏ கைது செய்துள்ளது. இதில், ஜசீர் பிலாலை 10 நாள்கள் என்ஐஏ காவலில் எடுத்து விசாரிக்க தில்லி நீதிமன்றம் செவ்வாய்க்கிழமை அனுமதி அளித்தது குறிப்பிடத்தக்கது.

# ரஷியாவில் புதியதாக 2 இந்தியத் தூதரகங்கள் திறப்பு !



**புதுடெல்லி, நவ.20:**

ரஷியாவில், புதியதாக 2 இந்தியத் தூதரகங்களை மத்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் திறந்துவைத்துள்ளார்.

ரஷியாவின் யெகாடெரின்பர்க் மற்றும் கசான் ஆகிய நகரங்களில் இன்று (நவ. 19) புதியதாக 2 இந்தியத் தூதரகங்கள் திறக்கப்பட்டுள்ளன. இந்தத் தூதரகங்களை, மத்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் திறந்துவைத்துள்ளார்.

*DELIGHTED TO INAUGURATE CONSULATES GENERAL OF INDIA IN YEKATERINBURG AND KAZAN, ALONGSIDE DFM ANDREY RUDENKO, AMB VINAY KUMAR AND REPRESENTATIVES FROM SVERDLOVSK AND TATARSTAN.*

*CONFIDENT THAT THE ESTABLISHMENT OF THE NEW CONSULATES WILL BOOST TRADE, TOURISM, ECONOMIC,… HTTPS://T.CO/ULUC9KQM8O PIC.TWITTER.COM/OYNY1HSNQQ — DR. S. JAISHANKAR (@DRSJAISHANKAR) NOVEMBER 19, 2025*

இந்த நிகழ்ச்சியில், ரஷியாவின் துணை வெளியுறவு அமைச்சர் அண்ட்ரே ருடென்கோ மற்றும் ரஷியாவுக்கான இந்தியத் தூதர் வினய் குமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இது குறித்து, மத்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் கூறியதாவது:

“யெகாடெரின்பர்க்கில் உள்ள தொழிற்சாலைகளால் அந்நகரம் ரஷியாவின் மூன்றாவது தலைநகர் என்றழைக்கப்படுகிறது. இந்தத் தூதரகங்கள் மூலம், இந்தியா மற்றும் ரஷியா இடையிலான அறிவியல், பொருளாதாரம், வர்த்தகம் மற்றும் தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் வளர்ச்சியடைய முடியும். கசான் நகரம் அதன் எண்ணெய், உரங்கள், வாகனங்கள், பாதுகாப்பு கட்டமைப்புகள் ஆகிவற்றின் உற்பத்திகளால் பிரபலமாக அறியப்படுகின்றது” எனக் கூறியுள்ளார். இத்துடன், ரஷியாவில் சுமார் 30,000 இந்திய மாணவர்கள் கல்வி பயின்று வருவதாகவும்; அதில், 7,000 பேர் கசான் தூதரகத்தின் கட்டுப்பாட்டிலும், 3,000 பேர் யெகாடெரின்பர்க் தூதரகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் வசித்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். முன்னதாக, ரஷியாவின் மாஸ்கோ நகரத்தில் உள்ள மகாத்மா காந்தி சிலைக்கு இன்று காலை மத்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் மலர்தூவி மரியாதைச் செலுத்தியது குறிப்பிடத்தக்கது.

## விளையாட்டு செய்திகள்

### இந்திய கலப்பு இணைகளுக்கு தங்கம், வெண்கலப் பதக்கங்கள்




**பெய்ஜிங், நவ.20:**

ஜப்பானில் நடைபெறும் டெஃப்லிம்பிக்ஸ் போட்டியில் துப்பாக்கி சுடுதலில் இந்திய கலப்பு இணைகள் தங்கம் மற்றும் வெள்ளிப் பதக்கங்கள் வென்று அசத்தின.

10 மீட்டர் ஏர் ரைஃபிள் கலப்பு அணிகள் பிரிவில், தனுஷ் ஸ்ரீகாந்த், மஹித் சந்து கூட்டணி 17-7 என்ற கணக்கில் தென் கொரியாவின் ஜியோன் டியான், கிம் வூரிம் இணையை வீழ்த்தி தங்கத்தைக் கைப்பற்றியது. இதில் தொடக்கத்திலேயே 4-0 என முன்னிலை பெற்ற தனுஷ், மஹித் ஜோடி, தென் கொரிய இணையுடன் நல்லதொரு இடைவெளி இருக்கும் வகையிலேயே இறுதி வரை முன்னிலையை தக்கவைத்து வெற்றி பெற்றது. வெண்கலப் பதக்கத்துக்கான சுற்றில், முகமது முர்டாஸாவனியா, கோமல் மிலிந்த் வாக்மேர் ஜோடி 16-12 என்ற வகையில் உக்ரைனின் வயோலெடா லைகோவா, அலெக்ஸாண்டர் கொஸ்டிக் பார்ட்னர்ஷிப்பை வீழ்த்தியது. இந்திய - உக்ரைன் இணை 4-4 என இந்த மோதலை தொடங்கிய நிலையில், இடையே உக்ரைன் ஜோடி 7-5 என முன்னிலை பெற்றது.

ஆனாலும் விடாமல் துரத்திய இந்திய ஜோடி, 7-7, 8-8, 10-10 என பின் தொடர்ந்து, ஒரு கட்டத்தில் முன்னிலையும் கண்டு, இறுதியில் வெற்றியை தனதாக்கி பதக்கத்தைக் கைப்பற்றியது. தற்போது பதக்கம் வென்றுள்ள இந்த இந்திய இணைகளை சேர்ந்த 4 பேருக்குமே இந்தப் போட்டியில் இது 2-ஆவது பதக்கமாகும்.

ஏற்கெனவே தனிநபர் பிரிவிலும் இவர்கள் பதக்கம் வென்றுள்ளனர். போட்டியில் தற்போது இந்தியா 3 தங்கம், 4 வெள்ளி, 2 வெண்கலம் என 9 பதக்கங்களை வென்றுள்ளது.

### உலகக் கோப்பை குத்துச்சண்டை ஃபைனல்ஸ்: இறுதிச் சுற்றில் 8 இந்தியர்கள்

**புதுடெல்லி, நவ.20:**

உலகக் கோப்பை குத்துச்சண்டை ஃபைனல்ஸ் போட்டியில் இறுதிச் சுற்றுக்கு 8 இந்திய நட்சத்திரங்கள் தகுதி பெற்றுள்ளனர்.

புது தில்லி அடுத்த கிரேட்டர் நொய்டாவில் உலகக் கோப்பை குத்துச்சண்டை ஃபைனல்ஸ் போட்டி நடைபெற்று வருகிறது. உலகின் தலைசிறந்த 8 வீரர், வீராங்கனைகள் மட்டுமே பங்கேற்றுள்ளனர். இதன் அரையிறுதி ஆட்டங்கள் செவ்வாய்க்கிழமை நடைபெற்றன.

போட்டியின் மிகப்பெரிய அதிர்ச்சியாக மகளிர் 54 கிலோ பிரிவில் 3 முறை உலக சாம்பியன் சீன தைபேயின் ஹுவாங் வென்னை வீழ்த்தினார் இந்தியாவின் ப்ரீதி பவார். இறுதிக்கும் தகுதி பெற்றார்.

ஒன்றரை ஆண்டுகள் கழித்து களம் கண்ட அருந்ததி உலகக் கோப்பை பதக்க வீராங்கனை ஜெர்மனியின் லியோனி முல்லரை வீழ்த்தி இறுதிக்குள் நழைந்தார்.

உலக சாம்பியன் மீனாட்சி 48 கிலோ பிரிவில் 5-0 என கொரியாவின் பாக் சோ ருங்கை வீழ்த்தினார். ஆடவர் 65 கிலோ பிரிவில் அபினாஷ் ஜாம்வால் உக்ரைனின் எல்வின் அலிவையும், 90 பிளஸ் கிலோ பிரிவில் இந்தியாவின் நரேந்தர் கஜகஸ்தானின் டேனியலையும் வீழ்த்தி இறுதிக்கு தகுதி பெற்றனர்.

80 கிலோ பிரிவில் அங்குஷ் 5-0 என ஆஸ்திரேலியாவின் மார்லன் செவஹோனை வீழ்த்தினார். மகளிர் 80 பிளஸ் கிலோ பிரிவில் நுபுர் உக்ரைனின் மரியா லவ்சின்ஸ்காவையும், 60 கிலோ பிரிவில் பர்வீன் 3-2 என போலந்தின் ரிஜிஸ்ல்கா அனெட்டாவையும் வீழ்த்தினர்.

ஸ்வீட்டி போரா, நவீன் ஆகியோர் தோற்று வெண்கலத்துடன் வெளியேறினர்.

### இந்திய பிக்கிள்பால் லீக்: அணிகளை அறிமுகம் செய்தார் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின்

முதன்முறையாக இந்தியாவில் பிக்கிள்பால் லீக் தொடங்கப்படுகிறது. இந்திய பிக்கிள்பால் சங்கம்,டைம்ஸ் குழும நிர்வாக இயக்குநர் வினித் ஜெயின் முயற்சியில் ஐபிபிஎல் தொடர் நடத்தப்படுகிறது. வரும் டிச. 1 முதல் 7-ஆம் தேதி வரை புது தில்லியில் உள்ள கேடி ஜாதவ் உள்ளரங்கில் போட்டி நடைபெறுகிறது.

சென்னை சூப்பர் வாரியர்ஸ், குர்கான் கேபிடல் வாரியர்ஸ், மும்பை ஸ்மாஷர்ஸ், பெங்களூரு பிளாஸ்டர்ஸ், ஹைதராபாத் ராயல்ஸ் உள்ளிட்ட 5 அணிகள் இடம் பெற்றுள்ளன. 6-ஆவது அணி விரைவில் அறிவிக்கப்படும். இதன் அறிமுக விழா சென்னையில் நடைபெற்றது. போட்டி அமைப்பாளர் வினித் ஜெயின் லீக் குறித்து விவரித்தார். துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அணிகளை அறிமுகம் செய்து வைத்தார்.

விளையாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலர் அதுல்ய மிஸ்ரா, எஸ்டிஏடி உறுப்பினர்-செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, நடிகைகள் ஸ்ரீலீலா, காயாடு லோஹர், சென்னை சூப்பர் வாரியர்ஸ் உரிமையாளர் ஸ்வேதா சந்தீப், பிக்பால் நட்சத்திரங்கள் மிஹிகா யாதவ், அமன்படேல், ஆகியோர் பங்கேற்றனர்.

# லெபனானில் பாலஸ்தீன அகதிகள் முகாமின் மீது இஸ்ரேல் தாக்குதல்! 13 பேர் பலி!

**சிடன், நவ.20:**

சிடன் நகரத்தில் உள்ள எயின் எல்-ஹில்வே அகதிகள் முகாமின் மீது (நவ. 18) இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதல்களில் 13 பேர் கொல்லப்பட்டதாகவும், ஏராளமான மக்கள் படுகாயமடைந்துள்ளதாகவும் லெபனானின் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.




இந்த நிலையில், அப்பகுதியில் செயல்பட்டு வந்த ஹமாஸ் கிளர்ச்சிப்படையின் பயிற்சி முகாமின் மீது தாக்குதல் நடத்தியதாகக் குற்றம்சாட்டிய இஸ்ரேல் ராணுவம், ஹமாஸ் அமைப்பு எங்கிருந்து செயல்பட்டாலும் அங்கு தாக்குதல் நடத்தப்படும் எனக் கூறியுள்ளது.

இருப்பினும், இஸ்ரேல் சிடன் நகரத்தில் எந்தவொரு பயிற்சி முகாமும் செயல்படவில்லை என ஹமாஸ் அமைப்பினர் இந்தக் குற்றச்சாட்டை மறுத்துள்ளனர்.

மேலும், இந்தத் தாக்குதலானது அங்குள்ள விளையாட்டுத்திடலின் மீது நடத்தப்பட்டதாகவும் தெரிவித்துள்ளனர்.

முன்னதாக, லெபனானில் கடந்த 2 ஆண்டுகளாக இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதல்களில் ஹிஸ்புல்லா மற்றும் ஹமாஸ் அமைப்பைச் சேர்ந்த ஏராளமான முக்கிய அதிகாரிகள் கொல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## மெலிசா புயலால் 4.77 லட்சம் குழந்தைகளின் கல்வி பாதிப்பு



**நியூயார்க், நவ.20:**

மெலிசா புயலின் காரணமாக கரீபியன் தீவுப் பகுதிகளில் கியூபா, ஹைதி மற்றும் ஜமைக்காவில் சுமார் 4,77,000 குழந்தைகளின் பள்ளிக் கல்வி பாதிக்கப்பட்டுள்ளது. ஐ.நா. பொதுச் செயலாளரின் செய்தித் தொடர்பாளரான ஸ்டீஃபன் டுஜாரிக் பேசிய போது புயலின் காரணமாக பல பள்ளிக்கூட கட்டடங்கள் சேதமடைந்து மூடப் பட்டுள்ளன. இதனால் குழந்தைகள் கல்வியை தொடர முடியாத நிலையில் உள்ளன. எனினும் தற்காலிக இடங்களில் அவர்களுக்கு கல்வி கற்றுக்கொடுக்கும் பணியும் நடைபெறுகிறது என அவர் தெரிவித்துள்ளார்.

## காலநிலை மாற்றத்தால் உலகம் கதறுகிறது: போப் லியோ

வெள்ளம், வறட்சி, புயல், வெப்ப நிலை அதிகரிப்பது ஆகியவற்றால் உலகம் கதறுகிறது என காலநிலை மாற்றம் தொடர்பான உச்சி மாநாட்டில் போப் லியோ கூறியுள்ளார். மேலும் காலநிலை மாற்றங்களால் ஒவ்வொரு மூன்று நபர்களில் ஒருவர் அதிக பாதிப்பை சந்திக்கிறார். இம்மக்களைப் புறக்கணிப்பது மனிதநேயத்தைப் புறக்கணிப்ப தற்கு இணையானது. காலநிலை மாற்றத்தை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுப்ப தற்கு சில தலைவர்களிடம் விருப்பம் இல்லை என்றும் விமர்சித்துள்ளார்.

## பாகிஸ்தானில் பயங்கரவாதிகள் சுட்டுக்கொலை



ஆப்கானிஸ்தானின் எல்லையில் அமைந்துள்ள கைபர் பக்துன்வா மாகா ணத்தின் இரு மாவட்டங்களில் பாக் ராணு வம் நடத்திய தேடுதல் வேட்டையில் பாகிஸ்தா னில் இருந்து செயல்படும் தலிபான் அமைப்பைச் சேர்ந்த பயங்கரவாதிகள் 15 பேர் சுட்டுக்கொல்லப்பட்டதாக தெரிவித்துள்ளது. ஆப்கானிஸ்தானில் ஆட்சி நடத்தி வரும் தலிபான்களும் பாகிஸ்தானில் உள்ள தலிபான் அமைப்பும் திட்டமிட்டு இந்த தாக்குதல்களை அரங்கேற்றுவதாக குற்றம் சாட்டப்படுகிறது.

## உத்கியாக்விக் நகருக்கு சூரியன் பிரியாவிடை: இனி 65 நாள்கள் முழுவதும் இருள்தான்!

**வாஷிங்டன், நவ.20:**

அமெரிக்காவின், அலாஸ்கா மாகாணத்தில் அமைந்துள்ள உத்கியாக்விக் நகருக்கு சூரியன் பிரியாவிடை கொடுத்துவிட்டது. இனி 65 நாள்கள் முழுவதும் இருள்தான், ஜன.23ஆம் தேதிதான் சூரிய உதயத்தைக் காண முடியுமாம்.



வட அமெரிக்காவின் அலாஸ்கா மாகாணத்தில் அமைந்துள்ள உத்கியாக்விக் நகரம் தன்னுடைய துருவ இரவு காலத்துக்குள் நுழைந்திருக்கிறது. இங்கிருக்கும் மக்கள் 2026ஆம் ஆண்டு ஜனவரி 22 வரை சூரிய உதயத்தைக் காண முடியாது. பகல் நேரத்திலும் கடுமையான இருள் சூழ்ந்திருக்கும். இந்த ஆண்டில், உத்கியாத்கிக் நகரின் கடைசி சூரிய அஸ்தமனம் நவ. 18ஆம் தேதி செவ்வாயன்று மாலை நிகழ்ந்துள்ளது. இனி 65 நாள்களுக்கு துருவ இரவு காலம்.

இந்த மிகச் சிறிய நகரம், ஆர்க்டிக் பெருங்கடலின் கரையில் 300 மைல்கள் தொலைவில் உள்ளது. பூமியின் 71.17 டிகிரி வட் அட்சரேகையில் அமைந்துள்ளதால் இந்த நகரின் அடிவானத்துக்குக் கீழே சூரியன் வரும். இதுவே துருவ இரவு நேரிடக் காரணம். சில வேளைகளில் மட்டும், அடிவானத்தின் கீழ் இருந்து இந்நருக்கு சற்று வெளிச்சம் கிட்டுமாம். இந்த காலக்கட்டத்தில் அவ்வப்போது வெப்பநிலை பூஜ்யத்துக்குக்கீழே இறங்கும். இங்கு வாழும் 5000 மக்களின் இயல்பு வாழ்க்கை நிச்சயம் பாதிக்கப்படும். இந்த இருள் நிரந்தரம் இல்லாவிட்டாலும், சூரியனைக் காண முடியாமல், பகல் வேளையிலும் இருள் சூழ்ந்திருக்கும் என்பதால் மக்கள் இதனைப் பழகிக் கொள்ள சில நாள்கள் எடுத்துக் கொள்வார்கள். ஆனால், இந்த இயற்கைக்கு அவர்கள் பல ஆண்டுகளாக தயாராகவே உள்ளனர். மின் விளக்கு வெளிச்சத்தால், அந்த நகரம் 24 மணி நேரமும் வழக்கம் போல இயங்குவதற்கு தடையேதும் இல்லை. ஆனால், இதிலும் ஒரு ஆச்சரியம் உள்ளது. இங்கு மே மாத மத்தியில் நிலைமை தலைகீழாகிவிடும். காரணம், சூரியன் மறையவே மறையாது. ஆகஸ்ட் வரை இப்படித்தான். இதன் பெயர் நள்ளிரவு சூரியன். முழு நாள்களும் பகலாகவே இருக்கும். இதற்கு முக்கிய காரணம், பூமி 23.5 டிகிரி சாய்ந்த கோணத்தில் சுழல்வதே. சூரியனின் சுழற்சின்போது, ஆண்டின் குறிப்பிட்ட காலத்தில் பூமியின் வடதிசை பகுதிகளில் சூரியன் முழுவதுமாக அடிவானத்துக்குக் கீழ் சென்றுவிடுவதும், ஒரு குறிப்பிட்ட காலத்தில் பூமியின் மேல் பகுதியில் காணப்படுவதும் இயற்கையாக நிகழும் நிகழ்வாகும்.

## ரஷ்யாவுடன் வர்த்தகம் செய்தால் 500 சதவிகிதம் வரி

ரஷ்யாவுடன் வர்த்தகம் செய்யும் இந்தியா உள்ளிட்ட நாடுகளின் மீது கூடுதலாக 500 சதவிகிதம் வரி விதிக்கப்போவதாக டிரம்ப் மிரட்டல் விடுத்துள்ளார். மூன்று ஆண்டுகளுக்கு மேலாக நடைபெறும் உக்ரைன்-ரஷ்யா போரை நிறுத்துவதற்கு ரஷ்யாவின் பொரு ளாதாரத்தை சீர்குலைக்கும் வகையில் சில நடவடிக்கைகளை டிரம்ப் முன்னெடுத்து வருகிறார். அதே வேளையில் போர் தொடரும் வகையில் ஐரோப்பிய நாடுகளின் மூலமாக உக்ரைனுக்கு ஆயுதங்களை கொடுத்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

## வெள்ளை மாளிகையில் பிரமாண்ட விருந்தளித்த டிரம்ப்!



அமெரிக்கா சென்றுள்ள சௌதி இளவரசர் முகமது பின் சல்மான், கால்பந்து ஜாம்பவான் ரொனால்டோ உள்ளிட்டோருக்கு அதிபர் டொனால்ட் டிரம்ப் வெள்ளை மாளிகையில் செவ்வாய்க்கிழமை இரவு விருந்தளித்தார்.

ரியாத் மற்றும் வாஷிங்டன் இடையேயான உறவை மேலும் வலுப்படுத்தும் விதமாக அமெரிக்கா சென்றுள்ள சௌதி அரேபியாவின் பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மானுக்கு, அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் சிறப்பான வரவேற்பு அளித்தார்.

அங்கு செவ்வாய்க்கிழமை இரவு நடைபெற்ற மிகப் பிரமாண்டமான விருந்து நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டு, அதில் டெஸ்லா நிறுவனர் எலான் மஸ்க், ஆப்பிள் தலைமைச் செயல் இயக்குநர் டிம் குக் உள்ளிட்ட உலகில் உள்ள மிகப்பெரிய தொழிலதிபர்கள், அமெரிக்க துணை அதிபர் ஜே.டி. வான்ஸ், போர்ச்சுகல் நாட்டைச் சேர்ந்த கால்பந்து ஜாம்பவான் ரொனால்டோ உள்பட பலர் கலந்து கொண்டனர். அவர்களைத் தவிர்த்து ஃபிஃபா தலைவர் கியானி இன்பான்டினோ, செவ்ரான் தலைமை நிர்வாகி மைக் விர்த், பிளாக்ஸ்டோன் இணை நிறுவனர் ஸ்டீபன் ஸ்வார்ஸ்மேன், ஜெனரல் மோட்டார்ஸ் தலைமை நிர்வாகி மேரி பார்ரா, ஃபோர்டு மோட்டார் நிர்வாகத் தலைவர் வில்லியம் கிளே ஃபோர்டு ஜூனியர், டொனால்ட் டிரம்ப் ஜூனியர் உள்ளிட்டோரும் இந்த விருந்தில் கலந்துகொண்டனர்.

## ஹசீனா அறிக்கைகளை ஒளிபரப்பக் கூடாது: ஊடகங்களுக்கு வங்கதேச அரசு எச்சரிக்கை

**டாக்கா, நவ.20:**

வங்கதேசத்தில் கடந்த ஆண்டு மாணவர்கள் போராட்டத்தின்போது நடைபெற்ற வன்முறை சம்பவங்கள் தொடர்பாக, அப்போது பிரதமராகப் பதவி வகித்த ஷேக் ஹசீனாவுக்கு மரண தண்டனை விதித்து வங்கதேசத்தில் உள்ள சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம் திங்கள்கிழமை தீர்ப்பளித்தது. இதனால் நாட்டில் பதற்றமான சூழல் நிலவும் நிலையில், தேசப் பாதுகாப்பு மற்றும் சட்ட ஒழுங்கு நிலை கருதி இடைக்கால அரசு இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

இதுகுறித்து வங்கதேச தேசிய இணையப் பாதுகாப்பு முகமை வெளியிட்டசெய்திக் குறிப்பில், 'மரண தண்டனை விதிக்கப்பட்ட ஷேக் ஹசீனாவின் அறிக்கைகள் வன்முறையைத் தூண்டி குற்றச் சம்பவங்களுக்கு வழிவகுக்கும். அவரது நடவடிக்கைகள் சமூக நல்லிணக்கத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் உள்ளன.

ஆனாலும் சில ஊடகங்கள் மற்றும் செய்தி நிறுவனங்கள் அவரது அறிக்கைகளை ஒளிபரப்புகின்றன. தண்டனை விதிக்கப்பட்ட நபர்கள் சார்ந்த செய்தியை வெளியிட்டால் அதை உடனடியாக முடக்கி சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க இணையப் பாதுகாப்பு அவசர சட்டத்தில் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

சட்டவிரோத அமைப்புகள் மற்றும் போலி அடையாளங்கள் மூலம் வெறுப்புணர்வு, வன்முறையைத் தூண்டும் செயல்களில் ஈடுபடுவோருக்கு 2 ஆண்டுகள் சிறைத் தண்டனை மற்றும் ரூ.7.20 லட்சம் அபராதம் விதிக்கப்படும் என எச்சரித்துள்ளது.

## ஈக்வடார்: பேருந்து விபத்தில் 21 பேர் உயிரிழப்பு



**பெய்ரூட், நவ.20:**

ஈக்வடாரில் பள்ளத்துக்குள் பேருந்து விழுந்து ஏற்பட்ட விபத்தில் 21 பேர் உயிரிழந்தனர்.

இது குறித்து அதிகாரிகள் கூறியதாவது:

மத்திய ஈக்வடார் நகரங்களான குவாரந்தா - அம்பாட்டோ இடையிலான சாலையில் பயணிகளுடன் பேருந்து ஒன்று பள்ளத்துக்குள் விழுந்தது. இதில் 21 பேர் உயிரிழந்தனர்; 40 பேர் காயமடைந்தனர்.

விபத்துக்கான காரணம் இதுவரை தெரிவிக்கப்படவில்லை. இது தொடர்பாக விசாரணை தொடங்கப்பட்டுள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஈக்வடாரில் ஒவ்வொரு நான்கு மணி நேரத்துக்கும் ஒருவர் சாலை விபத்தில் உயிரிழப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு ஜனவரி முதல் மே வரை மட்டும் 4,756 சாலை விபத்துகளில் 565 பேர் உயிரிழந்தனர். கடந்த ஆண்டு சாலை விபத்துகளால் சுமார் 2,300 பேர் உயிரிழந்தனர்; இதில் மூன்றில் ஒரு பங்குக்கும் மேலான விபத்துகள் ஓட்டுநர்களின் அனுபவமின்மை அல்லது அலட்சியம் காரணமாக நேர்ந்தவை என்று அதிகாரபூர்வ தரவுகள் தெரிவிக்கின்றன.

## 'ஏஐ சொல்வதை கண்மூடித்தனமாக நம்பவேண்டாம்!': சுந்தர் பிச்சை




**வாஷிங்டன், நவ.20:**

செயற்கை நுண்ணறிவு (ஏஐ) செயலிகள் சொல்வதையெல்லாம் மக்கள் "கண்மூடித்தனமாக நம்பக் கூடாது" என்று கூகுளின் தாய் நிறுவனமான ஆல்ஃபாபெட்டின் தலைமை செயல் அதிகாரி சுந்தர் பிச்சை அறிவுறுத்தியுள்ளார்.

இது குறித்து பிபிசி-க்கு அளித்த பேட்டியில் அவர் கூறியதாவது:

ஏஐ செயலிகள் தவறுகள் செய்வதற்கான வாய்ப்புகள் உள்ளன. மக்கள் அந்தச் செயலிகளை மற்ற செயலிகளுடன் சேர்த்துப் பயன்படுத்த வேண்டும். அதே போல், ஒரே ஏஐ தொழில்நுட்பத்தை மட்டும் நம்பி இருக்கக் கூடாது. அதனால்தான் மக்கள் கூகுள் தேடுதல் தளத்தையும் பயன்படுத்துகிறார்கள் படைப்பாற்றலுடன் ஏதாவது எழுத விரும்பினால் அதற்கு ஏஐ கருவிகள் உதவும். ஆனால் இந்தக் கருவிகளை அவை சிறப்பாகச் செய்யும் சிலவற்றுக்கு மட்டும் பயன்படுத்தக் கற்றுக்கொள்ள வேண்டும். அவை சொல்வதையெல்லாம் கண்மூடித்தனமாக நம்பக் கூடாது. மிகத் துல்லியமான தகவல்களைத் தருவதற்காக நாங்கள் மிகுந்த உழைப்பைச் செலுத்துகிறோம். ஆனால், தற்போதைய ஏஐ தொழில்நுட்பங்கள் அதிநவீனமானதாக இருந்தாலும் சில தவறுகளை செய்கின்றன.

தொழில்நுட்பம் எவ்வளவு விரைவாக வளர்கிறதோ, அதற்கேற்ப அதனால் ஏற்படும் தீங்குகளைத் தடுக்கும் பாதுகாப்பு நடவடிக்கைகளையும் வேகமாக உருவாக்க வேண்டும். அதனால்தான் எங்கள் நிறுவனம் ஏஐ பாதுகாப்புக்கான முதலீட்டையும் ஏஐ தொழில்நுட்ப வளர்ச்சிக்கான முதலீட்டுக்கு ஏற்ப அதிகரித்து வருகிறது. உதாரணமாக, ஒரு படம் ஏஐ-யால் உருவாக்கப்பட்டதா என்பதைக் கண்டறிய உதவும் தொழில்நுட்பத்தை நாங்கள் இலவசமாக அளிக்கிறோம்.

ஏஐ போன்ற சக்திவாய்ந்த தொழில்நுட்பத்தை ஒரே ஒரு நிறுவனம் மட்டும் வைத்திருக்கக் கூடாது. ஒரே ஒரு நிறுவனம் மட்டும் ஏஐ-ஐ உருவாக்கி அனைவரும் அதையே பயன்படுத்த வேண்டிய நிலை வந்தால் அது மிகவும் கவலைக்குரியது என்று அவர் எச்சரித்தார்.